# தமிழரசு

விலை
ரூ.10

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

அக்டோபர்
2006
















மரத்தை மக்கள் வளர்த்தால்
மரம் மக்களை வளர்க்கும்

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை.

நூலறிவுடன் இயற்கையான மதி நுட்பமும் உள்ளவர்களுக்கு முன்னால் எந்த சூழ்ச்சிதான் எதிர்த்து நிற்க முடியும் ? முடியாது.

**– கலைஞர்**
திருக்குறள் உரையிலிருந்து...


# தமிழரசு

செய்தி – மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2037
புரட்டாசி – ஐப்பசி
அக்டோபர் 2006
மலர் : 38 இதழ் :4


## இந்த இதழில்...


முல்லைப் பெரியாறு அணை குறித்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை – 2

உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் – 20

வேலைவாய்ப்பற்ற இளைஞர்க்கு அரசின் உதவித்தொகை – அரசு ஆணை – 31

அண்ணல் காந்தியடிகள் வாழ்வில்.... – 36

மரங்களின் கதை – சிறுகதை – 38

செய்தி சொல்லும் சித்திரங்கள் – 54

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – அரசு ஆணை – 65


**முதலாம் பக்க அட்டை**

அண்ணல் காந்தியடிகளின் 138ஆவது பிறந்த நாள் விழா (2.10.2006)

**இரண்டாம் பக்க அட்டை**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தனியார் அறக்கட்டளை சார்பாக ஏழு இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார். (15.10.2006)


ஆசிரியரும் வெளியிடுபவரும் : **சி.கோசலராமன்,** இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி – மக்கள்தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு,
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது. தமிழரசு அலுவலகம் , ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை – 600 002. தொலைபேசி : 25368926 / 25364906 தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu2@hotmail.com இணைய தளம் : www.tn.gov.in

# எந்தவொரு நதிநீர்ப் பிரச்சினையிலும் தமிழகம் அண்டை மாநிலங்களுடன் சுமுகமான அணுகுமுறையையே கடைபிடித்துள்ளது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
கலைஞர் **மு. கருணாநிதி** அவர்கள்



**மா**ண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களே! அமைச்சர் பெருமக்களே! தமிழகத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களே! நண்பர்களே! தலைமைச் செயலாளர் அவர்களே! உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கம்.

எனது அழைப்பினையேற்று இங்கே வருகை தந்துள்ள உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முல்லை பெரியாறு அணையின் நீர் மட்டத்தை அதன் முழு கொள்ளளவான

152 அடிக்கு மீண்டும் உயர்த்துவது குறித்த பிரச்சினை – தமிழகத்திற்கும் கேரள மாநிலத்திற்கும் இடையே நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்து வருகின்றது.

தற்பொழுது உச்ச நீதி மன்றத்தின் கருத்துக்கேற்ப நம்முடன் பேச்சுவார்த்தை நடத்திட மாண்புமிகு கேரள முதலமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார். இது குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களின் கருத்தினை கேட்டு அறிந்து கொள்ள இக்கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

பெரியாறு அணை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அணையாகும். ஆசிய கண்டத்தில் முதன்முதலாக ஒரு ஆற்றுப்படுகையில் ஓடும் நீரை பயனுள்ள வகையில் மற்றொரு ஆற்றுப்படுகைக்கு திருப்புவதற்காக கட்டப்பட்ட அணையாகும் பெரியாறு அணை. இந்த அணை கர்னல் திரு. ஜே. பென்னி குயிக் என்னும் ஆங்கிலேய பொறியாளரால் வடிவமைக்கப்பட்டு பல இயற்கை இடர்ப்பாடுகளுக்கிடையே 1895ஆம் ஆண்டில் மிகச் சிறப்பாகக் கட்டி முடிக்கப்பட்டது. இச்சீரிய திட்டத்தைச் செயல்படுத்தியதற்காக கர்னல் திரு. ஜே. பென்னிகுயிக் அவர்களைப் போற்றிடும் வகையில் மதுரை பொதுப்பணித்துறை வளாகத்தில் அவரது திருவுருவச் சிலையினை அமைத்து 15.6.2000 அன்று நான் திறந்து வைத்ததை இங்கே நினைவு கூர்கிறேன்.

திருவாங்கூர் அரசருக்கும், அப்போதைய சென்னை மாகாண அரசுக்கும் இடையே 29.10.1886–இல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் பெரியாறு திட்டம் செயல்படுத்தப்பட்டது. 1979 –ஆம் ஆண்டில் கேரள அரசு, பெரியாறு அணையின் பாதுகாப்பு பற்றி சில அச்சங்களை எழுப்பியது. மத்திய நீர்வள குழுமம் இந்த அணையினை 23.11.1979 அன்று ஆய்வு செய்து; அவசரகால, இடைக்கால, நீண்டகால நடவடிக்கைகள் என்ற மூன்று விதமான வலுப்படுத்தும் பணிகளை மேற்கொண்டால்; அணை ஒரு புது அணையினை ஒத்து செயல்படும் என பரிந்துரைத்ததின் பேரில் தமிழ்நாடு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. அவசரகாலப் பணிகள் மற்றும் இடைக்காலப் பணிகளை செய்து முடிக்கும் பொருட்டு அணையின் நீர் மட்டம் அதன் முழு நீர்மட்ட அளவான 152 அடியிலிருந்து தற்காலிகமாக 136 அடியாக குறைக்கப்பட்டது. அதனையொட்டி தமிழக அரசு வரைபடங்களையும், திட்ட விவரங்களையும் மத்திய நீர்வளக் குழுமத்திற்கும் கேரள அரசிற்கும் அனுப்பி அவர்களின் ஒப்புதலைப் பெற்றுத்தான், அவசர காலப் பணிகள் மற்றும் இடைக்காலப் பணிகளைத் தொடங்கியது. இப்பணிகள் செய்து முடிக்கப்பட்ட பின்னர், அணையின் நீர்மட்டத்தை 145 அடிக்கு உயர்த்தலாம் என மத்திய நீர்வள குழுமம் 29.4.1980லேயே பரிந்துரைத்தது.

பின்னர், மத்திய நீர்வள குழுமம் சிற்றணையை (பேபி டேம்) பலப்படுத்துதல் மற்றும் கைப்பிடிச் சுவர் இரண்டு அடி உயர்த்துவது போன்ற சில கூடுதலான பணிகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரை செய்தது. ஆனால், கேரள அரசு ஒத்துழைப்பு தராததால் இப்பணிகள் முழுமையாக நிறைவேற்றப்படாமல் உள்ளன. அணையைப் பலப்படுத்தும் பணிகள் முடிந்த நிலையிலும், பெரியாறு அணையின் நீர்மட்டம் 136 அடியிலேயே வைக்கப்பட வேண்டும் என்று கேரள அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இதுகுறித்து கேரளா மற்றும் தமிழகத்திற்கிடையே பலமுறை பேச்சுவார்த்தைகள் நடந்த போதிலும், எந்த விதமான ஒருமித்த கருத்தும் எட்டப்படவில்லை.

திருவனந்தபுரத்தில் 13.8.1998 அன்று அமைச்சர்கள் அளவிலான கலந்துரையாடல் கூட்டத்தில் – இரு மாநிலங்களும் தொழில்நுட்பக் குழுக்களை அமைப்பதென்றும்; அவை முல்லை பெரியாறு அணையைப் பார்வையிட்டு விவாதித்து அறிக்கைகளை அளிப்பது என்றும்;

அவற்றின் அடிப்படையில் முதலமைச்சர்கள் அளவில் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படலாமென்றும் முடிவெடுக்கப்பட்டது. அதன்படி தமிழ்நாடு தொழில்நுட்பக் குழு தன் அறிக்கையை நவம்பர் 1998–இல் அளித்தது. ஆனால் கேரள அரசு, தொழில்நுட்ப அறிக்கை தருவதில் பெரும் சுணக்கம் காட்டி, காலம் தாழ்த்தி வந்தது. இறுதியில், 28.1.2000 அன்றுதான் தொழில் நுட்ப அறிக்கைகள் பரிமாற்றம் செய்யப்பட்டன.

இதற்கிடையே, கேரள உயர் நீதிமன்றத்திலும், சென்னை உயர் நீதிமன்றத்திலும் ஒரு சில தனி நபர்கள் ரிட் மனுக்களை தாக்கல் செய்தனர். கேரளாவைச் சார்ந்த முல்லை பெரியாறு சுற்றுச்சூழல் பாதுகாப்புக்குழு என்ற அமைப்பு, பெரியாறு அணையில் 136 அடிக்குமேல் நீரைத் தேக்கிவைக்க அனுமதி அளிக்கக்கூடாது எனக் கோரி ஒரு ரிட் மனுவினை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. கேரளா மற்றும் சென்னை உயர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்த ரிட் மனுக்களை உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றக் கோரி – தமிழ்நாடு அரசு டிசம்பர் 1998–இல் மனுக்களை தாக்கல் செய்தது.

**பெரியாறு அணை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அணையாகும். ஆசிய கண்டத்தில் முதன்முதலாக ஒரு ஆற்றுப்படுகையில் ஓடும் நீரை பயனுள்ள வகையில் மற்றொரு ஆற்றுப்படுகைக்கு திருப்புவதற்காக கட்டப்பட்ட அணையாகும் பெரியாறு அணை.**

இதற்கிடையில், தமிழகத்தின் நலனை கருத்தில் கொண்டு அன்றைய கேரள முதலமைச்சர் திரு. ஈ.கே. நாயனார் அவர்களுடன் திருவனந்தபுரத்தில் 5.4.2000 அன்று நான் பேச்சுவார்த்தை மேற்கொண்டேன். அப்போது தமிழக அரசின் நிலையை எடுத்துரைத்த போதிலும், முல்லை பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்து, மேலும் மேலும் பல ஆதாரமற்ற அச்சங்களை எழுப்பி நீர் மட்டத்தை 136 அடிக்கு மேல் உயர்த்துவதற்கு உடன்பாடு இல்லை என்று கேரள அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டதால், இந்த பேச்சுவார்த்தையிலும் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வழிவகை செய்யுமாறு 28.4.2000 அன்று உச்ச நீதிமன்றம் மத்திய அரசிற்கு பரிந்துரை செய்தது. இதனடிப்படையில், புதுடில்லியில் 19.5.2000 அன்று மத்திய நீர் வள ஆதார அமைச்சர் கூட்டிய கூட்டத்தில் நானும், தமிழக அமைச்சர்களும் கலந்து கொண்டு தமிழ்நாட்டின் நிலையை விரிவாக எடுத்துரைத்தோம். இந்தக் கூட்டத்திலும் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. எனவே, மத்திய அரசின் நீர் வள ஆதார அமைச்சர், ஒரு வல்லுநர் குழுவை அமைத்து, அந்தக் குழு மார்ச் 2001–இல் மத்திய அரசுக்கு அளித்த அறிக்கையில் முல்லை பெரியாறு அணையின் நீர் மட்டத்தை தற்போதுள்ள 136 அடியிலிருந்து முதற்கட்டமாக 142 அடி வரை உயர்த்தலாம் என்றும், சிற்றணையை (Baby Dam) பலப்படுத்தும் பணி முடிந்த பின்னர் முழு நீர் மட்ட அளவான 152 அடிக்கு உயர்த்துவது பற்றி ஆய்வு செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

உச்ச நீதிமன்றம் 27.2.2006 அன்று தனது இறுதித் தீர்ப்பை வழங்கியது. இத்தீர்ப்பில் அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடிக்கு உயர்த்த உச்சநீதி மன்றம் அனுமதி வழங்கியதுடன், அணையைப் பலப்படுத்தும் எஞ்சியுள்ள பணிகளை மேற்கொள்ளலாம் எனவும்,

இப்பணிகளை மேற்கொள்வதற்கு கேரள அரசு முழு ஒத்துழைப்பு அளிப்பதோடு தமிழக அரசிற்கு கேரள அதிகாரிகள் எந்த இடையூறும் ஏற்படுத்தக் கூடாது என்றும் உத்தரவு பிறப்பித்தது.

(We Permit State of Tamil Nadu to carry out further strengthening measures as suggested by CWC and hope that State of Kerala would cooperate in the matter. The State of Kerala and its officers are restrained from causing any obstruction... The Writ petition and the connected matters are disposed of by permitting the water level of the Mullaiperiyar Dam being raised to 142 ft.)

இந்தத் தீர்ப்பை எதிர்த்து 3.4.2006 அன்று கேரள அரசு தாக்கல் செய்த மறுசீராய்வு மனுவினை 27.7.2006–இல் உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

கேரள அரசு, ஏற்கெனவே இயற்றியுள்ள "கேரள நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள பாதுகாப்பு சட்டம் 2003" –க்கு (Kerala Irrigation and Water Conservation Act, 2003) 2006 மார்ச் மாதத்தில் செய்த சட்டத் திருத்தத்தில் பெரியாறு அணையின் உச்சக்கட்ட நீர் மட்டம் 136 அடி என்று உண்மைக்குப் புறம்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், "கேரள அணைகள் பாதுகாப்புக்குழு" என்ற அமைப்பை நியமிப்பதற்கும், கேரளாவிலுள்ள எந்த அணையை வேண்டுமானாலும் பார்வையிடவும், எந்த அணையின் நீர் மட்டத்தைக் குறைக்கவும், பாதுகாப்பு குறித்து ஆலோசனைகளை வழங்கவும், அணையின் இயக்கத்தையே நிறுத்துவதற்கும் (Decommissioning of Dam) இந்த குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த சட்டத் திருத்தத்தினை எதிர்த்து – கடந்த ஆட்சியில் – உச்சநீதிமன்றத்தில் 31.3.2006–இல் தொடரப்பட்ட சிவில் வழக்கில் (Civil Suit O.S.3/2006) பின்வரும் கோரிக்கைகள் வைக்கப்பட்டன :–

அ. கேரள நீர்ப்பாசன மற்றும் நீர்வள பாதுகாப்பு சட்டம் 2003இல் திருத்தங்களைச் செய்து கேரள அரசு மார்ச் 2006–இல் சட்டப்பேரவையில் இயற்றிய திருத்தச் சட்டம்; முல்லை பெரியாறு அணையைப் பொறுத்தமட்டில் அரசியல் சாசனத்திற்குப் புறம்பானது என்று உத்தரவிட வேண்டும்.

ஆ. 2006–இல் கேரள அரசு ஏற்படுத்திய திருத்தங்களின் அடிப்படையில் தமிழ்நாடு முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டத்தினை 142 அடிக்கு உயர்த்துவதற்கும், அணையினை வலுப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுவதற்கும், கேரளா எந்தவித இடையூறையும் செய்யக்கூடாது என்று நிரந்தர தடையாணையைப் (Permanent Injunction) பிறப்பிக்க வேண்டும்.

முன்பிருந்ததைப் போல பெரியாறு அணையின் முழு நீர்மட்டம் 152 அடியாக இருந்தால் அணையின் நிகர கொள்ளளவு 10.57 டி.எம்.சி.யாக இருக்கும். அது தற்போது 136 அடியாகக் குறைக்கப்பட்டதால் அணையின் கொள்ளளவு 6.12 டி.எம்.சி. ஆகக் குறைந்துள்ளது. அணையின் நீர்மட்டம் 142 அடி என உயர்த்தப்படுமானால் அணையின் கொள்ளளவு 7.67 டி.எம்.சி.யாக இருக்கும். அதாவது, 6 அடி உயர்த்தினால் 1.55 டி.எம்.சி. தண்ணீர்தான் கூடுதலாகச் சேமித்து வைக்க முடியும். ஆனால், பெரியாறு அணைக்குக் கீழேயுள்ள கேரள மாநிலத்தின் இடுக்கி அணையின் மொத்த கொள்ளளவு 70 டி.எம்.சி. தண்ணீர் ஆகும். பெரியாறு அணையின் தண்ணீர் கொள்ளளவோடு இடுக்கி அணையின் தண்ணீர் கொள்ளளவை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பெரியாறு அணை மிகமிகச் சிறிய அணைதான் என்பதை எல்லோரும் புரிந்து கொள்ளலாம்.

இருப்பினும் பெரியாறு அணையின் பாதுகாப்பைக் கருதி, பேபி டேம் பலப்படுத்திட மத்திய நீர் வள குழுமம் பரிந்துரைத்தது. அணையின் பாதுகாப்புக்கு ஆபத்து என்று ஓங்கிக் குரல் கொடுக்கும் கேரளா பேபி டேம் பலப்படுத்தும் பணிக்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமல்லவா? மாறாக,

தடைகளையும்
இடையூறுகளையும்
ஏற்படுத்தி வருகிறது.

மாண்புமிகு கேரள முதலமைச்சர் அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் 31.8.2006 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமரைச் சந்தித்து ஒரு கோரிக்கை மனுவை அளித்துள்ளார் என்பதனை நீங்கள் அறிவீர்கள். நான் அறிந்த வகையில் அந்த மனுவில் முல்லை பெரியாறு அணை குறித்து தவறான தகவல்களே கொடுக்கப்பட்டுள்ளன.

உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த வழக்கு 25.9.2006 அன்று விசாரணைக்கு வந்த போது; இரு தரப்பு வாதங்களையும் கருத்தில் கொண்டு, இரண்டு மாநில அரசுகளும் தனியாகவோ அல்லது மத்திய அரசின் தலையீட்டுடனோ, முடியுமானால் இப்பிரச்சினை குறித்து பேச்சு வார்த்தை மேற்கொள்ளுமாறும், இவ்வழக்கை நவம்பர் 2006–இல் மீண்டும் விசாரணைக்காக பட்டியலிடுமாறும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு உச்ச நீதிமன்ற கருத்தின் அடிப்படையில் கேரள முதல்வர் பேச்சுவார்த்தைக்காக 3.10.2006 அன்று எனக்கு கடிதம் எழுதியுள்ளார்.

எந்த ஒரு நதிநீர்ப் பிரச்சினையாக இருந்தாலும் தமிழகம் அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களுடன் சுமுகமான அணுகுமுறையையே இதுவரை கடைபிடித்து வந்துள்ளது. பெரியாறு அணைப் பிரச்சினை காரணமாக சுமார் 27 ஆண்டுகாலமாக பல இழப்புகளை நாம் சந்தித்து வருகிறோம். நம்மை அடிமைப்படுத்தி ஆண்டு வந்த அன்னியரான ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே – வறட்சிக்குள்ளாகும் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களை வறட்சியின் கோரப் பிடியிலிருந்துமீட்டு அம் மாவட்ட மக்களுக்கு வாழ்வாதாரத்தை உருவாக்கிப் பாதுகாப்பு தரப்பட்டிருந்தது. ஆனால், நம்மை நாமே ஆண்டு கொண்டிருக்கும் சுதந்திரத் திருநாட்டில் – தென் மாவட்ட மக்களுக்கு ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்ட வாழ்வாதாரம் – மறுக்கப்பட்டு வருவதுதான் வரலாற்றுச் சோகமாகும். ஒருபுறம் பிரச்சினைகளை ஒன்றன்பின் ஒன்றாக எழுப்பிக் கொண்டு, மறுபுறம் பேச்சு வார்த்தை நடத்துவது என்பது உரிய பயனைத் தரக் கூடியதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

முல்லை பெரியாறு அணை குறித்த வழக்கு உச்சநீதி மன்றத்தில் வரும் நவம்பர் மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள விருப்பதால், இப்பிரச்சினை பற்றி நாம் அனைவரும் ஒருமித்த கருத்துக்களின் அடிப்படையில் முடிவு செய்யலாம். எனவே, தங்கள் கருத்துக்களை சுருக்கமாக எடுத்துக் கூறுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், உச்ச நீதிமன்ற கருத்தின் தொடர்ச்சியாக கேரள முதலமைச்சர் விடுத்துள்ள அழைப்பினை ஏற்று பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு தமிழகத்தின் நிலையை எடுத்துரைக்கலாமா என்பது பற்றியும், அல்லது இப்பிரச்சினை குறித்து விவாதிக்க மத்திய அரசை அணுகலாமா என்பது பற்றியும், அல்லது நாம் 27 ஆண்டுக் காலமாக எவ்வளவு இடையூறுகளையும் இழப்புகளையும் சந்தித்து வருகிறோம் என்பதை உச்சநீதிமன்றத்திலேயே விளக்கி 27.2.2006 அன்று உச்ச நீதிமன்றம் வழங்கிய உத்தரவினை நடைமுறைப்படுத்த ஆணையிட வேண்டுமென்று கோரலாமா என்பது பற்றியும், அனைத்து அரசியல் கட்சிகளின் மேலான கருத்துக்களை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

வணக்கம்.

★

(23.10.2006 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் முல்லை பெரியாறு அணை குறித்து நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை)

# ரூ.3,900 கோடி மதிப்பில் ஏரிகள் புனரமைப்புப் பணிகள்

திரு. **துரைமுருகன்**
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

### ❖ நதிகள் இணைப்பு

மத்திய அரசின் தேசிய நீர் மேம்பாட்டு முகமை (NWDA) தீபகற்ப நதிகளான மகாநதி – கோதாவரி– கிருஷ்ணா – பெண்ணாறு – காவிரி – வைகை– குண்டாறு நதிகள் இணைப்புத் திட்டம் பற்றி ஆய்வு செய்து, இந்தத் திட்டம் தொழில்நுட்ப ரீதியாக சாத்தியம் எனக் கூறியுள்ளது.



இந்த மகத்தான திட்டத்திற்கு, விரைந்து செயல் வடிவம் தந்திட வேண்டும் என்பதற்காக முதல் முறையாகவும், முதல் முயற்சியாகவும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் தலைமையில், ஒரிசா, ஆந்திரா மற்றும் சம்பந்தப்பட்ட முதலமைச்சர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி அதன் மூலம் இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்த முயற்சி மேற்கொண்டுள்ளார் என்ற செய்தி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

### ❖ காவிரி டெல்டாவில் கட்டுமானங்களைப் புனரமைத்தல்

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டங்களில் காவிரி டெல்டாவில் உள்ள கட்டுமானங்களை சீரமைத்துப் புனரமைப்பதற்கென ரூ. 400 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளைப் படிப்படியாக மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இப்பணிகளை மேற்கொள்ள மேலும் ரூ. 30 கோடி ஒதுக்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

### நீர்ப்பாசன ஏரிகளைப் புனரமைத்தல்

தமிழ்நாட்டில் மொத்தம் 39,202 பாசன ஏரிகள் உள்ளன. இவற்றில் 10,540 ஏரிகள் பொதுப்பணித் துறையின் பராமரிப்பில் உள்ளன. எஞ்சியுள்ள 28,662 ஏரிகள் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ளன.

தற்போது, மத்திய அரசு, நபார்டு வங்கி மற்றும் மாநில அரசின் நிதி ஆதாரத்துடன் 936 மானாவாரி ஏரிகளில் சீரமைப்புப் பணி நடைபெற்று வருகிறது. பொதுப்பணித் துறையின் பராமரிப்பில் உள்ள மீதமுள்ள ஏரிகளையும், ஊராட்சி ஒன்றிய பராமரிப்பில் உள்ள சுமார் 8,600 பாசன ஏரிகளையும் உலக வங்கி நிதி ஆதாரம் மற்றும் மத்திய அரசு நிதி உதவியுடன் தூர்வாரி முழுமையாகப் புனரமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மதிப்பீடு தோராயமாக ரூ.3,900 கோடியாக அமையும். இதனை 7 ஆண்டுகளில் செயல்படுத்த உத்தேசித்து 2006–2007ஆம் நிதியாண்டிலிருந்து இத்திட்டம் துவங்கப்படும்.

### ❖ காவிரிப் படுகையில் நிரந்தர வெள்ளப் பாதுகாப்புப் பணி

கடந்த ஆண்டு பெய்த பலத்த மழையின் காரணமாக காவிரி, கொள்ளிடம் மற்றும் அதன் உபநதிகளில் வெள்ளம் ஏற்பட்டு கரைகளில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தினால் ஏற்பட்ட உடைப்புகளை நிரந்தரமாக சரிசெய்யவும், கரைகளை உயர்த்தி பலப்படுத்தவும் ரூ. 450 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நபார்டு வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும்.


### ❖ சென்னை மற்றும் புறநகர் பகுதியில் உள்ள ஏரிகளைப் பராமரித்தல்

சென்னை மாநகரைச் சுற்றி அமைந்துள்ள 18 ஏரிகளை சீர்செய்து, நல்ல முறையில் பராமரிக்கும் நோக்கத்துடன் தனித்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. ஏரிகள் செப்பனிடும் பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது. இத்திட்டம் ரூ.4 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும்.

### ❖ காவிரி டெல்டா மாவட்டங்களில் வடிகால்கள் மற்றும் வாய்க்கால்களில் தூர் அகற்றுதல்

இந்த அரசு பொறுப்பேற்றவுடன், மேட்டூர் அணை திறப்பதற்கு முன்பாக ரூ. 10 கோடி மதிப்பீட்டில் காவிரி டெல்டாப் பகுதியில் தூர்வாரும் பணி செய்யப்பட்டது. தொடர்ந்து இந்த ஆண்டு பாசனம் முடிவுற்றவுடன் ஆறுகள் கால்வாய்களை தூர்வார ரூ. 20 கோடி ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பணித்துள்ளார்கள். ★

# 2,230 புதிய பேருந்துகள் இயக்க நடவடிக்கை



திரு. **கே.என்.நேரு**
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்

* போக்குவரத்துக் கழகங்களுக்கு 1,000 புதிய பேருந்துகள் இயக்க அரசு ரூ. 100 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் 1,000 புதிய பேருந்துகள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திடமிருந்து கடன் பெற்று இயக்கப்படும். மேலும், நிலுவையிலுள்ள 230 புதிய பேருந்துகளையும் சேர்த்து மொத்தம் 2,230 புதிய பேருந்துகள் இந்த ஆண்டு இயக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

* சில தனியார் பேருந்துகள் நீதிமன்றம் மூலமாக வழித்தட மாற்றம் பெற்று இயக்கி வருகின்ற காரணத்தால், பேருந்து வசதியற்ற அவ்வழித் தடங்களில், தேவைக்கேற்ப அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக பேருந்து வசதிகள் செய்து தரப்படும்.

* ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எங்கும் நிற்காமல் துரிதமாகப் பயணிகள் செல்லும் வகையில் "Yellow Line" எனப் பெயருடைய புதிய வகை சிறப்புப் பேருந்துகளும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு குறிப்பிட்ட பேருந்து நிறுத்தங்களில் மட்டும் நின்று செல்லக் கூடிய "Blue Line" என்ற பெயருடைய புதிய வகை சிறப்புப் பேருந்துகளும் இயக்கப்படும்.

* சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய நகரங்களில் உள்ள விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்து நிலையங்கள் நவீனமயமாக்கப்பட்டு பயணிகளுக்கு சிறப்பான வசதிகள் செய்து தரப்படும். மேலும், கணினி மூலம் முன்பதிவு (On Line Reservation) வசதி தமிழகத்தின் முக்கிய நகரங்களில் செய்து தரப்படும்.

* விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் தற்பொழுது இயக்கப்படும் 900 பேருந்துகள் 1,000 பேருந்துகளாக அதிகரிக்கப்படும். மேலும், அதிநவீன மிதவை சொகுசுப் பேருந்துகளும் (Ultra Deluxe Air Suspension Bus) இயக்கப்படும்.

* திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு, கூடுதலாக புதிய மண்டலம் ஒன்று தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரத்தின் கீழ் துவக்கப்படும்.

* பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிமுறைகளை விரிவாக மாற்றியமைத்து அதன்படி 5,000 ஆட்டோ ரிக்ஷா அனுமதிகளை மானியத் தொகையுடன் வேலையில்லாத ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள தகுதி வாய்ந்த இளைஞர்களுக்கு ஓட்டுநர் மற்றும் உரிமையாளராக இயக்குவதற்காக வழங்கப்படுவதுடன் 5,000 புதிய அனுமதிச் சீட்டுகளை மானியத் தொகையின்றி பொதுப் பிரிவின் கீழ்வரும் பிற விண்ணப்பதாரர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

* பள்ளிகளுக்கு மாணவர்களை அழைத்து வரும் வாகனங்களான ஆட்டோக்கள், ஷேர் ஆட்டோக்கள், வேன்கள் ஆகிய வாகனங்களில் ஏற்றி வரும் மாணவர்களின் எண்ணிக்கையை முறைப்படுத்தவும், அவ்வாகனங்களுக்கு தக்க போக்குவரத்து நெறிமுறைகளை ஏற்படுத்தவும், அவ்வாகன ஓட்டிகள் சாலை விதிகளை முறையாகக் கடைபிடிக்கவும், பள்ளி, கல்லூரிப் பேருந்துகள் அனைத்திற்கும் ஷெல் ஒயிட் நிற ஒதுக்கீடு செய்து, உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள நெறிமுறைகளின்படி தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

* பெரும் விபத்துகளைத் தடுக்க அனைத்து வாகனங்களின் முகப்பு விளக்குகளின் மையத்தில் கருப்பு வண்ணம் பூசுதல் கட்டாயமாக்கப்படும்.

* ஆட்டோ ரிக்ஷாக்கள் மற்றும் ஷேர் ஆட்டோக்கள் ஆகிய வாகனங்களுக்கு நீல நிற வர்ணம் பூசப்பட வேண்டும் என்பதையும் அவ்வாகனங்களில் "NOT FOR HIRE" (வாடகைக்கு அல்ல) எனத் தெளிவாக எழுதப்பட வேண்டும் என்பதையும் கட்டாயமாக்கப்படும்.

* வாகனங்களின் பதிவெண் தகடுகளை மாற்றியமைத்தல் / திருத்துதல் போன்றவற்றைத் தவிர்க்கும் முறை பற்றி மைய அரசின் நெறிமுறைகளின்படி ஆய்வு நடத்திய பின், தேசிய பாதுகாப்பு நலனைக் காக்கும் வண்ணம் புதிதாகப் பதிவு செய்யப்படும் வாகனங்களுக்கும், ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கும் சென்னை உயர்நீதிமன்றத்தில் தற்போது நிலுவையில் இருந்து வரும் வழக்கினை திரும்பப் பெற நடவடிக்கை எடுத்து, மைய அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டு முறைகளைக் கருத்தில் கொண்டு உயர்பாதுகாப்பு பதிவெண்பலகை தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்துவதற்கு ஒரு புதிய விரிவான திட்டம் மேற்கொள்ளப்படும். ✶



# வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்

- 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 50 புதிய விடுதிகள் இந்த ஆண்டே துவங்கப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
- 2 கோடி ரூபாய் செலவில் 2,000 இளைஞர்களுக்கு டிப்ளமோ இன் கம்ப்யூட்டர் அப்ளிகேஷன் பயிற்சி அளிக்கப்படும்.
- வேலைவாய்ப்புப் பயிற்சிகளுக்கு கழக அரசு நடப்பாண்டில் 10 கோடி ரூபாய் செலவில் 42 வகையான வேலைவாய்ப்புப் பயிற்சி 13,290 வேலையற்ற இளைஞர்களுக்கு அளிக்கப்படும்.
- 85 இலட்சம் ரூபாய் செலவில் 5,000 நபர்கள் பயன்பெறும் வகையில் 5,000 சலவைப்பெட்டிகள் இந்த ஆண்டு வழங்கப்படும்.
- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (TABCEDCO) மூலமாக 1,000 நபர்களுக்கு ரூபாய் 3,000 கடனாகவும், அரசு மானியமாக ஒரு நபருக்கு ரூபாய் 2,000மும் ஆக மொத்தம் ரூபாய் 5,000 செலவில் நடமாடும் சலவையகம் வழங்கப்படும். இதற்கு கழக அரசு 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

## பதிவுத்துறை

## விவசாயிகள், சிறுதொழில் முனைவோர்களுக்கு உரிமை மற்றும் ஒப்படைப்பு ஆவணங்களுக்கு முத்திரைத்தீர்வை விலக்கு

- ஒரு குடும்பத்தில் குடும்ப உறுப்பினராக இருப்பினும், சகோதர, சகோதரிகளுக்கிடையே பதிவு செய்யப்படும் செட்டில்மெண்ட் ஆவணங்கள் குடும்ப உறுப்பினர்களுக் கிடையிலான சொத்து பரிமாற்றங்களாகக் கருதப்படுவதில்லை.
- இந்நிலையை மாற்றி இனிவரும் காலங்களில் சகோதர, சகோதரிகளுக்கிடையே சொத்துப் பரிமாற்றம் செய்து, பதிவு செய்யப்படும் விடுதலை (Release) மற்றும் ஏற்பாடு (Settlement) ஆவணங்கள் குடும்ப உறுப்பினர்களிடையிலான சொத்துப் பரிமாற்றமாகவே கருதப்படும் என்பதையும், இந்த அவைக்கு தெரிவிப்பதிலே கழக அரசு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது.
- விவசாயிகள் மற்றும் சிறுதொழில் முனைவோர்கள் பயனடையும் விதமாக உரிமை ஆவண, ஒப்படைப்பு ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை விலக்கு வழங்கப்படும். மேற்கூறிய முத்திரைத் தீர்வை விலக்களிப்பை 22.7.2006 முதல் நடைமுறைப் படுத்தி, 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் கீழ் உரிய அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ❑

# ஊரகத் தொழில்துறை அமைச்சர் பதவியேற்பு



ஆளுநர் மாளிகையில் 29.10.2006 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சராக நியமிக்கப்பட்ட திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி அவர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

| | | |
|---|---|---|
| திரு. **பொங்கலூர் நா. பழனிசாமி**<br>மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் | : | ஊரகத் தொழில்கள், குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் ஆகிய துறைகளை கவனிப்பார். |

## அமைச்சர்களின் துறைகள் மாற்றம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி பின்வரும் அமைச்சர்களின் துறைகள் மாற்றப்பட்டுள்ளன. அதன் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| திரு. **ஆற்காடு நா. வீராசாமி**<br>மாண்புமிகு மின்துறை அமைச்சர் | : | மின்சாரம், மரபு சாரா எரிசக்தி மேம்பாடு ஆகியவற்றோடு கூடுதல் பொறுப்பாக பணியாளர் நலன் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை |
| திரு. **வீரபாண்டி எஸ். ஆறுமுகம்**<br>மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் | : | வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை, விதைச்சான்றுத்துறை, வேளாண்மைப் பொறியியல், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், கரும்புத்தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு ஆகியவற்றோடு கூடுதல் பொறுப்பாக தரிசுநில மேம்பாடு |

# மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி

## இடைத்தேர்தல் முடிவு

மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதிக்கு 11.10.2006 அன்று நடைபெற்ற இடைத்தேர்தலில் திரு. எஸ். கவுஸ்பாட்சா (தி.மு.க.) வெற்றி பெற்றார்.

### வாக்குகள் விவரம்

| | | |
|---|---|---|
| **எஸ்.கவுஸ்பாட்சா (தி.மு.க.)** | – | **50,994** |
| வி.வி.ராஜன் செல்லப்பா(அ.இ.அ.தி.மு.க) | – | 19,909 |
| எம்.ஆர்.பன்னீர்செல்வம் (தே.மு.தி.க.) | – | 17,394 |
| எம்.முருகேசன் (சுயே) | – | 801 |
| சிவ.அன்பானந்தம் (சுயே) | – | 396 |
| வி.எஸ்.மணி (சுயே) | – | 296 |
| எம்.பிரபு (சுயே) | – | 225 |
| ஏ. பொன்ராமன் (சுயே) | – | 215 |
| கே.கணேசன் (சுயே) | – | 125 |
| ப.விஜயராஜன் (சுயே) | – | 112 |
| எம்.ஒச்சாத்தேவன் (சுயே) | – | 93 |
| எம்.பாண்டி (சுயே) | – | 84 |
| நாகூர்மீரான் பீர்முகமது (சுயே) | – | 60 |
| ஏ. சீனிவாசன் (சுயே) | – | 37 |
| எஸ்.பால்பாண்டி (சுயே) | – | 35 |
| இ.சையது முகைதீன் (சுயே) | – | 33 |
| எஸ்.டி.கல்யாணசுந்தரம் (சுயே) | – | 31 |
| கே.பத்மராஜன் (சுயே) | – | 30 |
| சையது முனவர் உசேன் (சுயே) | – | 27 |

## ஐசக் நியூட்டன்

*பூமிக்கு புவிஈர்ப்பு சக்தி உண்டு என்ற உண்மையைக் கண்டுபிடித்த ஐசக் நியூட்டன், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். 1642–இல் பிறந்தார். சிறுவயதிலேயே பாடம் படிப்பதைவிட, புதிய புதிய கருவிகளை உருவாக்குவதில் ஆர்வம் கொண்டிருந்தார்.*

*தானியங்களை அரைக்கக் கூடிய காற்றாலை, கடிகாரம் ஆகியவற்றைப் பள்ளி மாணவனாக இருந்தபோது உருவாக்கினார்.*

*1661–இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படித்து பின்னர் கணித மேதையாக உருவானார்.*

*1696–இல் அதே பல்கலைக் கழகத்தில் கணிதப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.*

*வானியல் பற்றிய ஆராய்ச்சியில் சூரியன், கோள்கள், விண்மீன்கள் ஆகியவற்றின் இயக்கங்கள் பற்றி பல உண்மைகளைக் கண்டறிந்தார்.*

*மரத்தில் இருந்து விழுகின்ற பழம், மேலே போகாமல் தரைக்கு வருவது ஏன் என்பதைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு, பூமிக்கு "புவிஈர்ப்புச் சக்தி" உண்டு எனக் கண்டறிந்தார்.* ✶



# இளைஞர்களுக்கு சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி

**திரு. என்.சுரேஷ் ராஜன்**
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்

- **கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலை பகுதியைச் சுற்றி கூடுதல் வசதிகள் :**

  கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலை, அய்யன் திருவள்ளுவர் எழுதிய உலகப் பொது மறையான திருக்குறள் சாராம்சங்களைக் கொண்டு உருவாக்கப் பட்டுள்ளது. இச்சிலை முக்கடல்களும் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ளது. மேலும், திருக்குறளின் முக்கியக் கொள்கைகளான அறம், பொருள், இன்பம் போன்றவற்றை விவரமாக விளக்கியுள்ளது. இச்சிலை கடல் நடுவில் உள்ள சிறிய பாறையில் 133 அடி உயரத்தில் எழுப்பப்பட்டுள்ளது. சிலையைக் காண வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு கூடுதல் அடிப்படை வசதிகள் ஏற்படுத்த ரூ.39 இலட்சம் நிதிஒதுக்கப்படும்.

- **தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை மேம்பாடு :**

  கழுகுமலையில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த ரூ.48.68 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகளை முழுமையாக முடிக்க ரூ.13 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்படும்.

- ஏலகிரி மலையினை ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக ஏலகிரி மலை மேம்பாட்டிற்கு ரூ.100.60 இலட்சம் இந்த ஆண்டில் ஒப்பளிப்பு செய்யப்படும்.

- படித்த இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி அளிக்கப்பட்டு சுற்றுலாப் பகுதிகளில் வழிகாட்டிகளாக ஈடுபடுத்தப்படுவார்கள்.

- சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பிச்சாவரம், முத்துப்பேட்டை, கோடியக்கரை, ஏலகிரி, பழவேற்காடு போன்ற இடங்கள் மேம்படுத்தப்படும்.

- சுற்றுலாப் பயணிகள் சொகுசு வசதிகள் நிறைந்த "ஓல்வோ" பேருந்துகளையே அதிகம் விரும்புகின்றனர். எனவே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் "ஓல்வோ" பேருந்துகள் வாங்கப்படும்.

- சுகாதார சுற்றுலாவினை (Health Tourism) மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

- குழந்தைகள் சுற்றுலாவினை ஊக்குவிக்க (Children Tourism) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சிறப்புப் பயணத் திட்டங்களைத் தொடங்கும்.

- சுற்றுலா வளர்ச்சி கருதி, புதிய சுற்றுலாத் தலங்களில் மக்களைக் கவரும் விதத்தில் தொடங்கப்படும் ஓட்டல், பொழுதுபோக்குப் பூங்கா, படகுத்துறை போன்ற சுற்றுலாத் திட்டங்களுக்கு (Tourism Projects) மொத்த முதலீட்டில் 10 சதவிகிதம் மானியமாக அளிக்கப்படும். மானியத் தொகை உச்ச பட்சமாக ஒரு கோடி ரூபாய் வரைஅளிக்கப்படும். முதல் ஐந்தாண்டு காலத்திற்கு செலுத்தும் விற்பனை வரிக்கு மென்கடன் அளிக்கவும், அந்தக் கடனை அடுத்த ஐந்தாண்டுகளில் 0.1 வட்டி விகிதத்தில் திருப்பி செலுத்தவும் புதிய கொள்கை உருவாக்கப்படும். ✱

# செய்தித்துறையின் சீர்மிகு திட்டங்கள்



திரு. பரிதி இளம்வழுதி
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்

- பத்திரிகையாளர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியத் தொகை ரூ.3,000 லிருந்து ரூ.4,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

- பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ. 4,000 ஆக உயர்த்தப்படுவதால், பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெற்றுவந்த பத்திரிகையாளர் இயற்கை எய்தினால், அவரின் துணைவியாருக்கு, அவரது வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியம் ரூ.1,500 லிருந்து ரூ. 2,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். மேலும், இதை சீராக்கும் பொருட்டு, ஏற்கெனவே 500 ரூபாய் குடும்ப ஓய்வூதியமாகப் பெறுபவர்களுக்கும் ரூ.2,000 வழங்கப்படும்.

- பணியாற்றும் காலத்தில் இயற்கை எய்திவிட்ட பத்திரிகையாளருடைய குடும்ப நிதி வழங்குவதற்காக இருக்கின்ற நிபந்தனைகள் தளர்த்தப்பட்டு, அந்தக் குடும்பத்தினர் பயன்பெறுமளவுக்கு விதிமுறைகள் மாற்றப்படும்.

- கலைப்படங்களுக்கு மானியம் வழங்க வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் தளர்த்தப்படும்.

- தேசிய, சர்வதேச விருதுகள் பெறும் தமிழ்த் திரைப்படங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும்.

- குழந்தைகள் திரைப்பட விழா 1.8.2006 முதல் 9.8.2006 முடிய (சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகள் தவிர) சென்னை, கலைவாணர் அரங்கில் சிறப்பாக நடத்தப்பட்டது. அதேபோல் ஆண்டுதோறும் சென்னையிலும் அனைத்து மாவட்டத் தலைநகர்களிலும் குழந்தைகள் திரைப்பட விழா நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

- பத்திரிகையாளர்கள் நலனில் எப்போதும் அக்கறை செலுத்திடும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், பத்திரிகையாளர்கள் 20 ஆண்டுகள் பணிபுரிந்து பணியிலே இருக்கும் காலக்கட்டத்தில் இறந்து விடுவார்களேயானால், அவர்களுடைய குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாய் என்றும், 15 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார்களேயானால் ஒன்றரை இலட்சம் ரூபாய் என்றும், 10 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார்களேயானால் ஒரு இலட்சம் ரூபாய் என்றும், 5 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார் களேயானால் ஐம்பதாயிரம் ரூபாய் என்றும் குடும்ப நிதிஉதவி வழங்கலாம் என்று அறிவித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் காரணமாக 20 ஆண்டு காலம் பணிபுரியாத காரணத்தினால் இந்த உதவித் தொகையைப் பெற வாய்ப்பில்லாமல் இருந்த பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் குடும்ப உதவிநிதி கிடைத்திடும்.

# சென்னை, மதுரை மற்றும் கோவையில் அடுக்குமாடிக் குடியிருப்புகள்

* தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் இந்த நிதியாண்டில் (2006–2007) தமிழகம் முழுவதும் ரூபாய் 166 கோடி திட்ட மதிப்பீட்டில் 2,062 மனைகள், வீடுகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும்.

* வாரியத்திற்குச் சொந்தமான வணிகமனைகளில் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய வணிக வளாகங்கள் கட்டப்படும்.

* மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் 30 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டு முற்றிலும் பழுதடைந்த வீடுகளை இடித்துவிட்டு புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படுமென அறிவித்ததற்கிணங்க சென்னை நகரில் நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை உள்ள 2,862 அடுக்குமாடிக் குடியிருப்புகளை அகற்றி, அவ்விடங்களில் 7,320 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் ரூபாய் 128.10 கோடி செலவில் அமைக்கப்படும். மேலும், வடசென்னையில் வியாசர்பாடி, பி.எஸ்.மூர்த்திநகர் மற்றும் தென்சென்னையில் குப்பைமேடு திட்டப் பகுதியில் உள்ள மிகவும் பழுதடைந்த 606 குடியிருப்புகள் அகற்றப்பட்டு ரூபாய் 8.95 கோடி செலவில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மீண்டும் அமைக்கப்படும்.


* சென்னையில் சுனாமி ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் குடும்பங்களுக்கு 18,174 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூபாய் 300.91 கோடி செலவில் கட்டப்படும். வடசென்னையில் திருவொற்றியூர், தென் சென்னையில் ஏற்கெனவே குறிப்பிட்டபடி நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை மற்றும் ஒக்கியம் துரைப்பாக்கம் திட்டப் பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.



**திரு. சுப.தங்கவேலன்**
மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர்

* சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய நகரங்களை குடிசைப் பகுதிகளற்ற நகரங்களாக மேம்படுத்த ஜவகர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டத்தின் கீழ், சென்னை மாநகரில் 1 இலட்சத்து 11 ஆயிரத்து 151 குடியிருப்புகள் ரூபாய் 1,856.23 கோடி செலவிலும், மதுரை மாநகரில் 60,257 குடியிருப்புகள் ரூபாய் 1006.26 கோடி செலவிலும், கோவை மாநகரில் 12,730 குடியிருப்புகள் ரூபாய் 281.60 கோடி செலவிலும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் 2007–இல் தொடங்கப்படும்.

* * *



# புதுப்பொலிவுடன் வருமுன் காப்போம் திட்டம் செயல்படுத்தப்படும்

திரு. **கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்**
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

✶ கடந்த 2005–06ஆம் ஆண்டில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி 1,652.04 கோடி ரூபாய் ஆகும். நடப்பு 2006–07ஆம் ஆண்டில் ரூ.1,951.28 கோடி நிதி இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், ரூபாய் 299.24 கோடி நிதியை இத்துறைக்கு உயர்த்திக் கொடுத்துள்ளார் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✶ நடப்பு நிதியாண்டில் விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும். மற்ற மாவட்டங்களிலும் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் படிப்படியாக தொடங்கப்படும்.

✶ மைய அரசின் உதவியுடன் ரூ.120 கோடி செலவில் சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, புதுதில்லி அகில இந்திய மருத்துவ விஞ்ஞான கழகத்திற்கு இணையாக, தரம் உயர்த்தப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✶ இந்திய பொது சுகாதார அறக்கட்டளையின் கீழ் குறுகிய மற்றும் நீண்ட காலப்பயிற்சி, வருடத்திற்கு 10,000 பேர்களுக்கு அளிக்கவும், சர்வதேச அளவில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும் ரூ.100 கோடி நிதியில் சென்னைக்கருகில் சர்வதேச தரம் வாய்ந்த பொது சுகாதாரக் கல்வி நிறுவனத்தை தமிழக அரசு, மத்திய அரசு உதவியுடன் அமைக்கும். இதற்காக 50 ஏக்கர் நிலம் தமிழக அரசால் உடனடியாக வழங்கப்படும்.

✶ மதுரை அரசு இராசாசி மருத்துவமனையை மேன்மைமிகு மையமாக மாற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். முதற்கட்டமாக நடப்பாண்டில் ரூ.15 கோடி செலவில் 300 படுக்கை வசதிகள் ஏற்படுத்தி தரம் உயர்த்தப்படும். இதற்கு தேவையான 2 ஏக்கர் நிலத்தை மதுரை மாநகராட்சி தர முன்வந்துள்ளது.

✶ கட்டடப் பணிகள் முடிந்தவுடன் மேம்படுத்தப்படுகிற அனைத்து மருத்துவ மனைகளுக்கும் நவீன மருத்துவக்கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.102 கோடி செலவில் தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் மூலம் வாங்கித்தரப்படும்.

✶ இந்த அரசு மருந்து தயாரிப்புத் தொழிலை ஊக்குவிக்கும் விதமாகவும், மறைந்த மாமேதை மாண்புமிகு முன்னாள் மத்திய அமைச்சர் திரு.முரசொலி மாறன் அவர்களின் திட்டப்படியும் திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி உயர் தொழில்நுட்பப் பூங்காவில் 40 முதல் 50 பெரிய மற்றும் சிறிய மருந்து தயாரிப்பு நிறுவனங்களும், 8 முதல் 10 வரை துணை நிறுவனங்களும் தொழில் தொடங்க ஏதுவாக 250 ஏக்கர் பரப்பளவில் ஒரு பார்மா பார்க் அமையப்பெற உள்ளது. இதனால் 2,800 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 6,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும். சுமார் 500 கோடி ரூபாய் அளவில் உற்பத்தி மருந்தை ஏற்றுமதி செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

✶ தமிழக முதல்வரின் பேறுகால நிதிஉதவித் திட்டத்தின் கீழ் ஏழை கர்ப்பிணிப் பெண்கள் சத்தான உணவு உண்ணவும், பிரசவ காலத்தில் வருமான இழப்பை ஈடுசெய்யவும் கருவுற்ற 7ஆவது மாதத்திலிருந்து, ஆறு மாத காலத்திற்கு மாதம் ரூ.1,000 வீதம் ஒவ்வொரு ஏழை

கர்ப்பிணிப் பெண்ணிற்கும் ரூ.6,000 வழங்கப்படும். இதற்காக நடப்பு நிதி ஆண்டில் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* பிரசவகால அவசரத் தேவைக்கான வசதிகள் எளிதில் கிடைக்கும் வண்ணம் நடப்பாண்டில் மேலும் 32 மருத்துவமனைகள் 24 மணி நேர தீவிர பிரசவ சேவை மையங்களாகத் தரம் உயர்த்தப்படும். இம்மையங்களுக்குத் தேவையான வசதிகள் தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் கீழ் செய்யப்படும்.

* அரைமணிநேரப் பயணத்தில் எந்தவொரு கிராமத்திலிருந்தும் கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகள் அவசர சிகிச்சை பெறும் வகையில் பேறுகால மற்றும் இளஞ்சிசு அவசர சிகிச்சை மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் அமைக்கப் படும். இந்த மையங்களில் ஆங்கில முறை சிகிச்சையுடன், இந்தியப் பாரம்பரிய சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவமுறை மருந்துகளைப் பயன்படுத்தி பேறுகால சிக்கல்களைக் குறைக்கும் முறையும் செயல்படுத்தப்பட உள்ளது. இந்த வசதிகளை அனைத்துப் பகுதி மக்களும் எளிதில் பெறுவதற்கேற்ற வகையில் ஆரம்ப கட்டமாக 385 மையங்கள் அமைக்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ.54.97 கோடி உட் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் நவீன உபகரணங்கள் வாங்குவதற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* ஒவ்வொரு கிராமத்திலும் மாதம் ஒரு முகாம் தொடர்ந்து நடத்தப்படும். இந்த ஆண்டு 885 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்தத் திட்டம் மக்கள் பங்கேற்புடன் ரூ.12.13 கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் படிப்படியாக அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

* தற்போது வருமுன் காப்போம் திட்டம் மீண்டும் புதுப்பொலிவுடன் விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக நடப்பாண்டிலும் அடுத்த ஆண்டிலும் ரூ.18.3 கோடி செலவில் 9,000 முகாம்கள் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் நடத்தப்பட உள்ளது. ஒரு மாவட்டத்தில் வாரத்தில் சராசரியாக மூன்று மருத்துவ முகாம்கள் வீதம் 24 மாதங்களில் மாநிலம் முழுவதும் 30 மாவட்டங்களிலும், மாவட்டத்திற்கு சுமார் 300 முகாம்கள் வீதம் நடத்தப்படும். இந்தத் திட்டம் ஒரு நிரந்தர திட்டமாக தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

* தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் கீழ் பரீட்சார்த்த முறையில் கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் உள்ள 11 அரசு மருத்துவமனைகளில் மருத்துவக் கழிவுகள் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்தப்பட்டு அழிக்கப்படுகிறது. இத்திட்டம் சிறப்பான முறையில் செயல்படுவதால் நடப்பு ஆண்டில் 270 அரசு மருத்துவமனைகளுக்கும் விரிவு படுத்தப்படும். இதற்காக 5 ஆண்டுகளுக்கு ரூ.32.71 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

* அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மூலமாக மருந்துகள் வழங்குவதற்காக தற்போது ரூ.170 கோடி ஒதுக்கியுள்ளது. இது கடந்த ஆண்டைவிட ரூபாய் 33.25 கோடி அதிகமாகும்.

* * *

## உயிரியல் உலகம்

1) மனிதர்களுக்கு தூக்க வியாதியை ஏற்படுத்தும் உயிரி எது?

*டிரிப்பன்னோசோமா கேம்பின்ஸ்*

2) வைரஸ்களில் காணப்படும் மரபுப் பொருள் எது?

*DNA மற்றும் RNA*

3) குடல்வாலில் ஏற்படும் நோய் என்ன?

*அப்பன்டிசைட்டிஸ்*

4) பிளேக்நோயை ஏற்படுத்தும் உயிரி எது?

*பாஸ்டுரெல்லா பெஸ்டிஸ்*

5) முதல் முதுகு முள்ளெலும்பின் பெயர் என்ன?

*அட்லஸ்*

6) பாக்டீரியாக்களைத் தாக்கும் வைரஸ்களுக்கு என்ன பெயர்?

**பேக்டீரியோபேஸ்.**



# சென்னையில் மழை பாதித்த பகுதிகளில் உடனடி நிவாரணம்

சென்னை மாநகரில் மழை வெள்ளம் சூழ்ந்த பகுதிகளை 28.10.2006 அன்று, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார். கொட்டும் மழையிலும்–தண்ணீர் தேங்கிய பகுதிகளுக்குச் சென்று நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டார். பாதிக்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை நேரில் சென்று பார்த்து அவர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கினார்.


சாலைகளில் தேங்கி உள்ள தண்ணீரை வெளியேற்ற அதிகாரிகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைப் பார்வையிட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அப்பணிகளை விரைந்து நிறைவேற்றுமாறு கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன் மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் திரு.டி.ஆர். பாலு, திரு. தயாநிதிமாறன், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன், சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.விஜயகுமார்,இ.ஆ.ப., ஆகியோர் உடன் சென்றனர்.

சென்னை மாநகரில் இடைவிடாது பெய்த மழை காரணமாக தாழ்வான பகுதிகளில்



③



அருந்ததிபாளையத்தில் உள்ள மாநகராட்சிப் பள்ளியில் – மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

அந்த மழை வெள்ள முகாமிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்றார். முகாமில் தங்கியிருந்தவர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கினார்.

“அப்பகுதியில் இயல்பு வாழ்க்கை விரைந்து திரும்பிட விரைவான நடவடிக்கை மேற்கொள்வீர்!” என மாநகராட்சி ஆணையரை கேட்டுக் கொண்டார்.

அங்கிருந்து பின்னர் ஆயிரம் விளக்குப் பகுதி 116–ஆவது வட்டத்திற்கு வருகை தந்தார். அங்கு நிவாரணப் பணிகளை விரைவுபடுத்திய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொட்டுகிற மழையில் நனைந்தபடியே சார்மியர்ஸ் சாலையில் பெருகி ஓடிய மழை நீரை வடிக்க காலையிலிருந்தே மாநகராட்சி மேற்கொண்டு

மழை நீர் சூழ்ந்தது. இந்நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் தமது துறையின் உயர் அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், வானிலை ஆய்வு மைய அதிகாரிகள், சென்னை மாநகராட்சி ஆணையர் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

நடைபெற்று வருகிற நிவாரணப் பணிகள் மற்றும் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் ஆகியன குறித்து விரிவான கலந்தாய்வு நடத்திய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முதலாவதாக வியாசர்பாடி – கணேசபுரம் ரெயில்வே பாலப் பகுதிக்குச் சென்றார்.

சென்னை மாநகரில் இடைவிடாத பெய்த மழை காரணமாக பாலம் அமைந்துள்ள பகுதி எங்கும் முழங்கால் அளவுக்கு தண்ணீர் தேங்கி நின்றது. தேங்கிய தண்ணீரை அதிக திறன்கொண்ட மோட்டார்களைக் கொண்டு வெளியேற்றும் பணியில் மாநகராட்சி நிருவாகம் ஈடுபட்டிருந்தது.

பணியினை விரைந்து முடிக்க கேட்டுக் கொண்ட மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், ஆலோசனைகளையும் அப்போது வழங்கினார்.

பின்னர் ஓட்டேரி நல்லா கால்வாயினைப் பார்வையிட்டார். மிகையான தண்ணீர் அக்கால்வாய் மூலம் வெளியேற்றப்படுகிற விவரம் கேட்டறிந்தார். பின்னர் அங்கிருந்து பெரம்பூர், ஜமாலியா பகுதிக்குச் சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டார்.



வரும் நிவாரண நடவடிக்கைகளைப் பார்வையிட்டார்.

பின்னர் அங்கிருந்து கோட்டூர்புரம் சென்றார். வழியில் கொட்டுகிற மழையில், கோட்டூர் மேம்பாலத்தில் நின்று, அடையாற்றின் வெள்ள ஓட்டத்தினையும், அதன் ஓரங்களை பலப்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளையும் பார்வையிட்டார்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 31.10.2006 அன்று, சென்னையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வேளச்சேரி பகுதிகளை ஏ.ஜீ.எஸ். காலனி, இராம் நகர், சீனிவாச நகர் ஆகிய பகுதிகளை பார்வையிட்டு பொது மக்களின் குறைகளை கேட்டறிந்தார். மேலும் அப்பகுதிக்கு உடனடியாக மழைநீர் வடிகால் அமைக்குமாறு உத்தரவிட்டார். அதன் பின்னர்



அதனைத் தொடர்ந்து பின்னர் வேளச்சேரி மேம்பாலம் சென்று அங்கிருந்து அதன் சுற்று வட்டாரப் பகுதிகளை பார்வையிட்டார்.

அப்பகுதி தாழ்வான பகுதி என்பதும் கடந்த காலத்தில் மழை வெள்ளத்தின் போது அப்பகுதி பெருமளவு பாதிக்கப்பட்டது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

வேளச்சேரி சுற்றுவட்டாரப் பகுதிகளில் சூழும் மழை வெள்ளத்தை வடிக்க மாநகராட்சி மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை ஆணையர் எடுத்துரைத்தார்.

டான்ஸி நகர், இந்திரா நகர், உதயம் நகர் ஆகிய பகுதிகளை பார்வையிட்டு அங்குள்ள எம்.ஆர்.டி.எஸ். பணிகளின் அருகாமையில் மண்குவியல்களை அகற்றி மழைநீர் வடிவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். கோடம்பாக்கம் பராங்குசம் பகுதிகளில் மோட்டார் பம்பு மூலம் மழைநீர் அகற்றப்படுவதை பார்வையிட்டு துரிதப்படுத்தினார். அதன் பின்னர் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகையில், "சென்னையில் பல இடங்களில் மழைநீர் வடிகால்கள் கட்டவும், கால்வாய்கள் பொதுப் பணித்துறை மூலம் தூர்வாரவும் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. மழை அளவு குறைந்துள்ளதாலும், தமிழக அரசு மேற்கொண்டுள்ள துரித நடவடிக்கையினாலும் அதிக அளவில் மழைநீர் தேங்காமல் வடிந்துள்ளதை சாலைகளில் காணலாம். மேலும் வேளச்சேரி பகுதிகளில் சூழ்ந்துள்ள மழைநீரை அகற்ற, எம்.ஆர்.டி.எஸ். பணியை மேற்கொள்ளும் இரயில்வே துறையுடன் கலந்து பேசி மண் குவியல்களை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் மழைநீர் வடிகால்கள் தேவையான பகுதிகளுக்கு அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும். புதிய மன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து குழு மூலம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு, இனி வருங்காலங்களில் மழைநீர் தேங்காதவாறு நடவடிக்கை எடுக்கப்படும். சென்னை மாநகராட்சி மூலம் 4.50 இலட்சம் உணவுப் பொட்டலங்கள் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது" என்றார்.

கொட்டுகிற மழை! முழங்கால் அளவிற்கு தண்ணீர் என்றும்பாராமல் சென்னை மாநகர மக்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்ற மனித நேய உணர்வோடு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்ட உடனடி நிவாரணப் பணியால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர்துடைக்கப்பட்டது. தமிழக அரசு, மக்கள் நல அரசு என்பதற்கு இந்த உடனடி நடவடிக்கை மகத்தானதோர் எடுத்துக்காட்டாகும்.

□ □ □

# உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள்

தமிழ்நாட்டில் 13.10.2006 மற்றும் 15.10.2006 ஆகிய நாட்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான நேரடித் தேர்தல் நடைபெற்றது. அதனையடுத்து 28.10.2006 அன்று நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளின் முதல் கூட்டத்தில் (சென்னை மாநகராட்சிக்கு மட்டும் 29.10.2006 அன்று நடைபெற்றது) அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு தலைவர் / துணைத் தலைவர் மற்றும் மேயர் / துணை மேயர் பதவிகளுக்கான மறைமுகத் தேர்தல் நடைபெற்றது.

## நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்

### மாநகராட்சிகள்

தமிழகத்தில் உள்ள ஆறு மாநகராட்சிகளில் (சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி) மேயர், துணை மேயர் பதவிகளுக்கு கீழ்க்கண்டவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

| மாநகராட்சியின் பெயர் | மேயராக தேர்வு செய்யப்பட்டுள்ளவர்/ கட்சி | துணை மேயராக தேர்வு செய்யப்பட்டுள்ளவர்/கட்சி |
|---|---|---|
| சென்னை | திரு. மா. சுப்பிரமணியன் தி.மு.க. | திருமதி. ஆர். சத்தியபாமா தி.மு.க. |
| கோயம்புத்தூர் | திரு. ஆர். வெங்கடாசலம், இ.தே.கா. | திரு. என். கார்த்திக் தி.மு.க. |
| மதுரை | திருமதி. கோ. தேன்மொழி, தி.மு.க. | திரு. பி. எம். மன்னன் தி.மு.க. |
| சேலம் | திருமதி. ஜெ.ரேகா பிரியதர்ஷினி, தி.மு.க. | திரு.சி.பன்னீர்செல்வம் தி.மு.க. |
| திருச்சிராப்பள்ளி | திருமதி. சாருபாலா ஆர். தொண்டைமான், இ.தே.கா. | திரு.எம். அன்பழகன் தி.மு.க. |
| திருநெல்வேலி | திரு. அ.லெ.சுப்பிரமணியன், தி.மு.க. | திரு. முத்துராமலிங்கம் தி.மு.க. |




ஆறு மாநகராட்சிகளில் மொத்தமுள்ள 474 வார்டுகளில் மதுரை மாநகராட்சியில் ஒரு வார்டில் மட்டும் (29ஆவது வார்டு) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளர் இறந்ததால் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

## நகராட்சிகள்

102 நகராட்சிகளில் மொத்தம் 3,392 வார்டுகளில் சிவகங்கை நகராட்சியில் ஒரு வார்டில் மட்டும் (9ஆவது வார்டு) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளர் இறந்ததால் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது. பிற அனைத்து வார்டுகளிலும் தேர்தல் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து 102 நகராட்சிகளில் சிவகங்கை நகராட்சி தவிர அனைத்து நகராட்சிகளிலும் தலைவருக்கான தேர்தல் முடிவுற்றது. இத்தேர்தலில் கட்சி வாரியாக வெற்றி பெற்ற விவரம் பின்வருமாறு:–

| கட்சி | எண்ணிக்கை |
| --- | --- |
| தி.மு.க. | 63 |
| காங்கிரஸ் | 15 |
| அ.இ.அ.தி.மு.க | 9 |
| பா.ம.க | 6 |
| இ.கம்யூ(மா) | 4 |
| சுயேட்சை | 3 |
| விடுதலை சிறுத்தை | 1 |
| மொத்தம் | 101 |

## மூன்றாம் நிலை நகராட்சிகள்

மொத்தமுள்ள 50 மூன்றாம் நிலை நகராட்சிகளில் உள்ள 987 வார்டுகளில் வேலூர் மாவட்டம் மேல்விஷாரம் மூன்றாம் நிலை நகராட்சியின் 4 வார்டுகளைத் தவிர (வேட்பு மனு தாக்கல் ஆகாதவை) அனைத்து வார்டுகளுக்கும் (983) உறுப்பினர் தேர்தல் நடைபெற்று முடிவுற்றது. அதனைத் தொடர்ந்து கோயம்புத்தூர் மாவட்டம் வேலம்பாளையம் மூன்றாம் நிலை நகராட்சி தவிர அனைத்து மூன்றாம் நிலை நகராட்சிகளிலும்

தலைவருக்கான தேர்தல் முடிவுற்றது. இத்தேர்தலில் கட்சி வாரியாக வெற்றி பெற்ற விவரம் பின்வருமாறு:—

| கட்சி | எண்ணிக்கை |
|---|---|
| தி.மு.க. | 31 |
| அ.இ.அ.தி.மு.க | 8 |
| காங்கிரஸ் | 6 |
| பா.ம.க. | 1 |
| இ.கம்யூ | 1 |
| சுயேட்சை | 2 |
| மொத்தம் | 49 |

### பேரூராட்சிகள்

மொத்தமுள்ள 561 பேரூராட்சிகளில் உள்ள 8,807 வார்டுகளில் 8,780 வார்டுகளுக்கு தேர்தல் முடிவுற்றது. மீதமுள்ள 27 வார்டுகளில் 26 வார்டுகளுக்கு வேட்பு மனு தாக்கல் செய்யாத காரணத்தால் தேர்தல் நடைபெறவில்லை. ஈரோடு மாவட்டம், கொடுமுடி பேரூராட்சியில், வார்டு எண். 9—ல் போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளர் மரணம் அடைந்ததால் இவ்வார்டிற்கான தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மொத்தமுள்ள 561 பேரூராட்சிகளில் 16 பேரூராட்சிகள் தவிர அனைத்து பேரூராட்சிகளிலும் தலைவருக்கான தேர்தல் முடிவுற்றது. 16 பேரூராட்சிகளில் போதிய குறைவெண் வரம்பு (Quorum) இல்லாமையாலும் மற்றும் சில நிருவாகக் காரணங்களினாலும் தலைவருக்கான தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

545 பேரூராட்சிகளில் நடைபெற்ற தலைவருக்கான தேர்தலில் கட்சி வாரியாக வெற்றி பெற்ற விவரம் பின்வருமாறு:—

| கட்சி | எண்ணிக்கை |
|---|---|
| தி.மு.க. | 283 |
| அ.இ.அ.தி.மு.க | 70 |
| காங்கிரஸ் | 61 |
| பா.ம.க | 14 |
| பா.ஜ.க | 9 |
| இ.கம்யூ(மா) | 7 |
| இ.கம்யூ | 6 |
| ம.தி.முக. | 5 |
| சுயேட்சை | 90 |
| மொத்தம் | 545 |

## ஊரக உள்ளாட்சி அமைப்புகள்

### மாவட்ட ஊராட்சிகள்

மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கான தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் விவரம் பின்வருமாறு:

| மாவட்ட ஊராட்சி | தலைவர் பெயர் | கட்சி |
|---|---|---|
| கோயம்புத்தூர் | சி.ஆர். ராமச்சந்திரன் | தி.மு.க. |
| கடலூர் | ஆர்.சிலம்புச்செல்வி | பா.ம.க. |
| தருமபுரி | எஸ்.பி.வெங்கடேஸ்வரன் | பா.ம.க. |
| திண்டுக்கல் | ஆர்.கவிதா பார்த்திபன் | தி.மு.க |
| ஈரோடு | எஸ்.வி.சரவணன் | இ.தே.கா |
| காஞ்சிபுரம் | டி.துரைசாமி | தி.மு.க. |
| கன்னியாகுமரி | டி.அஜிதா மனோதங்கராஜ் | தி.மு.க. |
| கரூர் | ரமேஷ்பாபு பூவை | தி.மு.க. |
| கிருஷ்ணகிரி | ஆர்.ராஜேந்திரன் | இ.தே.கா. |
| மதுரை | பி.அசோக்குமார் | தி.மு.க. |
| நாகப்பட்டினம் | ஜி.ஜெயராமன் | இ.கம்யூ (மா) |

| | | |
|---|---|---|
| நாமக்கல் | எஸ்.காந்தி செல்வன் | தி.மு.க. |
| பெரம்பலூர் | டி.கொடியரசி | தி.மு.க. |
| புதுக்கோட்டை | சி.முத்துச்சாமி | தி.மு.க. |
| இராமநாதபுரம் | ஏ.ரவிச்சந்திர ராமவன்னி | இ.தே.கா. |
| சேலம் | கே.சண்முகம் | பா.ம.க. |
| சிவகங்கை | எம்.பாண்டியன் | இ.தே.கா. |
| தஞ்சாவூர் | எஸ்.செல்வி | தி.மு.க. |
| நீலகிரி | எஸ்.கோமதி | தி.மு.க. |
| தேனி | தேர்தல் தள்ளிவைக்கப்பட்டது | |
| திருவள்ளூர் | பி.விஜயகுமார் | இ.தே.கா. |
| திருவண்ணாமலை | பி.கிரி | தி.மு.க. |
| திருவாரூர் | எஸ்.கமலாவதனம் | இ. கம்யூ. |
| திருச்சிராப்பள்ளி | வி. சங்கீதா | தி.மு.க. |
| திருநெல்வேலி | எம்.கிரகாம்பெல் | தி.மு.க. |
| தூத்துக்குடி | என்.சின்னதுரை | அ.இ.அ.தி.மு.க. |
| வேலூர் | ஆர்.ஷீலா | தி.மு.க. |
| விழுப்புரம் | வி.எஸ்.வசுந்தராதேவி | பா.ம.க. |
| விருதுநகர் | ஏ.கடற்கரைராஜ் | தி.மு.க. |


| | |
|---|---|
| மொத்தப் பதவியிடங்கள் | 29 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட பதவியிடங்கள் | 28 |
| தி.மு.க. | 16 |
| இந்திய தேசிய காங்கிரஸ் | 5 |
| பாட்டாளி மக்கள் கட்சி | 4 |
| இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி | 1 |
| இந்திய கம்யூனிஸ்ட் கட்சி | 1 |
| அ.இ.அ.தி.மு.க. | 1 |
| தேர்தல் தள்ளி வைக்கப்பட்டது | 1 |

**ஊராட்சி ஒன்றியங்கள்**

| | |
|---|---|
| மொத்தப் பதவியிடங்கள் | 385 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட பதவியிடங்கள் | 373 |
| தி.மு.க | 242 |
| இந்திய தேசிய காங்கிரஸ் | 42 |
| பாட்டாளி மக்கள் கட்சி | 28 |
| இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி | 5 |
| இந்திய கம்யூனிஸ்ட் கட்சி | 8 |
| அ.இ.அ.தி.மு.க | 25 |
| ம.தி.மு.க | 3 |
| பாரதிய ஜனதா கட்சி | 2 |
| சுயேட்சை | 17 |
| மற்றவை | 1 |
| தேர்தல் தள்ளி வைக்கப்பட்டது | 12 |

**மக்கள் தொடர்பு அலுவலர்,**
**மாநிலத் தேர்தல் ஆணையம்,**
**சென்னை.**

## **சென்னை** மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் திரு. **மா.சுப்பிரமணியன்** அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு



சென்னை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் வாணியம்பாடி அருகில் ஒரு சிறிய கிராமத்தில் பிறந்தவர். இவருக்கு வயது 47. பள்ளியில் படிக்கும்போதே பொதுவாழ்வில் நாட்டம் கொண்டு 1976ஆம் ஆண்டிலிருந்து பொதுநலப்பணியில் ஈடுபட்டார். இவரது மனைவியின் பெயர் காஞ்சனா. இவர்களுக்கு இரண்டு மகன்கள். மூத்த மகன் இளஞ்செழியன் மாஸ்கோவில் மருத்துவம் பயின்று வருகிறார். இளைய மகன் பெயர் அன்பழகன்.

சொந்தத் தொழில் செய்யவேண்டுமென்று ஆர்வம் கொண்டு தனது நண்பரின் உதவியால் ஒரு சோடா கடை நடத்தி வந்தார். பின்னர் சைக்கிள் கடை, அதனையடுத்து கட்டுமான பொருள் வியாபாரம் செய்து படிப்படியாக முன்னேறினார்.

இவர் பிறந்த சிறிய கிராமத்தில் பட்டப்படிப்பு படித்தவர்கள் மிகவும் அரிது. ஆனால், இவர் பி.ஏ., பட்டம் பெற்று, பின்னர் எல்.எல்.பி.யும் படித்து முடித்துள்ளார்.

1996ஆம் ஆண்டில் முதன்முதலாக மாமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு 2001ஆம் ஆண்டும் தொடர்ந்து மாமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னை மாநகராட்சியின் 9ஆவது மண்டலக் குழுத்தலைவராகவும் பணியாற்றியுள்ளார். ❖





# **கோயம்புத்தூர்** மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் திரு. **ஆர்.வெங்கடாசலம்** அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

**கோ**யம்புத்தூர் மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு.ஆர்.வெங்கடாசலம் அவர்கள் 1941ஆம் ஆண்டு பிறந்தவர்.

ஒரு தனியார் நிறுவனத்தில் பணியாற்றி பின்னர், பொதுச்சேவையில் ஈடுபடும் பொருட்டு, விருப்ப ஓய்வுபெற்று முழுநேர பொதுப்பணியாற்றி வருகிறார்.

25 ஆண்டுகள் தொழிற்சங்கப் பணியில் ஈடுபட்டு தொழிலாளர்களுக்கு தொண்டாற்றியுள்ளார். 1972ஆம் ஆண்டு சங்கனூர் பஞ்சாயத்து மன்ற உறுப்பினராக பணியாற்றியுள்ளார்.

1996 மற்றும் 2001ஆம் ஆண்டுகளில் கோயம்புத்தூர் மாநகராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றியுள்ளார்.

பொதுமக்களால் காலனி ஆர்.வெங்கடாசலம் என அழைக்கப்படும் இவரது மனைவியின் பெயர் வி.ரேணுகா. இவர்களுக்கு வி.கார்த்திகேயன் என்ற மகனும், ஆர்.காயத்திரி மற்றும் அனுராதா ஆகிய மகள்களும் உள்ளனர். ❖





# மதுரை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் திருமதி கோ.தேன்மொழி அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

மதுரை மாநகராட்சியின்
வணக்கத்திற்குரிய மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள
திருமதி. கோ. தேன்மொழி அவர்களுக்கு
வயது 42. இவர் 8ஆவது வகுப்பு வரை படித்துள்ளார்.
இவரது கணவர் பெயர் ப.கோபிநாதன். இவர்களுக்கு
பிரபாகரன், கார்த்திகேயன் ஆகிய இரண்டு மகன்களும்,
சரண்யா என்ற மகளும் உள்ளனர். இவரது பெற்றோர்
சுவாமிநாதன் – பத்மாவதி ஆகியோர் ஆவார்கள்.
மதுரை சுப்பிரமணியபுரத்தில் குடியிருக்கும் திருமதி.
கோ. தேன்மொழி அவர்களின் சொந்த ஊர் விருதுநகர்
மாவட்டம், நரிக்குடி அருகேயுள்ள தீயனூர் ஆகும்.
1986ஆம் ஆண்டிலிருந்து
இவர் பொதுநல சேவையில் ஈடுபட்டு வருகிறார்.

இவர் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினராக இருந்துள்ளார்.
தற்போது மதுரை மாநகராட்சியின் 42ஆவது வார்டு மாமன்ற
உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மேயராகத்
தேர்வு பெற்றுள்ளார்.

❖ ❖ ❖





**சேலம்**
மாநகராட்சியின்
வணக்கத்திற்குரிய
மேயர்
திருமதி. **ஜெ.ரேகா பிரியதர்ஷினி**
அவர்களின்
வாழ்க்கைக் குறிப்பு

சேலம் மாநகராட்சி வரலாற்றுச் சிறப்புப் பெற்ற மாநகராட்சிகளில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது. சேலம் மாநகராட்சி, நகராட்சியாக இருந்த காலத்தில் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் நகர்மன்றத் தலைவராக இருந்து மக்கள் பணி ஆற்றிய சிறப்பினைப் பெற்றதாகும்.

1.4.1972இல் சேலம் நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 1.6.1994இல் மாநகராட்சியாக மாற்றப்பட்டது.

மாநகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டபோதிலிருந்து, 60 கோட்டங்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. முதல் முதலாக தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த திருமதி. ஜெ. ரேகா பிரியதர்ஷினி அவர்கள், சேலம் மாநகராட்சியின் முதல் பெண் மேயராகப் பொறுப்பேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சேலம் மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயராகப் பொறுப்பேற்றுள்ள திருமதி. ஜெ. ரேகா பிரியதர்ஷினி அவர்கள், 1.7.1982இல் பிறந்தார். இவரது பெற்றோர் ஜெகதீஸ்வரன்–பங்கஜம் ஆகியோர் ஆவர். இவர் எம்.ஏ., (ஆங்கிலம்), எம்.ஏ (பொது நிர்வாகம்) படித்தவர். தற்போது, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் எம்.ஃபில் படித்து வருகிறார். கல்லூரியில் படித்த காலத்தில் துறைச் செயலாளராகவும், கல்லூரிப் பொருளாளராகவும் இருந்துள்ளார். பள்ளி மற்றும் கல்லூரியில் படித்த காலத்தில் ஓவியப்போட்டி, பாட்டுப் போட்டிகளில் பல்வேறு பரிசுகளைப் பெற்றுள்ளார். எம்.ஏ., ஆங்கிலத்தில் பெரியார் பல்கலைக்கழகத்தின் வெள்ளிப் பதக்கம் பெற்றுள்ளார். இவரது கணவர் பெயர் திரு. எஸ். பாபு. இவர் சேலம் மாவட்டம் காரிப்பட்டியில் வருவாய் ஆய்வாளராக இருந்து வருகிறார். இவர்களுக்கு 5 மாத பெண் குழந்தை ஒன்று உள்ளது. □





**திருச்சிராப்பள்ளி**
மாநகராட்சியின்
வணக்கத்திற்குரிய
மேயர்
திருமதி. **சாருபாலா**
**ஆர்.தொண்டைமான்**
அவர்களின்
வாழ்க்கைக் குறிப்பு

**தி**ருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயராக திருமதி. சாருபாலா ஆர்.தொண்டைமான் அவர்கள் இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் புதுக்கோட்டை மன்னர் அவர்களின் மருமகளும், கவிமணி பாஸ்கர தொண்டைமான் அவர்களின் பேத்தியும் ஆவார். இவர் எம்.ஏ., எம்.ஃபில், பட்டம் பெற்றவர். தற்பொழுது Women empowerment என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்கு ஆராய்ச்சி செய்து வருகிறார். இவரது கணவர் பெயர் ராஜா ராஜகோபால தொண்டைமான். இவர் மறைந்த புதுக்கோட்டை மன்னர் ஸ்ரீ பிரகதாம்பாள் தாஸ் ராஜா ராஜகோபால தொண்டைமானின் மகன் ஆவார்.

2001ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயராக வெற்றி பெற்று கடந்த 5 ஆண்டுகளாகத் திறம்பட செயலாற்றி உள்ளார்.

திருமதி. சாருபாலா ஆர். தொண்டைமான் அவர்களுக்கு பிருதிவிராஜ் தொண்டைமான் என்ற மகனும், ராதா நிரஞ்சனி தேவி என்ற மகளும் உள்ளனர். □







# திருநெல்வேலி மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் திரு. அ.லெ.சுப்பிரமணியன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் திரு. அ. லெ. சுப்பிரமணியன் அவர்கள் (வயது 68), 7.5.1938இல் பிறந்தார். இவர் பி.எஸ்.சி.,பி.எல். பட்டம் பெற்றவர். இவரது மனைவியின் பெயர் திருமதி.க.நாச்சியார். இவர்களுக்கு ஏ.எல்.எஸ். லட்சுமணன், ஏ.எல்.எஸ்.சண்முகம் என்ற இரண்டு மகன்களும், ஏ.எல்.எஸ்.லதா, குட்டிமேகலா என்ற இரண்டு மகள்களும் உள்ளனர்.

வணக்கத்திற்குரிய மேயர் திரு. அ. லெ. சுப்பிரமணியன் அவர்கள், திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் ஆவார். இவரது சொந்த ஊர் சாத்தான்குளம் அருகே உள்ள புளியங்குளம் ஆகும். படிக்கும் காலத்திலேயே பொதுநலச் சேவையில் அதிக ஈடுபாடு கொண்டவர். பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு பலமுறை சிறை சென்றவர். 1964–ஆம் ஆண்டு பாளையங்கோட்டை நகரசபை உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியிலிருந்து 1967,1989, 1996 ஆகிய ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார்.

நெல்லை கூட்டுறவு பேரங்காடித் தலைவர், பாளையங்கோட்டை நிலவள வங்கித் தலைவர், தமிழ்நாடு நிலவள வங்கி இயக்குநர், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழக சிண்டிகேட் உறுப்பினர், அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் ஆட்சிக்குழு உறுப்பினர் மற்றும் வழக்குரைஞர் சங்கத்தலைவராகவும் பணியாற்றி உள்ளார். திருநெல்வேலி சந்திப்பு ம.தி.தா. இந்துக்கல்லூரி, இந்துக் கல்லூரி மேல்நிலைப்பள்ளி செயலாளராக 14 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார். பல்வேறு உள்ளூர் சங்கங்கள் மற்றும் சேவை நிறுவனங்களிலும் பதவி வகித்து சேவை புரிந்துள்ளார். தற்போது திருநெல்வேலி மாநகராட்சியில் 40ஆவது வார்டில் போட்டியிட்டு வெற்றி பெற்று முதன்முறையாக திருநெல்வேலி மாநகராட்சி மேயராகப் பதவியேற்றுள்ளார். □





# பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு உதவித்தொகை உயர்வு

திரு. **தா.மோ.அன்பரசன்**
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

* மண்பாண்டத் தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்று இந்த அரசு, மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம் என்ற தனி வாரியத்தை உருவாக்கும்.

* உடல் உழைப்புத் தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்படும் பதிவுக் கட்டணம் 100 ரூபாய் மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வசூலிக்கப்பட்டு வரும் புதுப்பித்தல் கட்டணம் 10 ரூபாய் அறவே ரத்து செய்யப்படுகிறது.

* கட்டுமானத் தொழிலாளர் நலவாரியத்தின் உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்படும் பதிவுக் கட்டணம் 25 ரூபாய் மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வசூலிக்கப்படும் புதுப்பித்தல் கட்டணம் 10 ரூபாய் ஆகியவையும் அறவே ரத்து செய்யப்படுகிறது.

* தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள பெண் தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மகப்பேறு உதவித் தொகை 4,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் ஆண்டொன்றுக்கு 43 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

* கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்து உள்ள பெண் தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மகப்பேறு உதவித் தொகை 4,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

* தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் மற்றும் இண்டஸ் திட்டத்தின் கீழ் செயல்படும் 17 மாவட்டங்களிலும் உள்ள சிறப்புப் பள்ளிகளில் பயிலும் தேவையுள்ள குழந்தைகளுக்கு இலவச பேருந்து சலுகை வழங்கப்படும்.

* சேலம், வேலூர், மற்றும் மதுரையில் இயங்கிவரும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் புதுடெல்லி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக உதவியுடன் சித்த மருத்துவப் பிரிவு நடப்பு ஆண்டில் தொடங்கப்படும்.

* சென்னை, அயனாவரத்தில் உள்ள அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் புதுடெல்லி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக உதவியுடன் யோகா பிரிவு இந்த ஆண்டே தொடங்கப்படும்.

* * *

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

படித்து வேலை வேண்டி தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருப்போருக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் – அமல்படுத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஆர்2)துறை**

அரசாணை (நிலை) எண் : 72 நாள் : 25.08.2006

படிக்க :

1. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரின் கடிதம் எண். தி.வே / 23094 /2006, நாள்: 16.6.2006.
2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் கடிதம் எண். தி.வே./ 23094/2006, நாள் : 21.08.2006.

.........

ஆணை :

படித்து விட்டு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தும் எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் பல்லாண்டு காலமாகக் காத்திருக்கும் இளைஞர்களின் துயரினைத் துடைக்கும் வகையில் இவ்வரசின் கொள்கை முடிவிற்கிணங்க பத்தாம் வகுப்பு முடித்தவர்களுக்கு மாதம் 150/– ரூபாயும், மேல்நிலைப் பள்ளிப்படிப்பை நிறைவு செய்தவர்களுக்கு மாதம் 200/– ரூபாயும், பட்டதாரிகளுக்கு மாதம் 300/– ரூபாயும் உதவித் தொகை வழங்குவது குறித்த கருத்துரு மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரிடமிருந்து பெற்று, அக்கருத்துருவை அரசு கவனமாகப் பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

2 (i) வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை பெற தேவையான கல்வித் தகுதி மற்றும் மாதாந்திர உதவித் தொகை விவரங்கள் :–

| கல்வித் தகுதி | மாதாந்திர உதவித்தொகை |
|---|---|
| எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி | ரூ.150/– |
| +2 / மேனிலைக் கல்வி தேர்ச்சி | ரூ.200/– |
| பட்டக்கல்வி மற்றும் முதுநிலைப் பட்டக்கல்வி (பொறியியல், மருத்துவம், விவசாயம், கால்நடை மருத்துவம் போன்ற தொழிற் கல்விகள் நீங்கலாக) | ரூ.300/– |

(ii) வயது வரம்பு

வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினத்தவரைப் பொருத்த மட்டில் 45 வயது வரையிலும், ஏனையோரைப் பொருத்தமட்டில் 40 வயது வரையும் என்ற உச்ச வயது வரம்பில் 3 (மூன்று) ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

(iii) காத்திருப்புக் காலம்

பயனாளிகள், வேலைவாய்ப்பு அலுவலக உயிர்ப் பதிவேடுகளில் குறைந்தபட்சம் 5 ஆண்டு காலமாவது காத்திருக்கவேண்டும்.

**(3) வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற கையாளப்படும் நடைமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

i) வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை அதிகபட்சமாக மூன்று ஆண்டு காலத்திற்கு அல்லது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவர்களைப் பொருத்தவரையில் 45 வயது என்ற உச்ச வயது வரையிலும் மற்றும் ஏனையோர்களைப் பொருத்தவரையில் 40 வயதை கடந்திருத்தல் இதனில் எது காலத்தால் முந்தியதோ அதுவரை உதவித்தொகை வழங்கப்படும். இனமறியப்படும் காலாண்டின் இறுதி நாளன்று மேற்குறிப்பிடப்பட்டுள்ள வயது வரம்புகளைக் கடந்தவராக இருத்தல் கூடாது.

ii) வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை ஒவ்வொரு காலாண்டும் வங்கி வரைவோலைகளாக வழங்கப்படும். பயனாளிகள் வங்கிகளில் தொடங்கப்படுகின்ற சேமிப்புக் கணக்குகளின் மூலம் வங்கி வரைவோலைகளை காசாக்கிப் பெற்றுக்கொள்ளலாம்.

iii) பயனாளிகள் இணைப்பு –1ல் கண்ட சான்றிதழில் வருமானம் உள்ளிட்ட இதர அம்சங்கள் குறித்த ஒட்டு மொத்தச் சான்றிதழை வருவாய்த்துறையில் ஒருமுறை பெற்று சமர்ப்பிக்க வேண்டும். இதுதவிர, ஒவ்வொரு நிதியாண்டின் துவக்கத்திலும், 'பணியில் இல்லை', என்பதற்கான சுய உறுதி மொழியை (self affidavit) அளிக்கவேண்டும்.

iv) பயனாளிகள் வேலைவாய்ப்பு அலுவலக உயிர்ப் பதிவேடுகளில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டு காலமாவது காத்திருந்திருக்க வேண்டும். (ஐந்து ஆண்டு காலம் பயன்பெற விண்ணப்பிக்கும் காலாண்டின் கடைசி நாளன்று கணக்கீடு செய்யப்படும்) உதவித்தொகை அடுத்த காலாண்டு முதல் வழங்கப்படும். ஆனால் 31.12.2006 –வுடன் முடியும் காலாண்டிற்கான உதவித்தொகை மட்டும் இத்திட்டம் காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் – 2ஆம் தேதி தொடங்கப்படும் என சுதந்திர தின விழா உரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதால், 1–10–2006 முதல் 31–12–2006 வரையுள்ள காலாண்டிற்கான உதவித் தொகை மட்டும் முன்னதாகவே அதாவது 2–10–2006 ஆம் தேதி வழங்கப்படும்.

v) வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற விண்ணப்பிக்கும் காலாண்டின் கடைசி நாளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவர்களைப் பொருத்தவரையில் 45 வயதையும், ஏனையோர்களைப் பொருத்தவரையில் 40 ஆண்டு வயதையும், கடந்தவராக இருத்தல் கூடாது.

vi) பயனாளி அரசுத்துறை அல்லது தனியார்துறை அல்லது எந்தவிதமான ஊதியம் பெறும் பணியிலோ அல்லது சுய வேலைவாய்ப்பிலோ ஈடுபட்டவராக இருத்தல் கூடாது. பயனாளி முற்றிலுமாக வேலை இல்லாதவராக இருத்தல் வேண்டும்.

vii) பயனாளியின் தாய், தந்தை அல்லது கணவன் அல்லது மனைவி ஆகியோரின் மாத வருமானம் ரூ.2,000/–க்கு (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மிகாமலும் அல்லது ஆண்டு வருமானம் ரூ.24,000/–க்கு (ரூபாய் இருபத்து நான்காயிரம் மட்டும்) மிகாமலும் இருத்தல் வேண்டும்.

viii) பயனாளி தனது பள்ளி அல்லது கல்லூரிக் கல்வியினை முழுவதுமாக தமிழ்நாட்டிலேயே முடித்திருக்க வேண்டும். அல்லது பெற்றோரில் ஒருவர் அல்லது பாதுகாவலர் அல்லது கணவன் அல்லது மனைவி குறைந்தபட்சம் 15 ஆண்டு காலம் தமிழ்நாட்டிலேயே குடியிருந்தவராக இருத்தல் வேண்டும்.

ix) பயனாளி அரசு அல்லது தனியார் ஆதாரங்களின் வாயிலாக எந்தவிதமான நிதி உதவித்தொகையும் பெறுபவராக இருத்தல்கூடாது.

x) பயனாளி அன்றாடம் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் மாணவ, மாணவியராக (Regular Student) இருத்தல் கூடாது. இந்நிபந்தனை தொலைதூரக் கல்வி அல்லது அஞ்சல் வழிக் கல்வி கற்கும் பயனாளிகளுக்குப் பொருந்தாது.

xi) ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு 1993–இல் நிறுத்தம் செய்யப்பட்ட வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற மனுதாரர்களும் இப்புதிய வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் நிர்ணயம் செய்யப்படுகின்ற வயது வரம்புகளுக்குட்பட்டு வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

xii) பயனாளி உதவித்தொகை பெறும் காலங்களில் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினைத் தொடர்ந்து புதுப்பித்து வருபவராக இருத்தல் வேண்டும்.

xiii) வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பொறியியல், மருத்துவம், விவசாயம், கால்நடை மருத்துவம் போன்ற தொழிற் கல்வியில் பட்டம் பெற்றவர்கள் இவ்வுதவித்தொகை பெற தகுதியற்றவர்கள் ஆவர்.

## இணைப்பு – 1

**வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பயன்பெற மனுதாரர்கள் சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ் (வருமானம், வேலையில் இல்லாமை, தமிழ்நாட்டிலேயே கல்வி கற்றிருத்தல் அல்லது பெற்றோர் அல்லது பாதுகாவலர், கணவன் அல்லது மனைவி தமிழ்நாட்டில் குடியிருத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது)**

வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்டவாறான சான்றிதழ் வருவாய்த் துறையிடமிருந்து பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்:–

1. திரு/திருமதி/செல்வி ........................................................................................ என்ற வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ள மனுதாரரின் தாய்/தந்தை/கணவன்/மனைவி ஆகிய திரு/திருமதி........................................................ முகவரியில் வசித்து வருபவரின் மாத வருமானம் ரூ.2,000/–க்கு மிகாமலும் ஆண்டு வருமானம் ரூ.24,000/–க்கு மிகாமலும் உள்ளது என சான்று அளிக்கப்படுகிறது.

2. திரு/திருமதி/செல்வி...................................... என்ற வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ள மனுதாரர் அரசு அல்லது தனியார் துறையில் எந்தவிதமான ஊதியம் பெறும் பணியில் இல்லை என்றும், இவர் சுய வேலைவாய்ப்பில் ஈடுபடவில்லை என்றும் இவர் முழுவதுமாக வேலையில்லாமலேயே இருந்து வருகிறார் என்று சான்று அளிக்கப்படுகிறது.


3. திரு/திருமதி/செல்வி........................................... என்ற வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ள மனுதாரர் அரசு அல்லது தனியார்துறை அல்லது இதர ஆதாரங்களின் வழி எந்தவிதமான உதவித்தொகையும் பெற்று வருபவர் அல்லர் என்றும் சான்று அளிக்கப்படுகிறது.

4. திரு/திருமதி/செல்வி........................................... என்ற வேலைவாய்ப்பற்ற மனுதாரர் தமிழ்நாட்டிலேயே தனது பள்ளி அல்லது கல்லூரிக் கல்வியினை முடித்தவர் அல்லது இம்மனுதாரரின் பெற்றோரில் தாய்/ தந்தை அல்லது பாதுகாவலர் அல்லது கணவன் அல்லது மனைவி தமிழ்நாட்டிலேயே 15 ஆண்டுகளுக்கும் மேலாக குடியிருந்து வருபவர் என்று சான்று அளிக்கப்படுகிறது.

5. திரு/திருமதி/செல்வி........................................... என்ற வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ள மனுதாரர் அன்றாடம் பள்ளி அல்லது கல்லூரிக்குச் சென்று வரும் மாணவர் அல்லது மாணவியர் அல்ல என்று சான்று அளிக்கப்படுகிறது.

ரமேஷ்குமார் கன்னா,
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//



# அண்ணல் காந்தியடிகள்

## பிறந்த நாள் விழா




அண்ணல் காந்தியடிகளின் 138ஆவது பிறந்தநாள் விழா 2.10.2006 அன்று சென்னை, மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் தமிழக அரசின் சார்பில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தியாகச்சீலரின் பிறந்தநாளாம் இத் திருநாளில் அண்ணலின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்வதற்காக மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் காலை 7.50 மணிக்கு வருகை தந்தார்கள். மேதகு ஆளுநர் அவர்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வரவேற்றனர். முன்னதாக, காலை 7.40 மணியளவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் வரவேற்றனர்.

அண்ணல் காந்தியடிகளின் திருவுருவச் சிலையைச் சுற்றி உயரமான மேடை அமைக்கப்பட்டிருந்தது. காந்தி சேவா சங்கத்தினரின் நூற்புவேள்வி மற்றும் வழிபாட்டுப்பாடல் நிகழ்ச்சிகள் விழா மேடை அருகே நடைபெற்றன. சரியாக காலை 8.00 மணிக்கு மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களும் மேடையின் அருகில் வைக்கப்பட்டிருந்த அண்ணல் காந்தியடிகளின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி வணங்கினர். பின்னர் அண்ணலின் சிலைக்கு மேதகு ஆளுநர் திரு.சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தொட்டு வணங்கி அளித்த மாலையை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், உயர் அதிகாரிகள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

பின்னர் அண்ணல் காந்தியடிகளின் கொள்கைகள் மற்றும் பொன்மொழிகள் அடங்கிய வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகளை கையில்



ஏந்தியபடி பள்ளி மாணவ, மாணவியரின் சைக்கிள் பேரணி தொடங்கியது. சைக்கிள் பேரணியை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தொடங்கி வைத்தார். அந்தப் பேரணி சென்னை கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில் நிறைவுற்றது.

அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாள் தொடர் நிகழ்ச்சியாக சென்னை கிண்டி, காந்தி மண்டபத்தில் பொருட்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் அப்பொருட்காட்சியினைத் தொடங்கி வைத்தார்.

பூம்புகார் விற்பனைப் பிரிவு, அணு ஆயுத எதிர்ப்பு இயக்கம், சென்னை சர்வோதய சங்கம், ஆவின், தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம், பிரம்ம குமாரிகள் அமைத்திருந்த படக்காட்சி அரங்கம், இந்திய செஞ்சிலுவைச் சங்கம், காந்தி கல்வி நிலையம், பாரேரி மகளிர் சுய உதவிக்குழு, காட்டாங்கொளத்தூர் நேசம் மகளிர் சுயஉதவிக்குழு, உள்ளிட்ட அரங்கங்கள் இப்பொருட்காட்சியில் இடம் பெற்றிருந்தன. காலை நிகழ்ச்சியின் இறுதிகட்டமாக தகவல் தொடர்புத்துறை, இந்திய அரசு சார்பாக அண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கை வரலாறு, சுதந்திரப் போராட்ட வரலாறு குறித்த புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதிஇளம்வழுதி அவர்கள் திறந்து வைத்தார்.

இக்கண்காட்சியின் மூலம் இளைய தலைமுறையினர் சுதந்திரப் போராட்ட தியாக வரலாற்றையும், அண்ணல் காந்தியடிகளின் அறப்போர் நிகழ்வுகளையும் அறிந்து கொள்ள முடிந்தது.

அன்று மாலை 5.00 மணியளவில், கிண்டி காந்தி மண்டபத்தில், அண்ணல் காந்தியடிகளின் 138ஆவது பிறந்தநாள் விழா நடைபெற்றது. காந்தியடிகளின் பிறந்தநாளை முன்னிட்டு நடத்தப்பட்ட பள்ளி, கல்லூரி மாணவ–




மாணவிகளுக்கான பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி, மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் விழாப்பேருரையாற்றினார்கள்.

முன்னதாக, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் வரவேற்புரையாற்றினார். பள்ளி, கல்லூரி மாணவ–மாணவிகளின் தீண்டாமை ஒழிப்பு, தேசிய ஒருமைப்பாடு, உலக அமைதி மற்றும் மதநல்லிணக்கம் தொடர்பான கலை நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற்றன.

நிறைவாக, செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலர் திரு.வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

விழாவின் முடிவில், அண்ணல் காந்தி பற்றிய திரைப்படம் திரையிடப்பட்டது.

# காந்தியடிகள் வாழ்வில்...



## "ஏழ்மை" யை ஏற்றவர் பரிசு வழங்கக் கூடாது

சபர்மதி ஆசிரமத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி. ஒருநாள் அன்னை கஸ்தூரிபாவின் அறையில் ஒரு திருடு நடந்துவிட்டது. திருடர்கள் துணிமணிகளடங்கிய இரண்டு பெட்டிகளை எடுத்துச் சென்று விட்டார்கள். அவற்றிலிருந்த துணிகளை மட்டும் எடுத்துக் கொண்டு பெட்டிகளைப் பக்கத்திலுள்ள வயற்காட்டில் எறிந்து விட்டு சென்று விட்டார்கள்.

காந்தியடிகள் இதை அறிந்ததும் கஸ்தூரிபாவிடம், "இரண்டு பெட்டிகள் நிரம்பத் துணிகள் எப்படி சேர்ந்தன? நீ தினுசு தினுசான துணிகளை அணிவதில்லையே!" என்று வினவினார்.

உடனே அன்னை, காந்தியடிகளிடம் தங்கள் பேத்திகளான ராமி, மனு (இருவரும் காந்தியடிகளின் மூத்த புதல்வர் ஹரிலாலின் மகள்கள்) தம் தாயை இழந்த பின் அங்கே அடிக்கடி வருவதை நினைவு படுத்தினார். "அவர்கள் இங்கே வரும்போது அவர்களுக்குக் கொடுப்பதற்கு ஓரிரு ஆடைகள் வேண்டுமல்லவா! இதற்காகவே சில சேலைகளையும், கதராடைகளையும் வைத்திருந்தேன்" என்று கூறினார்.

காந்தியடிகள் அதற்கும் ஒரு மறுப்புக் கூறினார். "நாம் துணிகளை சேகரித்து வைத்துக் கொள்ள முடியாது." வேண்டிய அளவுக்குத்தான் நம்மிடம் வைத்துக் கொள்ள வேண்டும். கைவசம் அதற்கு மேல் துணிகள் இருக்குமானால் அவற்றை ஆசிரமத்தின் அலுவலகத்தில் கொடுத்து வைத்திருப்பதே சரி என்று கூறி முடித்தார்.

காந்தியடிகள் இத்துடன் திருப்தியடையவில்லை. அன்று மாலை வழிபாட்டுக் கூட்டத்தில் இவ்விஷயத்தைப் பற்றி விவாதித்தார். விவாதத்திற்கிடையே அவர் சொன்னார்: "நம்போன்றவர்கள் அளவுக்கு மேல் சேகரித்து வைக்கும் பழக்கத்தை மேற்கொள்ளக்கூடாது. பெண்கள் வீட்டிற்கு வந்தால், நன்றாகச் சாப்பிடட்டும்" ஆனால் நம்மை போன்று "ஏழ்மை" நோன்பு கொண்டவர்கள் தங்கள் பெண்களுக்கு வெகுமதி அளிப்பது பொருத்தமற்றதாகும்.

## இந்த விளக்கைக் கொண்டு வந்தவர் யார்?

சேவாக்கிராமத்தில் காந்தி ஜெயந்தி கொண்டாடப் பட்டது. மாலைப் பிரார்த்தனைக்குப்பின் காந்திஜி பேசவிருந்ததால், சுற்றுப்புறத்து கிராமங்களிலிருந்து மக்கள் திரண்டு வந்திருந்தனர்.

காந்திஜி சரியான நேரத்தில் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வந்தார். எதிரில் ஒரு நெய்விளக்கு எரிந்து கொண்டிருப்பதைக் கண்டார். அது புதிய பழக்கம். எனவே இமை கொட்டாமல் சில நிமிடங்கள் அதையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு பிரார்த்தனையை ஆரம்பித்தார். அதில் ஆழ்ந்துபோனார்!

வழிபாட்டை முடித்துக்கொண்டு பேச ஆரம்பித்தார். சுற்றிலும் அமைதி நிலவியது. தம்முடைய பிறந்த தினத்தன்று, காந்திஜி என்ன பேசவிருக்கிறார் என்பதைக் கேட்ட அனைவரும் ஆவலாய் இருந்தனர். ஆனால் காந்திஜி திடீரென்று ஒரு கேள்வி கேட்டார். " இந்த விளக்கை யார் கொண்டு வந்தார் ?" அருகிலிருந்த அன்னை கஸ்தூரிபா, "நான் கொண்டுவந்தேன்" என பதிலளித்தார். " எங்கிருந்து கொண்டு வந்தாய் ?" என வினவினார் காந்திஜி.

"கிராமத்திலிருந்து கொண்டு வந்தேன். இன்று தங்களுடைய பிறந்த நாளல்லவா ?" என்று அன்னை கஸ்தூரிபா பதில் கூறினார்.

காந்திஜி சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு கம்பீரமாகச் சொல்லலானார். "இன்று கஸ்தூரிபா நெய்விளக்கு ஏற்றியிருப்பது ஒரு தவறான செயல். என்னுடைய பிறந்தநாளை முன்னிட்டு அது ஏற்றப்பட்டிருக்கிறது. அக்கம் பக்கத்து கிராமங்களில் வசிக்கும் மக்கள் எவ்வளவு ஏழ்மையில் வசிக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். பாவம்! அவ்வேழைகளுக்கு சோளம், கேழ்வரகு ஆகிய ரொட்டிகளைச் சாப்பிடும்போது தொட்டுக்கொள்ள எண்ணெய் கூடக் கிடைப்பதில்லை. அப்படியிருக்க என்னுடைய ஆசிரமத்தில் நெய் விளக்கு ஏற்றப்பட்டிருக்கிறது. ஏழைக் குடியானவர்கட்குக் கிடைக்க மாட்டாத பொருள்களை நாம் இவ்வாறு வீணாக்குவதா ?" என்று காந்திஜி கூறிமுடித்தார். அச்சொற்களில்தான் என்ன துயரம்!

## குழந்தைகளைப் போலக் கற்பனை செய்யக்கூடாது

சத்தியாக்கிரகப் போராட்டம் நடந்து கொண்டிருந்த காலத்தில் ஒரு தடவை காந்திஜி 'கராடி' என்ற ஊரில் தங்கியிருந்தார். ஒருநாள் கிராம மக்களின் கூட்டம் ஒன்று ஊர்வலமாகச் சென்று கொண்டிருந்ததைப் பார்த்தார் காந்திஜி. ஊர்வலத்தின் முன்னிலையில் பெண்கள் தேசியக் கொடியை ஏந்தியிருந்தனர். கொட்டும் முழங்கிக்கொண்டிருந்தது. "இவர்கள் சத்தியாகிரகம் செய்யப் போகிறார்களா ? அப்படியென்றால் ஆண்களின் கைகளில் பழங்கள் பூக்கள் முதலியன ஏன் ?" என்று காந்திஜி சிந்திக்கலானார்.

இவ்வாறு சிந்தித்துக்கொண்டே வெளியே வந்த போது கூட்டத்தினர் "வாழ்க" "வாழ்க" என்று கோஷமிட்டுக் கொண்டு வந்து அவரை வணங்கி நின்றனர். மேலும் தாங்கள் கொண்டுவந்த வெகுமதிகளை மலரடிகளில் சமர்ப்பித்தார்கள்.

"நீங்கள் வந்த நோக்கம் என்ன? இந்த மேளக்கொட்டு ஏன் ?" என்று காந்திஜி அவர்களைக் கேட்டார்.


ஊர்வலத்தின் முன் வந்த தலைவர், காந்திஜியிடம் "மகாத்மாஜி, எங்கள் கிராமத்தில் தண்ணீர்ப் பஞ்சம் எப்போதும் இருந்து வந்தது. கோடைக்காலமும் வந்து விட்டது. கிணறுகள் வற்றிப்போய் விட்டன. ஆனால் நீங்கள் இங்கே வந்ததும் நிலைமை முற்றும் மாறிவிட்டது. இக்கிராமத்தில் தங்கள் திருவடிகள் பட்டதும் கிணறுகளில் தண்ணீர் பெருகி வந்து விட்டது. எனவே, எங்கள் நன்றியைத் தெரிவிக்கவே இந்தப் பரிசுகளைக் கொண்டுவந்துள்ளோம்" என்று மிக்க பணிவன்புடன் கூறினார்.

காந்திஜி சற்றுக் கடுமையான குரலில் "நீங்கள் என்ன பைத்தியக்காரர்களா? என் வருகைக்கும் இந்த தண்ணீருக்கும் என்ன தொடர்பு? கடவுளை நான் பணிக்க முடியுமா ? ஆண்டவனிடம் உங்கள் குரலுக்கும் என் குரலுக்கும் ஒரே மதிப்புத்தான் என்பதை அறியமாட்டீர்களா ?" என்று வினவினார்.

கிராம மக்கள் இதைக்கேட்டுத் தலை குனிந்தனர். காந்திஜி சிரித்துக் கொண்டே சொன்னார், "நண்பர்களே! ஒரு மரத்தின் மேல் ஒரு காகம் உட்கார்ந்த நேரத்தில், தற்செயலாக அம்மரத்தின் கிளையொன்று முறிந்து விட்டால், அதற்குக் காரணம் அக்காகமே என்று நீங்கள் சொல்வீர்களா ? உங்கள் கிராமக் கிணறுகளில் தண்ணீர் பெருகுவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஒருக்கால் பூமிக்கடியில் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கலாம்! அதனால் புது ஊற்றுக் கிளம்பியிருக்கலாம்! நீங்கள் இவ்வாறு குழந்தைகளைப் போன்று கற்பனை செய்யக் கூடாது. சரி, நீங்கள் எல்லோரும் இராட்டையினால் நூல் நூற்க வேண்டும். பாரத அன்னைக்கு நிறைய ஆடை தேவை," என்று உழைக்க வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார்.

*(காந்திஜி வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள் (பாகம் 6) நூலிலிருந்து)*

★ ★ ★



# மரங்களின் கதை

ஹம்பி எக்ஸ்பிரஸில் பிரயாணம் செய்தபோது சந்தித்த நபரின் முகம் ஞாபகத்தில் இல்லை. ஆனால் அவர்தான் எனக்கு இக்கதையைச் சொன்னார். சுவாரஸ்யமாகவும், தெளிவான குரலிலும் அக்கதையை விவரித்தார் அவர். சதாகாலமும் என்னை அரிக்கும் குழப்பம் எதுவும் அவரிடம் இல்லை. மரங்களைப் பற்றித்தான் அவர்க்கு எத்தனை ஞானம். எத்தனை அனுபவம். எத்தனை வருசங்கள் பாடுபட்டுச் சேகரித்த அனுபவமோ, அவரது ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு முத்துக்குச் சமம். அவர் சொன்ன கதையின் பிரமிப்பு என்னைவிட்டுச் சற்றும் அகலவில்லை. முதன்முதலில் அந்தக் கதையை என் மனைவியிடம்தான் பிரஸ்தாபித்தேன். அவளோ சிரித்துவிட்டாள். நம்பிக்கையற்ற அவள் பார்வை என்னை நிலைகுலைய வைத்தது. அன்றைய தேதியில் நான் எங்கும் பிரயாணமே செய்யவில்லை என்றும் யாரையும் சந்திக்கவே இல்லை என்றும், ஆணித்தரமாய்ச் சொன்னாள். அவள் சொன்ன பிறகு நம்பத்தான் வேண்டியிருந்தது. நீங்கள் வேண்டுமானால் சந்தேகிக்க இடமுண்டு என்ற வகையில் இதை எடுத்துக் கொள்ளலாம்.

சந்தேகம் என்று வந்துவிட்ட பிறகு இன்னொரு விசயத்தையும் சொல்லிவிடுகிறேன். முழுக்க முழுக்க அவர் பேசியது மரங்களைப் பற்றித்தான் என்றாலும் நிசமாகவே அவை மரங்களைத்தான் குறிக்கிறதா அல்லது வேறு ஏதேனும் உள் அர்த்தம் உண்டா என்று தெரியவில்லை. ஒரே ஒரு வார்த்தை நான் அவரிடம் அன்று கேட்டிருந்தால் இந்தப் பிரச்சனையே வந்திருக்காது. ஏனோ அன்றைய தினத்தின் அளவு கடந்த பிரமிப்பு என்னை உறையவைத்து என் நாக்கையும் கட்டிவிட்டது. எல்லாம் முட்டாள் தனம்தான். ஆகவே மரமா அல்லது வேறா என்கிற கேள்விக்கு நீங்களே பதிலை முடிவு செய்து கொள்ளலாம். போடா, நீயும் உன் கதையும் என்று உதறியும் செல்லலாம். பூரண சுதந்திரம் உண்டு.

ஓடும் ரயிலில் சன்னலோர இருக்கை கிடைப்பது போன்ற அதிர்ஷ்டம் வேறெதுவும் இல்லை. நகரும் புகைப்படங்கள் போல காட்சிகள் மடமடவென்று மாறும் அற்புதத்தைக்காண கோடிக்கண்கள் வேண்டும். அன்றும் அப்படித்தான் வேடிக்கை பார்த்தபடி இருந்தேன். சுற்றிலும் நிறைய மரங்கள் உயர்ந்தவை. தாழ்ந்தவை. உலர்ந்தவை. பட்டுப் போனவை. கிளைகள் முறிந்தவை. வளைந்து சாயந்தவை. பச்சையோடும்; பச்சையைப் பறிகொடுத்தும் நிறைய மரங்களைக் காணும் போது என் மனத்தில் உருவான உணர்ச்சிகளைச் சொல்ல முடியாது! அப்போதுதான் அவர் என்னைக் கவனித்திருக்க வேண்டும். என்னைத் தொட்டு 'மரங்களைப் பார்க்கிறீர்களா ?' என்றார்.

எதிர் இருக்கைக்காரர் அவர். என் பார்வையை அவர் பக்கம் திருப்பினேன். அவர் கண்கள் என்னை ஈர்த்தன. அவர் வார்த்தைகளைக் கேட்க வேண்டும் போல ஒரு உந்துதல். என் செவிகளையும் மனசையும் முழுக்க முழுக்க அவர் வசம் ஒப்படைத்தேன். அவர் பார்வையிலும், பேச்சிலும் ஏதோ ஒரு மயக்கம் உண்டாக்கும் சக்தி இருந்தது. ஒரு வினாடி பார்வையிலேயே கூட கட்டுப்பட வைக்கிற பேராற்றல். மரங்களைப் பற்றி மெல்ல பேச ஆரம்பித்தார்.

பாவண்ணன்

மரங்கள் இந்த உலகைச் செழுமையாகவும், பசுமையாகவும் வைத்திருக்கும் சக்தி. மரமே சக்தியின் அடையாளம். தன்னலம் கருதாதவை மரங்கள். அவை கொடுக்கும் நிழல்கள் தாய்மையுள்ளம் கொண்டவை. நிழலின் அடைக்கலத்தில் எத்தனையோ கோடி உயிர்கள் இளைப்பாறுகின்றன. அவை வழங்கும் காய்களும், கனிகளும் பிரதிபலன் எதிர்பார்க்காதவை. காலத்தின் கழிப்பில் ஒரு கட்டத்தில் இலைகள் இழந்து வெறுமையில் ஆழ்ந்தாலும் தளராமல் நிமிர்ந்து நிற்கும் அவை. காலத்தையே மீண்டும் பசுமையைக் கொண்டு வந்து போர்த்தச் செய்துவிடும் ஆற்றல் கொண்டவை. மரம் ஒரு தெய்வம், மரம் ஒரு ஆலயம்.

இதையெல்லாம் கேட்கக் கேட்க யார்க்குத்தான் ஆச்சரியமாய் இருக்காது. நானோ சொக்கிவிட்டேன். அதுவரையிலும் மரம் என்றால் நிழல் கொடுக்கும் படைப்பு என்பதுதான் என் மனசில் இருந்த பிம்பம். அதை உடனடியாய் விஸ்தரித்துக் கொள்ள வேண்டியிருந்தது. வானிலிருந்து சிறகுகள் அசைய வந்து உட்கார்ந்த தேவதைகள் போல இருந்தன மரங்கள். காற்றின் வேகத்தில் சிலிர்த்தன அவை.



மீண்டும் அவர் பேச ஆரம்பித்தார்.

மரங்கள் எல்லாமே ஒன்றுதான். அவற்றில் மையமாகப் பொதிந்திருக்கும் சக்தியைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் கண்ணுக்குப் புலப்படாத அந்த சக்தியைப் பற்றி யார் கவலைப்படுகிறார்கள்? கண்ணுக்குத் தெரியும் உருவங்கள்தானே மதிப்பிடப் படுகின்றன. மரங்கள் வித்தியாசப்படுகின்றன. இன ரீதியாக வகைப்படுத்தப்படுகின்றன. இலைகளின் வடிவம், பூக்கள், காய்கள், தண்டு அமைப்பு எல்லா உறுப்புகள் ரீதியாகவும் வகைப்படுத்தப்படுகின்றன. வகைப்படுத்தப்பட்ட மரங்களிலும் கூட ஏற்ற இரக்கம். இந்த தோப்பு மரங்கள் உயர்வு. இந்த தோப்பு மரங்கள் தாழ்வு. அதிலேயே தோப்பில் சேராத சின்னச்சின்ன மரங்கள் தனி மரங்கள். பகுப்புகள். பகுப்புகள். பகுப்புகள். மரங்களின் ஆற்றல் மலினப் படுவதே இந்தப் பகுப்பால் தான். நஷ்டங்களை ஏனோ மரங்கள் உணர்வதில்லை. சுவாசிக்கக் காற்றும், நிற்க மண்ணும் இருக்கிற ஆறுதலில் எந்த நஷ்டமும் பொருட்படுத்தத்தகாததாக ஆகி விடுகிறது. வாய்த் தகராறுகளையும், அடிதடிகளையும் கூட பொருட் படுத்தாத நினைக்காத அளவுக்கு அது போய்விடுகிறது.

மரங்களை வளர்ப்பதே பெரிய கலை என்றார் அவர். சில மரங்களை விதையிலிருந்தே வளர்க்க வேண்டும். உதாரணத்திற்கு புளிய மரங்கள். இன்னும் சில மரங்களுக்கோ விதைகள் தேவையில்லை, சின்ன கிளைகள் போதும், உதாரணத்திற்கு முருங்கை மரம். முதலில் இந்த வித்தியாசத்தை அறிய வேண்டும். விதை வைக்க வேண்டிய மரத்தை கிளையிலிருந்தோ, கிளை வைக்க வேண்டிய மரத்தை விதையிலிருந்தோ உருவாக்கிவிட முடியாது என்று திட்டவட்டமாய்ச் சொன்னார். இதுவே மரம் வளர்ப்பில் பாலபாடம் என்றார். இது தெரியாமல் பாலம் விரயம் செய்தவர்கள் ஏராளம் என்று சரித்திரத்தை உதாரணம் காட்டினார்.

சில விசயங்களுக்குச் சொந்த புத்தி வேண்டும். சில விசயங்களுக்குச் சொல்புத்தி வேண்டும். இரண்டும் இல்லாதவர்களால் ஒரு காரியமும் ஒரு போதும் ஆனதில்லை என்றார். விதையோ, கிளையோ நடும் முன்பு முக்கியமாய் கவனிக்கப்பட வேண்டிய விசயங்கள் வெளிச்சமும்,

ஈரமும். இரண்டுமற்ற இடத்தில் விதைத்துவிட்டு விளைச்சலை எதிர்பார்ப்பது அடிமுட்டாள்தனம் என்றார். இன்னொரு விசயம் இடைவெளி. ஒவ்வொரு விதையும் சரியான இடைவெளியில் நடப்பட வேண்டும். வளர்ந்த மரம் தன் முழு ஆகிருதியையும் காட்டிக் கொண்டு எழுந்து நிற்கிற அளவு இடம் வேண்டும். சுதந்திரமாக எங்கும் திரும்பவும்; வளையவும், நெளியவும் தக்க இடம் வேண்டும். அப்போதுதான் அதன் பயனை நாமும் முழுசாக அனுபவிக்க இயலும். அதை நெருக்கடியில் தவிக்க வைத்துவிட்டு பலனை எதிர்பார்த்தால் பூச்சியம்தான் கிடைக்கும். இதெல்லாம் மரவளர்ப்பில் அடிப்படையான விசயங்கள் என்றார். 'எல்லாம் தெரியும்' என்று இவ்விஷயத்தில் அசமந்தமாய் இருப்பவர்கள் கண்டிப்பாய் ஏமாந்து போவார்கள்.

விதையையோ, கன்றையோ ஊன்றும் முன்பு செய்ய வேண்டிய முக்கிய விசயம் பூசை. கொத்தி சீராக்கப்பட்ட இடத்தை வணங்க வேண்டும். 'ஆளாகி நின்று எங்களைக் காப்பாற்று' என்று தொட்டுக் கும்பிட வேண்டும். அப்புறம்தான் நட வேண்டும். ஒருவர் நட்டக் கன்றுகளைக் காப்பாற்றுவது அவர் கடமை. ஒருகாலும் இன்னொருவர் தீண்ட இடம் தரலாகாது. காற்று, மழை, வெள்ளம், ஆடு, மாடு, திருடன் என்று எத்தனை எத்தனை தொந்திரவுகள் எல்லாவற்றிலிருந்தும் கண்ணைப்போல காப்பாற்றி வரவேண்டும். 'என்னுடையது' என்று ஒரு அபிமானம் மனசில் விழவேண்டும். நம்மைக் கண்டதும் வளைந்து நெளிந்து அது தலையசைக்கிற அளவுக்கு மரங்களுடன் பரிச்சயத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

முடியும் போதெல்லாம் வளரும் மரங்களுக்கு தண்ணீர் ஊற்றி எரு, உரம் வைக்க வேண்டும். பூச்சிகள் அரிக்க விட்டுவிடக்கூடாது. அதுதான் அக்கறையின் அடையாளம். கவனமுடன் இருக்கவேண்டும் என்றார். இதில் தயக்கம் காட்டவே கூடாது என்று திட்டவட்டமாய்ச் சொன்னார். இந்த வழங்குதல்தான் மரங்களுக்கும், ஒருவர்க்கும் நல்ல உறவை ஸ்தாபிக்க வைக்கும் என்றார். ஏதாவது ஒரு காலத்தில் யாருக்கும் உரிமை என்கிற பிரச்சினை வரும்போது இந்த 'உறவுதான் கொடுத்து உதவும்' என்றார். ஒரு மரம் வளர்ப்பவனுக்கு பல நிலைகளில் தூர ஆலோசனைகள் தேவை என்று சொன்னார்.

கனி தரும் மரங்கள் எனில் பூவும், பிஞ்சுமாய் பெருகி நிற்கிற காலத்தில் இருந்தே எச்சரிக்கை கொள்ள வேண்டும். இருபத்துநான்கு மணி நேரமும் அதன் மேலேயே கண்வைத்திருக்கவேண்டும். வேலிகளைப் புதுப்பிக்க வேண்டும். காவலைப் பலப்படுத்தவேண்டும். கனியும் காலத்தில் விழிப்புணர்வு தேவை. அடுத்தவர் உழைப்பைத் தட்டிச் செல்லும் ஆள்கள் நிறைந்த காலமாயிற்றே. எந்த நேரத்தில் எது நடக்கும் என்று சொல்ல முடியாது. ஒவ்வொரு கனியும் பாடுபட்டவனையே சேர வேண்டும்.

மரம் வளர்ப்பவனின் இன்னொரு சிக்கல் தினந்தோறும் அதனடியில் குவியும் சருகுகளைப் பெருக்கி வாருவதும் கூடு கட்ட வரும் பறவையினங்களின் கூச்சலை ரசிக்கிற மாதிரி வேஷத்தோடு சகித்துக் கொள்வதும்தான். உள்ளுக்குள் கசப்பு. வெளியே ரசனைத் தோற்றம். இரண்டையும் சாமர்த்தியமாய்ச் செய்ய வல்லவனையே மரங்களின் பலன் சாரும் என்றார். அவனது முழுத் திறமையும் இந்த மாறு வேஷத்தில்தான் வெளிப்பட வேண்டும் என்றார்.

பொய்யோ, மெய்யோ சத்தியங்களுக்கு அஞ்சக் கூடாது என்பது இன்னொரு விஷயம் என்று குறிப்பிட்டார் அவர். இதோ கனி பழுத்துவிடும் என்று சத்தியம் செய். யார் வந்து கேட்டாலும் இந்த சத்தியத்தை திரும்பத் திரும்பச் செய்யவேண்டும். தேவையெனில் வார்த்தைகளை மாற்றி மாற்றி சத்தியம் செய்ய வேண்டும். நம்பும்படியாய் சத்தியம் செய்பவனே நல்ல பலனை அடையமுடியும். "பொய் சத்தியம் தப்பில்லையோ" என்று நடுவில் இடைமறித்தேன். லௌகிக நோக்கில் தப்பாக இருக்கலாம். ஆன்மீக ரீதியில் யோசித்தால் இது சரியாகும் என்றார். "எப்படி" என்றேன். எதிராளி ஒருவன் தினந்தோறும் இது காய்க்காது, இது பயனற்றது, இது வீண் என்று முன்னால் நின்று



சொல்லிக் கொண்டு இருக்கும் நிலையை எப்படி எதிர்கொள்வது. சுய நம்பிக்கையை விடாமல் இருக்கவும், சுற்றி இருக்கிறவர்களை நம்ப வைக்கவும் அவன் போராட வேண்டி இருக்கிறது. அவனுக்குத் தெரியாதா, கனிதர நாளாகும் என்று, ஆனால் ஒரு நம்பிக்கையின் பொருட்டு ஆவேசமான சத்தியம் அவசியமாகிறது என்றார். விவாதிக்கும் அவர் திறமையில் நான் நெகிழ்ந்து உட்கார்ந்திருந்தேன்.

மரம்வளர்க்கிறவனுக்குத் தெரிந்திருக்க வேண்டிய இன்னொரு முக்கிய கலை மரம் வெட்டுதல் என்றார். நான் திகைத்துவிட்டேன். அவரோ எந்த உணர்ச்சியையும் பிரதிபலிக்காமல் இருந்தார். "அழிக்கத் தெரிந்தவனுக்குத்தான் வளர்க்கவும் முடியும்'' என்று மீண்டும் அடித்துச் சொன்னார். சமயங்களில் ஒரு தோப்பு மரம் தோப்புக்குரியவனின் சகல கட்டுப் பாடுகளையும் மீறி அடுத்த தோப்புக்களுக்கு பயன் கொடுத்துவிடும். இப்படி ஒரு கோணல் புத்தி மரத்தை எப்படிச் சகித்துக் கொள்வது? அப்புறம் தோப்புக்கு வெளியே சில ஒற்றை மரங்கள் இருக்கும். அது செய்யும் அட்டகாசங்கள் அளவு கடந்தவை. தன் கிளைகளைத் தோப்புக்குள் நீட்டி மற்ற மரங்களின் வளர்ச்சியைக் கெடுக்கும். இதற்கு எப்படி இடங்கொடுப்பான் ஒரு உரிமையாளன். அழிப்பது தவிர வேறு வழியில்லை. அவையோ தந்திரமோ, செயல் நுணுக்கமும் வேண்டும். காரியங்கள் மெல்ல மெல்ல ஒரு கதையை அவிழ்த்துவிடு. ஏதேனும் ஒரு புரளியினால் முதலில் அந்த பிம்பத்தினை உடை. யார் ஆதரவு கொடுக்கிறார்களோ; அவர்கள் கையாலேயே அழியுமாறு தந்திரங்களை உபயோகி அழியும்போது அழிவுக்காக எல்லாரோடும் சேர்ந்து பொய்க் கண்ணீர் வடித்துக் கதறுவதுதான் தந்திரத்தின் உச்சக்கட்டம் என்றார்.

அடுத்த ஸ்டேஷன் நெருங்கிக் கொண்டிருந்தது. அவர் பெட்டிகளை எடுத்து வெளியே வைத்தார். சாய்மானத்துக்கு உதவியாய் இருந்த தலையணையிலிருந்து காற்றைத் திறந்து வெளியேற்றிவிட்டு கச்சிதமாய் மடித்துப் பெட்டிக்குள் அடுக்கினார். அவர் இன்னும் பேச மாட்டாரா என்று நான் வெகு ஆவலுடன் அவர் முகத்தையே பார்த்திருந்தேன். ஸ்டேஷன் நெருங்குவதற்குள் மரத்தின் ரகசியங்களை எல்லாம் அவரிடம் இருந்து அறிந்து கொள்ள வேண்டும் என்கிற கட்டுக் கடங்காத ஆவல் என்னை இயக்கியது. வண்டியின் வேகம் நிதான கதியை அடைந்தபோது வெளியே தலைகள் தென்படத் தொடங்கின. புறப்படத் தயாராய் எழுந்து நின்ற அவர் கடைசி முறையாய் என்னைப் பார்த்து "யார் வேண்டுமானாலும் மரம் வளர்க்கலாம். நீ, நான்; இந்த உலகத்தில் பிறந்த எல்லார்க்கும் மரம் வளர்க்கிற உரிமை இருக்கிறது. ஆனால் எல்லார் கையிலும் மரம் வளர்ந்துவிடாது தெரியுமா. மரத்துக்கும் ஒருவனிடமும் வளர இஷ்டம் வேண்டும். வளர்க்கிறவனும் பிரியப்பட்டு, மரமும் இஷ்டப்பட்டால்தான் வளரும். அதுதான் தோப்பாகும். பலன் கொடுக்கும். மற்றதெல்லாம் சும்மா வீண் வேலை புரிந்ததா'' என்றார்.

உறைந்து போன நிலையில் அவர் போகும் திசையையே பார்த்தபடி இருந்தேன் நான் வண்டி மீண்டும் புறப்பட்டுவிட்டது.

*(சாகித்ய அக்காதெமி வெளியிட்ட "நவீன தமிழ்ச் சிறுகதைகள்" நூலிலிருந்து...)*

★

# 500 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு விழா




**திரு. கே.ஆர்.பெரியகருப்பன்**
மாண்புமிகு இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்

- பழனிமலை அடிவாரத்திலிருந்து மலைமேல் உள்ள அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்குச் செல்ல தற்போது உள்ள ஒரு கம்பிவட ஊர்தி திருவிழாக்காலங்களில் போதுமானதாக இல்லாததால் பக்தர்கள் நீண்ட நேரம் காத்திருக்க நேர்கிறது. இதனைத் தவிர்க்க மேலும் ஒரு கம்பிவட ஊர்தி ரூ. 6 கோடி செலவில் அமைக்கப்படும்.
- மலை மீது அமைந்துள்ள சோளிங்கர் அருள்மிகு லட்சுமிநரசிம்மசுவாமி திருக்கோயிலுக்கு பக்தர்கள் சென்றுவர மலை அடிவாரத்திலிருந்து சுமார் ரூ. 5 கோடி செலவில் கம்பிவட ஊர்தி அமைக்கப்படும்.
- சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்குப் பெருந்திரளாக பக்தர்கள் வருவதைக் கருத்தில் கொண்டு சுமார் ரூ.10 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.
- திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு செய்வதை ஊக்குவிக்க 1996–2001 ஆம் ஆண்டுகளில் தமிழில் போற்றி நூல்கள் இத்துறையால் அச்சிடப்பட்டு அர்ச்சகர்களின் பயன்பாட்டுக்காக இலவசமாக வழங்கப் பட்டன. அப்போற்றி நூல்களை மீண்டும் அச்சிட்டு அனைத்து திருக்கோயில் களுக்கும்,திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கும் இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- தமிழகத்தில் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை தரும் முக்கிய வழிபாட்டு மற்றும் சுற்றுலாத் தலங்களான பழனி மற்றும் கொடைக்கானல் நகரங்களிடையே பழனி திருக்கோயில் நிருவாகத்தால் கம்பி வட ஊர்தி (Rope Car) திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட ஆய்வு மேற்கொள்ளப்படும்.
- திருவாரூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலில் 100 ஆண்டுகளுக்கு மேலாக அம்மன் தேர் இன்றி சப்பரத்தில் தேரோட்டம் நடைபெற்று வருகிறது. ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் அம்மன் திருத்தேர் புதியதாக செய்யப்படும்.
- ஒருகால பூசை கூட செய்ய இயலாத நிதி வசதியற்ற திருக்கோயில்களில் ஒரு கால பூசை நடைபெறுவதற்கு உதவும் வகையில் "ஒரு காலபூசைத் திட்டம்" செயல் பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தின் கீழ் 10,447 திருக்கோயில்கள் பயன் அடைந்து வருகின்றன. இந்த நிதியாண்டில் மேலும் 500 திருக்கோயில்களில் ஒரு கால பூசைத் திட்டம் செயல்படுத்தப்படும்.
- எதிர் வரும் 2007–ஆம் ஆண்டில் 500 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு விழா நடத்தப்படும்.

* * *

# மதுரையில் நெசவுப்பூங்கா



திரு. என்கேகே.பி.ராஜா
மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்

✶ வாடிக்கையாளர்களின் விருப்பத்திற் கேற்பவும், விற்பனையை மேம்படுத்தவும் அகமதாபாத்தில் உள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனத்தின் துணையுடன் 25 இலட்சம் ரூபாய் செலவில் 500 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டு நெசவாளர்களுக்கு அளிக்கப்படும்.

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் சீரிய அறிவுரைகளின்படி, மத்திய அரசோடு இணைத்து ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா திட்டத்தின் கீழ் 300 கோடி ரூபாய் செலவில் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ள மூன்று நெசவுப் பூங்காக்களில் ஈரோடு, மற்றும் குமாரபாளையம் ஆகிய பகுதிகளில் இரண்டு பூங்காக்கள் அமைக்கப்படுகின்றன. மூன்றாவது நெசவுப் பூங்கா மதுரையில் விரைவில் அமைக்கப்படும்.**

✶ முத்தமிழறிஞர் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் "கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பணியிடச் சூழ்நிலைகளை மேம்படுத்தவும் 5,000 தறிக் கூடங்கள் மற்றும் 100 வீடுகள் நடப்பு ஆண்டில் கட்டித்தர அனுமதி வழங்கியுள்ளார்கள்.

✶ அமைப்புசாரா கைத்தறி நெசவாளர் களுக்கும், நல்வாழ்வுத் திட்டத்தின் பயன்கள் சென்றடையும் வகையில் மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தில் 75 ஆயிரம் நெசவாளர்களும், நல்வாழ்வு காப்பீடுத் திட்டத்தின் கீழ் 70 ஆயிரம் நெசவாளர்களும், கூடுதலாக சேர்க்கப் படுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✶ மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் சீரிய அறிவுரைகளின்படி, மத்திய அரசோடு இணைத்து ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா திட்டத்தின் கீழ் 300 கோடி ரூபாய் செலவில் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ள மூன்று நெசவுப் பூங்காக்களில் ஈரோடு மற்றும் குமார பாளையம் ஆகிய பகுதிகளில் இரண்டு பூங்காக்கள் அமைக்கப் படுகின்றன. மூன்றாவது நெசவுப் பூங்கா மதுரையில் விரைவில் அமைக்கப்படும்.

✶ எல்லா தரப்பு மக்களிடமும் கோ–ஆப்டெக்ஸ் பொருட்கள் சென்றடைய ஏதுவாக சுயஉதவிக் குழுக்களின் சேவையைப் பயன் படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ✶

# வெல்லம், நாட்டுச்சர்க்கரை, சாம்பிராணி உள்ளிட்ட பொருட்களுக்கு வரிவிலக்கு



**திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா**
**மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்**

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வணிகர்கள் வைத்த வேண்டுகோளை ஏற்று, 22–7–2006 முதல், வரிவிலக்கு அளிக்கப்பட்ட பருப்பு மற்றும் பயறு வகைகளிலிருந்து தயாரிக்கப்படும் மாவுக்கும், வறுகடலைக்கும் வரிவிலக்கு அளிக்கப்படும்.

- உள்மாநிலத்தில் விற்கப்படும் வெல்லம் மற்றும் நாட்டுச் சர்க்கரைக்கு தற்போது 4 விழுக்காடு வரி விதிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வணிகர்கள் வைத்த கோரிக்கையை, அதேபோல் சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, இதற்கு 2002ஆம் ஆண்டுக்கு முந்தைய காலத்தில் இருந்தது போலவே வரிவிலக்கு அளிக்கப்படும்.

- 22–7–2006 முதல் சாம்பிராணிக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. இச்சலுகை மாத்திரை வடிவிலும், குச்சி வடிவிலும் உள்ள சாம்பிராணிக்கு அளிக்கப்படும்.

- 22–7–2006க்கு முற்பட்ட காலத்திற்கு மத்திய விற்பனை வரி அல்லது மாநில கொள்முதல் வரி, இதில் ஏதாவது வரி கட்டினால் போதும் என்று ஆணை வழங்கப்படும். கழிவுத்தாளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் கூடுதலாக பழைய காலி பாட்டில்களுக்கும் வழங்கப்படும்.

- உள்மாநிலத்திலும், வெளிமாநிலத்திலும் விற்கப்படும் நீராடும் தேங்காய் மீதான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

- தற்போது சாதாரண மக்கள் பயன்படுத்தும் ரூபாய் 200க்கும் கீழ் மதிப்புள்ள காலணிகளுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்படும்.

- பருப்பு, பயறு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் மீதான வரி 2002ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தவாறே முழுமையாக விலக்களிக்கப்படுகிறது.

- மாநிலத்தின் உற்பத்திப் பொருட்களுக்காகத் தேவைப்படும் மூலப்பொருட்கள் மீதான நுழைவு வரியினை உற்பத்திப் பொருட்கள் மீது விதிக்கப்படும் வரிகளிலிருந்து முழுமையாக கழித்துக் கொள்ள அனுமதிக்கப்படும். இதனால் மாநிலத்தின் உற்பத்தியாளர்களின் இடப்பாடுகள் களையப்படும். இதற்கான அரசு அறிவிக்கை விரைவில் வெளியிடப்படும்.

- டீ செர்வ் (Tea serve) ஏல மையத்தில் விற்கப்படும் தேயிலை மீது தற்போது விதிக்கப்படும் 4 சதவிகித பொது விற்பனை வரி மற்றும் 2 சதவிகித மத்திய விற்பனை வரி ஆகியவை 1 சதவிகிதமாகவும், கோயம்புத்தூர் மற்றும் குன்னூரிலுள்ள பிற ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலைக்கான பொது விற்பனை வரி தற்போதுள்ள 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவும், தற்பொழுதுள்ள மத்திய விற்பனை வரி 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகவும் குறைக்கப்படும். இந்த ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலை விற்பனையின் மீது விதிக்கப்படும் கூடுதல் விற்பனை வரி மற்றும் மேல் வரி ஆகியவை நீக்கப்படும்.


- சிட்டா நூலுக்கு முழு வரிவிலக்களிக்கப்படும்.

- தமிழ்மொழியில் தயாரிக்கப்படும் உரிமம் அளிக்கப்பட்ட மென்பொருட்களுக்கு விற்பனை வரிவிலக்கு அளிக்கப்படும்.

- சாம்பிராணிக்கு மீண்டும் விற்பனை வரிவிலக்கு அளிக்கப்படும்.


- தமிழிலேயே பெயர் சூட்டப்படும் புதிய திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்களிக்கப்படும். ★

# மாநில, மாவட்ட, ஒன்றிய அளவில் ஊரக விளையாட்டுப் போட்டிகள்



திரு. **டி.பி.எம்.மைதீன்கான்**
மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர்

- மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், ஒன்றிய அளவிலும் ஊரக விளையாட்டுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்படும். இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்.
- மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணையின்படி, சென்னை நேரு விளையாட்டு அரங்கில் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் செயற்கை இழை ஓடுகளம் புதுப்பிக்கப்படும்.
- இந்தியாவிலேயே முதல் மாநிலமாக, இளைஞர்களிடம் பன்முகத் திறன்களை வளர்க்கும் வகையில் இளைஞர் நலக் கொள்கை ஒன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி விரைவில் வெளியிடப்படும். □





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், 24.10.2006 அன்று சென்னையில், சென்னை மாநகர காவல் துறை பணிகளுக்காக வழங்கப்பட்ட யுண்டாய் நிறுவனத்தின் கார்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். உடன் மாண்புமிகு மத்திய தகவல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி இ.ஆ.ப., மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் உள்ளனர்.

# இயற்கை சீற்றங்களிலிருந்து பாதுகாக்க கடலோர தொடர் தடுப்புத் தோட்டங்கள்



திரு. என். செல்வராஜ்
மாண்புமிகு வனத்துறை அமைச்சர்

**காட்டாமணக்கு வளர்ப்பு**

2006–07ஆம் ஆண்டில் புதிய திட்டங்களைச் செயல்படுத்தும் வகையில் பயோ டீசல் பயன்பாட்டை ஊக்குவிக்க, வனத்துறையில் உள்ள 26 வளர்ச்சி முகமை மூலம் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க 3.50 கோடி காட்டாமணக்குச் செடிகள் ரூ.10.50 கோடி செலவில் திட்டம் செயல்படுத்தப்படும்.

**தேசிய புயல் இடர்ப்பாடு தடுப்புத் திட்டம்**

தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் உள்ள மக்கள் மற்றும் அவர் தம் உடைமைகளையும் இயற்கைச் சீற்றங்களான புயல் மற்றும் சுனாமியிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு உலக வங்கி உதவியுடன் 2006–07ஆம் ஆண்டில் ரூ.10.74 கோடி மதிப்பீட்டில் 2,000 எக்டேர் பரப்பில் கடலோர தொடர் தடுப்புத் தோட்டங்கள் மற்றும் 700 எக்டேர் பரப்பில் சதுப்பு நிலக்காடுகள் உருவாக்கப்பட்டு மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**வன உயிரினங்களால் ஏற்படும் இழப்புகளுக்கு நிவாரணம் வழங்குதல்**

யானை, புலி, சிறுத்தை, காட்டு மாடு, மான், காட்டுப் பன்றி போன்ற வன உயிரினங்களால் ஏற்படும் உடைமை மற்றும் பயிர் இழப்புகளுக்கு ஆளாகும் மக்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகை உடனுக்குடன் வழங்க புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவுள்ளது.

**உணவுப் பொருள் வழங்கல்**

வனத்துறை களப்பணியாளர்களுக்கு சலுகை விலையில் வழங்கப்பட்டுவரும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விரிவுபடுத்தப்பட்டு வனத்துறை வாகன ஓட்டுனர்களுக்கும் வழங்கப்படும்.

**தமிழ்நாடு தேயிலைத் தோட்ட தற்காலிக தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி அளித்தல்**

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகத்தில் 3 தோட்ட மருத்துவமனைகளும், 8 மருந்தகங்களும் உள்ளன. மேற்படி மருத்துவமனைகளில் இக்கழகத்தில் பணிபுரியும் நிரந்தர தொழிலாளர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டுவரும் முழுமையான மருத்துவ வசதி தற்காலிக தொழிலாளர்களுக்கும், அவர்களது குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும் அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ✦



திரு. வெள்ளக்கோவில் மு.பெ.சாமிநாதன்
மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் துறைமுகங்கள் துறை அமைச்சர்

# புதிய சாலைகள்-பாலங்கள் அமைக்க அரசு ஒப்புதல்

### தொகுப்பு முறை ஒப்பந்தம் ஒழிப்பு

கடந்த அரசு எடுத்த முடிவினை மாற்றி தொகுப்பு முறையில் ஒப்பந்தப்புள்ளி கோருவதை ரத்து செய்ய அரசு முடிவு செய்துள்ளது. இனி நெடுஞ்சாலைத்துறையின் பல்வேறு சாலை மற்றும் பாலப்பணிகள் தனித்தனிப் பணிகளாக ஒப்பந்தப்புள்ளி கோரி செயல்படுத்தப்படும். இதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் ஒப்புதல் பெற்று அரசு ஆணை இன்று வெளியிடப் படுகிறது.

### மாநிலச் சாலைகளை அகலப்படுத்துதல்

அனைத்து மாநில நெடுஞ்சாலைகளையும் (SH) இருவழித்தடங்களாக மாற்ற அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி அகலப்படுத்தும் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும். இதில் நடப்பாண்டில் 10 சாலைகள் இருவழித் தடங்களாகமாற்றப்பட்டு மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

### நபார்டு நிதி உதவித்திட்டம் – புதிய பணிகள்

நபார்டு வங்கி நிதி உதவித் திட்டத்தின் கீழ் ரூ.1 கோடி மதிப்பிற்கு மேலுள்ள 22 பெரிய பாலங்களும் ரூ.1 கோடி மதிப்பிற்கும் குறைந்த 251 பாலங்களும் மற்றும் 1,376 கி.மீ. நீள சாலைகளை ரூ. 251 கோடி மதிப்பில் மேற்கொள்ள இந்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிகள் விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மேலும், ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டிற்கு மேலுள்ள பின்வரும் 28 பெரிய பாலங்களையும் அறிவிப்பின் இணைப்பில் குறிப்பிட்டுள்ளபடி ரூ.1 கோடி மதிப்பிற்குக் குறைந்த 108 பாலங்களை கட்டுவதற்கும் 1,041 கி.மீ. நீளசாலைகளை மேம்பாடு செய்ய இந்த அரசால் பரிந்துரை செய்யப்பட்ட கருத்துரு ரூ.297 கோடிக்கு நபார்டு வங்கியின் பரிசீலனையில் உள்ளது. அவ்வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டதும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இது தவிர, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள சாலைகளிலும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ஊரக வளர்ச்சித் துறைக்கு தனியே ரூ.103 கோடி நிதியையும் இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

### இரயில்வே மேம்பாலப் பணிகள்

நடப்பாண்டில் 12 மாவட்டங்களில் ரூ. 395 கோடி மதிப்பில் 22 புதிய இரயில்வே மேம்பாலங்களும் ஒரு புதிய கீழ்பாலமும் சேர்த்து மொத்தம் 23 பணிகளை இரயில்வே துறையின் பங்களிப்புடன் மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது.

தமிழகத்தில் நெடுஞ்சாலைகளில் விபத்து நேரக்கூடிய பகுதிகள் என கண்டறியப்பட்ட சுமார் 300 இடங்களில் முதற்கட்டமாக 50 இடங்களில் ரூ.38 கோடி மதிப்பில் விபத்துத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. ♦

# ஊனமுற்றோரை திருமணம் செய்யும் ஊனமில்லாதவருக்கு திருமண உதவித்தொகை உயர்த்தப்படும்



டாக்டர். திருமதி. **பூங்கோதை ஆலடி அருணா**
*மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்*

- பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தாயாரின் நினைவாக 'சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்' என 2000ஆம் ஆண்டில் பெயர் சூட்டிய பெருமை நமது முதல்வர் அவர்களையே சாரும். ஆனால், முந்தைய அரசாங்கத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் மேல் என்ன வருத்தமோ, வெறுப்போ தெரியவில்லை. அந்தக் கர்மவீரரின் நூற்றாண்டு விழாவைக்கூட சிறப்பாகக் கொண்டாடவில்லை. மேலும், சிவகாமி அம்மையாரின் பெயரையும் அகற்றி 'பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்' என்று பெயர் மாற்றம் செய்தது. தமிழகத்தில் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்ட பெருந்தலைவரின் அன்னையின் நினைவாக, இவ்வரசு, மீண்டும் இத்திட்டத்திற்கு 'சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்' என பெயர் சூட்டி செயல்பட வழிவகை செய்யும்.

- செவித்திறன் குறைபாட்டை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, பேசுவதற்குப் பயிற்சி அளித்து, மற்ற குழந்தைகள் பயிலும் (Regular Schools) பள்ளிகளில் கற்பதற்கு அவர்களை ஊக்குவிக்கும் வகையில் 30 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, திருவாரூர், சேலம், கன்னியாகுமரி, திருவள்ளூர், திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில், தலா ஒரு மையம் நிறுவப்படும்.

- இந்தியாவில் முதன்முறையாக சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியில் செவித்திறன் குறைந்தோர் பயன்பெறும் வகையில் B.Com, BCA பட்டப்படிப்பு தொடங்க ஆவன செய்யப்படும்.

- ஊனமுற்றோரை திருமணம் செய்து கொள்ளும் ஊனம் இல்லாதவர்களுக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகை, 10,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாயாக உயர்த்தப்படும். இதற்கென ஆண்டொன்றுக்கு தற்போது ஒதுக்கீடு செய்யப்படும் 39 இலட்சம் ரூபாயுடன் கூடுதலாக 39 இலட்சம் ரூபாய் சேர்த்து மொத்தம் 78 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

- தமிழ்நாட்டில், 40 சதவிகித காது கேளாமைக்கு முக்கியக் காரணம் ரூபல்லா என்னும் கொடிய வைரஸ் கிருமிதான். இதை எதிர்காலத்தில் தடுப்பதற்காக, 15 வயது வளர் இளம் பெண்களுக்கு, ஒரே ஒரு முறை, 25 ரூபாய் மதிப்புள்ள ரூபல்லா தடுப்பு ஊசியினை செலுத்தி, இக்கிருமியினால் ஏற்படும் அனைத்து ஊனங்களையும் அறவே தடுத்திடலாம். இதற்கென, ஆண்டுதோறும் 15 வயதுள்ள பெண்களுக்கு ரூபல்லா தடுப்பூசி போடுவதற்கான திட்டம் செயல்படுத்தப் படும்.

- புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ், சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்கள் பணியிடங்களில் காலியாக உள்ள 10,028 பணியிடங்களுக்கு புதிய பணியாளர்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

♦ ♦ ♦

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

சமூகநலம் – ஊனமுற்றோர் நலம் – ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் உதவித்தொகையை ரூ. 200லிருந்து ரூ.500 ஆக உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந 4)துறை**

அரசாணை (ப) எண் : 160 நாள் : 11.09.2006

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 491, பிற்படுத்தப்பட்டோர் நலம், சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள். 24.5.1989.
2. அரசாணை (நிலை) எண். 121, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள். 14.3.1990.
3. ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கடித எண். 3004/ஊம2.1/06. நாள். 16.6.2006.

– – – –

**ஆணை :**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி மிகவும் கடுமையான ஊனத்தால் பாதிக்கப்பட்டு வேறு எந்த வகையிலும் மறுவாழ்வு பெற முடியாதவர்களைப் பராமரிப்பதற்காக கடும் ஊனமுற்ற நபர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் உதவித்தொகை வழங்க பயனாளிகள் தேர்வு செய்ய ஒரு குழுவினை நியமித்தும் மேற்படி உதவித்தொகை பெற 75 சதவீதத்திற்கும் மேல் ஊனமுற்றவராக இருக்க வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டது.

3. 2006 சட்டப்பேரவை நிதிநிலை அறிக்கையின்படி தற்போது ஊனமுற்றோருக்கான உதவித்தொகை மாதம் நபர் ஒருவருக்கு ரூ. 200/– என இருப்பதை மாதம் ரூ. 500/– என உயர்த்தி வழங்கிட ஏதுவாக தேவையான கருத்துருவை ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அனுப்பி வைத்துள்ளார். இத்திட்டத்தால் 8,400 ஊனமுற்றோர் பயன்பெறும் வகையில் ரூ.5,29,45,200/– அல்லது ரூ.529.46 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கும்படி ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக ஆராய்ந்த அரசு, கடும் ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் பராமரிப்பு உதவித் தொகையை 1.9.2006 முதல் ரூ.200/– லிருந்து ரூ.500/– ஆக உயர்த்தி ஆணையிடுகிறது. இந்த உயர்வினால் ஓராண்டிற்கு பராமரிப்பு உதவித்தொகை வழங்க ரூ.504.00 இலட்சம் மற்றும் பணவிடை செலவினம் ரூ.25.46 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 529.46 இலட்சத்திற்கு செலவினம் மேற்கொள்ளப்படும்.

5. இத்திட்டத்திற்கு 2006 – 2007ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ள ஒதுக்கீட்டிற்கு மேல் கூடுதலாகத் தேவைப்படும் செலவினத் தொகை ரூ. 53.18 இலட்சங்கள் (ரூபாய் ஐம்பத்தி மூன்று இலட்சத்து பதினெட்டாயிரம் மட்டும்) திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய 2006–2007ல் சேர்க்கப்படும். திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய மதிப்பீடு 2006–2007ல் கூடுதல் நிதியொதுக்கத்தை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அனுமதிக்கப்படுகிறார். திருத்திய மதிப்பீட்டில் மேற்படி செலவினத்தை சேர்த்திட ஏதுவாக தேவையான கருத்துருவை உரிய நேரத்தில் அரசுக்கு அனுப்பி வைக்கும்படி ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

என்.எஸ். பழனியப்பன்,
அரசு செயலாளர்.

# காக்கா கதை

ஒரு ஊரில் ஒரு பாட்டி இருந்தாள். ஒரு வேப்ப மரத்தடியில் வடை சுட்டு விற்று வந்தாள். ஒரு நாள், ஒரு பெண் காக்கா அந்த மரத்தில் வந்து அமர்ந்தது. வடையின் வாசம் காக்காவின் மூக்கைத் துளைத்தது.

எல்லாரும் காசு கொடுத்து வடை வாங்கித் தின்றார்கள். காக்காவிடம் காசு இல்லை. காசு இல்லாவிட்டாலும் வடை தின்னும் ஆசை விட்ட பாடில்லை. அதற்கு ஒரு யோசனை உதித்தது, பாட்டியை நெருங்கியது.

“பாட்டி ! என்னிடம் காசு இல்லை. ஆனால், உனக்கு உதவியாக வேலை செய்கிறேன். ஒரு வடை தருவாயா ? என்று கேட்டது காக்கா.

பாட்டி சிரித்தாள். “உனக்கு என்ன வேலை தெரியும் ? உளுந்தைச் சுத்தம் செய்யத் தெரியுமா? ஊறவைத்த உளுந்தை ஆட்டத் தெரியுமா ? என்ன தெரியும் உனக்கு ?’’ என்று பாட்டி கேட்டாள்.

“அடுப்பு எரிக்கக்காய்ந்த சுள்ளி விறகு கொண்டு வரத் தெரியும்!’’ என்று பதில் சொன்னது காக்கா. பாட்டி சம்மதித்தாள். காக்கா பறந்தோடிச் சென்றது. காட்டில் கிடந்த விறகுக் குச்சிகளை வாயில் கவ்வி எடுத்து வந்தது. இவ்வாறே, பலமுறை சென்று வந்து, விறகுக் குச்சிகளைக் குவித்து விட்டது. பாட்டி மகிழ்ந்து போனாள்.



“இந்தா உன் கூலி!’’ என்று ஒரு வடையை நீட்டினாள். காக்கா வடையை வாயில் கவ்விக் கொண்டது. பறந்து அது குடியிருக்கும் ஆலமரத்துக்கு வந்தது. கூட்டில் அதன் கணவன் காக்கா இல்லை. இரைதேடப் போன கணவன் காக்கா இன்னும் திரும்பி வரவில்லை.

வடையை வாயில் கவ்வியபடி அங்கும் இங்கும் பார்த்தது பெண் காக்கா. அந்தப் பக்கமாய் ஒரு நரி வந்தது. காக்கா வாயில் இருக்கும் வடையை நரி பார்த்தது. அதற்கு வாயில் நீர் ஊறியது. அந்த வடையை அபகரிக்க அது நினைத்தது.

‘இது எனக்கு மிக எளிய காரியம்! சிங்கத்தையே ஏமாற்ற வல்லவன் நான். இந்தக் காக்காவையா ஏமாற்ற முடியாது ?’ என்று நினைத்துக் கொண்டது நரி. உடனே அது காக்காவைப் புகழத் தொடங்கியது.

“காக்கா! ஆகா! எத்தனை அழகு நீ! உன் ஒருச்சாய்த்த கண்ணும் கருகரு மேனியும்... அடடா! அழகே அழகு! அப்படியானால் உன் குரலும் அழகாக இனிமையாகத்தான் இருக்க வேண்டும். எங்கே, உன் இனிமையான குரலில் ஒரு பாட்டுப் பாடேன்’’ என்று இதமாய்க் கேட்டது. பாடினால் காக்காவின் வாயிலிருந்து வடை கீழே விழுமே. அதை தூக்கிக் கொண்டு ஓடி விடலாம் என்ற நினைப்பு நரிக்கு.

‘இவன் ஏன் என்னைப் புகழ்கிறான் ? முகத்துக்கு நேரே புகழ்ந்து பேசுபவனை நம்பவே கூடாது ! நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்’ – இப்படி நினைத்தது காக்கா.

உடனே காக்கா வடையைக் கூட்டில் பத்திரமாக வைத்தது. பிறகு நரியைப் பார்த்து, “நிஜமாகவே நான் பாடப்போகிறேன் கேட்கிறாயா ?’’ என்று கேட்டது.

நரிக்குப் பெருத்த ஏமாற்றம். அது நினைத்தபடி நடக்கவில்லையே என்று எரிச்சல். அதனால், காக்காவைக் கடுகடுப்புடன் முறைத்துப் பார்த்தது.

“என்ன முறைக்கிறாய் ? உனக்கு வடை வேண்டுமானால், அதோ அந்தப் பாட்டியிடம் போய் வேலை செய். வெங்காயம், பச்சை மிளகாய் பறித்துக் கொண்டு போய்க் கொடு. பாட்டி வடை தருவாள். உழைத்தால்தான் தம்பி உணவு’’ என்று பாடம் புகட்டியது.

நரியும் திருந்தி, பாட்டிக்கு உதவியாக வேலை பார்க்கும் எண்ணத்தில் ஓடிச் சென்றது. காக்கா தான் உழைத்துச் சம்பாதித்த வடையைத் தன் கணவனோடு பகிர்ந்து உண்பதற்காகக் கூட்டில் காத்திருந்தது.

***– வெ.மு. ஷாஜகான் கனி எழுதிய “பாடம் திருத்திய பாப்பா கதைகள்’’ என்னும் நூலிலிருந்து.***

# இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியால் பொது அறிவைப் பெறுகிறோம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த எண்ணற்ற திட்டங்களில் ஒரு அரிய திட்டம் ஏழை குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் ஆகும்.

தமிழக அரசு வழங்கிய இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியின் பயன்பாட்டினை தெரிந்து கொள்வதற்காக பாப்பாகோவில் கிராமத்தில் உள்ள சமத்துவபுரத்திற்கு சென்றோம். அங்கு வசித்து வரும் திரு. பொன்னியின் செல்வன் அவர்களின் மனைவி திருமதி. நாகேஸ்வரி அவர்களை சந்தித்தோம். அவர், "எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர் என்றும், என்னுடைய மகள் பெயர் ஜெயஸ்ரீ, வயது 6 மற்றும் மகன் அருண்குமார் வயது 3. முன்பு எனது வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டி கிடையாது. சமத்துவபுரத்தில் வாழும் அனைத்து குடும்பத் தலைவிகளும் பொழுதுபோக்கு இல்லாமல் இருந்தோம். அரசு என்னென்ன திட்டங்கள் அறிவிக்கின்றது ? அந்த திட்டங்களினால் நாங்கள் எவ்வாறு பயனடையலாம் ? தற்பொழுது உலகத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது ? என்பன போன்ற எதுவுமே எங்களுக்குத் தெரியாது. நாங்கள் ஒரு இருட்டறையில் வாழ்வதுபோல் வாழ்ந்து கொண்டிருந்தோம். நாங்கள் மட்டுமல்ல எங்களுடைய குழந்தைகளுக்கும் எந்தவிதமான பொது அறிவும் பெறமுடியாமல் இருந்தார்கள். யார் தற்போதைய அமைச்சர் ? யார் தற்போதைய பிரதமர் ? என்று கேட்டால் கூட எங்களுடைய குழந்தைகளுக்கு தெரியாத நிலை இருந்து வந்தது.



ஆனால் தற்போது அந்த நிலை மாறியுள்ளது. நாங்களும் வெளி உலகைப் பார்க்கின்றோம். நாங்கள் அரசின் திட்டங்களை எளிதில் அறிந்து கொண்டு அந்த திட்டங்களினால் எங்களுக்கு என்ன பயன் ? யாரை அணுகுவது ? எப்படி அணுகுவது ? போன்ற வழிவகைகள் தற்போது தமிழக அரசு வழங்கிய இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி மூலம் தெரிய வருகிறது" என்று கூறினார்.

அடுத்தாக, திரு. செல்வராஜ் என்பவரின் மனைவி திருமதி. சரஸ்வதி, அவரது மகள்கள் பத்தாம் வகுப்பு படிக்கும் அபிராமி, ஒன்பதாம் வகுப்பு படிக்கும் அஞ்சலி மற்றும் ஐந்தாவது படிக்கும் விக்னேஷ்வரி ஆகியோர் கூறுகையில், "எங்களுக்கு பொது அறிவை வளர்த்துக் கொள்ள கார்டூன், அனிமல் பிளானட் போன்ற சேனல்கள் மிகுந்த பயனளிக்கின்றன" என்றனர்.

திரு. செல்வராஜ் என்பவர் கூறுகையில், "நாங்கள் சாதாரண ஒரு கருப்பு வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டி கூட எங்களால் வாங்க முடியாத நிலையில் இருந்து வந்தோம். நாகை மாவட்டம் புயல், மழை மற்றும் வெள்ளங்களால் பாதிக்கக் கூடிய ஒரு மாவட்டம். அரசு அறிவிக்கும் அபாய முன்னெச்சரிக்கைகளைகூட எங்களால் அறிந்து கொள்ள முடியாத நிலையில் இருந்து வந்தோம். தமிழக அரசு இலவசமாக கொடுத்துள்ள இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி மூலம் உள்ளூர் செய்திகள் முதல் உலகச் செய்திகள் வரை தெரிந்து கொள்ள முடிகிறது" என தெரிவித்தார். மொத்தத்தில்

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கியது பொது மக்களிடையே மகிழ்ச்சியை அளிக்கிறது என்பதை அறியமுடிந்தது.

முதற்கட்டமாக சமத்துவபுரங்களில் வசித்து வரும் ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டன. நாகை மாவட்டத்தில் திருக்குவளை, பாப்பாகோவில், பனங்குடி மற்றும் காட்டுச்சேரி ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள சமத்துவபுரங்களில் வசித்து வரும் 400 ஏழை குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் 16.9.2006 அன்று மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு.டி.பி.எம்.மைதீன்கான் அவர்களால் வழங்கப்பட்டன.

**– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
நாகப்பட்டினம் மாவட்டம்.

# விவசாயக் கடன் ரத்து திட்டத்தால் பயனடைந்த பனங்காடி கிராம மக்கள்


மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 2000–ஆம் ஆண்டில் முதலமைச்சராக இருந்தபோது, நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளை வட்டம் பனங்காடி கிராம மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு சங்கத்திற்குட்பட்ட செவந்தி ரோஜா மற்றும் மாதா அன்னை இந்திரா மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 46 நபர்களுக்கு தலா ரூ.26,800 மதிப்பீட்டில் ஒவ்வொருவருக்கும் 66 சென்ட் நிலம் வழங்கப்பட்டது. தாட்கோ திட்டத்தின் மூலம் தலா ரூ.10,000 மானியமாகவும், திருத்துறைப்பூண்டி கூட்டுறவு நில வள வங்கி மூலம் தலா ரூ.10,000 கடனாகவும், சொந்த நிதியாக தலா ரூ.6,800–ம் பெற்று இந்த நிலம் வழங்கப்பட்டது. இது குறித்து பனங்காடி கிராம மகளிர் மேம்பாட்டுச் சங்கத்தின் இயக்குநர் திருமதி அஞ்சம்மாள் என்பவரிடம் கேட்டபோது, "மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் 2000–ஆம் ஆண்டில் முதலமைச்சராக இருந்தபோது தாட்கோ திட்டத்தின் மூலம் 46 நபர்களுக்கு தலா 66 சென்ட் நிலம் வழங்கப்பட்டது. கடந்த ஐந்தாண்டுகளாக தண்ணீர் இல்லாமல் விவசாயம் செய்யாமல் மிகவும் கஷ்டப்பட்டு வாழ்க்கை நடத்தி வந்தோம். இந்நிலையில், திருத்துறைப்பூண்டி கூட்டுறவு நிலவள வங்கியில் பெறப்பட்ட ரூ.4.60 இலட்சம் கடனுடன் சேர்த்து ரூ.13 இலட்சம் நிலுவைத் தொகையை உடனடியாக கட்ட வேண்டும் என நிர்ப்பந்தம் செய்து வந்தனர். இந்நிலையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பொறுப்பேற்றவுடன் ஏழைஎளிய விவசாயிகள் வாங்கிய கூட்டுறவு கடன் முழுவதும் ரத்து செய்யப்படும் என அறிவித்ததைத் தொடர்ந்து எங்கள் கிராமத்தைச் சேர்ந்த 46 நபர்கள் பெற்ற கடன் தொகை ரூ.13 இலட்சம்



முழுவதையும் ரத்து செய்யப்பட்டு நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தென்காசி சு.ஜவகர், இ.ஆ.ப. அவர்கள் பரிந்துரையின்பேரில் 46 நபர்களுக்கும் நிலப்பட்டா திருத்துறைப்பூண்டி நில வள வங்கியிடமிருந்து திரும்ப வழங்கப்பட்டுள்ளதற்கு ஏழை விவசாய மக்கள் சார்பில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று கூறினர்.

**செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,**
*நாகப்பட்டினம்.*

# செய்தி சொல்லும் சித்திரங்கள்



தமிழகத்தில் சென்னைக்கு அருகில் சிறப்புப்
பொருளாதார மண்டலம் அமைக்க
சிங்கப்பூர் அரசு முடிவு செய்துள்ளது.
இந்தியாவிலேயே தமிழகத்தில்தான்
இத்தகைய பொருளாதார மண்டலம் அமைக்க
சாதகமான நிலைமை உள்ளது.

- சிங்கப்பூர் வெளியுறவுத்துறை அமைச்சர்
திரு.பாலாஜி சதாசிவன்
சென்னையில் பேட்டி -
(3.10.2006)

போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு
மின்சார வாரியம், நுகர்பொருள் வாணிபக்
கழகம், ஆவின், வனத் தோட்டக் கழகம்,
தேயிலை தோட்டக் கழகம், அரசு ரப்பர்
கழகம் மற்றும் பூம்புகார் கப்பல்
போக்குவரத்துக் கழகத்
தொழிலாளர்களுக்கு தீபாவளியையொட்டி
20 சதவிகிதம் போனஸ்

- தமிழக அரசு வழங்கியது.





சிக்குன் குனியா பாதிப்புள்ள
அனைத்து மாவட்டங்களிலும்
“ஆபரேஷன் சிக்குன் குனியா 2006 -
கொசு ஒழிப்புப் பணி” செப்டம்பர் 5 முதல்
மேற்கொள்ளப்படுகிறது.
சிக்குன் குனியா, டெங்கு நோய்த் தடுப்பு
நடவடிக்கையில் மக்களை ஊக்குவிக்க
அக்டோபர் 16 முதல் 22 வரை
தமிழகம் முழுவதும் “சுற்றுப்புறத்
தூய்மை இயக்க வாரம்”
அனுசரிப்பு.

- தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி
பேட்டி (9.10.06)

# செய்தி சொல்லும் சித்திரங்கள்




தமிழக அரசு வெளிப்புறப் படப்பிடிப்புக் கட்டணங்களைக் குறைத்ததால், உதகையில் திரைப்படப் பிடிப்புகள் ஏராளமாக நடைபெறுகின்றன. உதகையில் திரைத்துறையினர் குவிந்தனர்.



குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துபவர்களை கடுமையாக தண்டிக்கும் புதிய சட்டம் – அக்டோபர் 10 முதல் அமல்படுத்தப்பட்டது – தீவிரமாகச் செயல்படுத்த மத்திய, மாநில அரசுகள் முடிவு.




வாகனங்களில் செல்லும்போது செல்போனில் பேசக்கூடாது என்பதை வலியுறுத்தி சென்னை மாநகர போக்குவரத்துக் காவல்துறை விழிப்புணர்வுப் பிரச்சாரம்.

# செய்தி சொல்லும் சித்திரங்கள்



பத்திரிகையாளர் ஓய்வூதியத்தை
ரூ.4,000 ஆகவும்,
பத்திரிகையாளர்
குடும்ப ஓய்வூதியத்தை
ரூ.2,000 ஆகவும்
உயர்த்தி அரசு ஆணை.




உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள்
வழங்குவது பற்றி பரிந்துரைக்க
உள்ளாட்சித்துறை அமைச்சர் தலைமையில்
உயர்நிலைக் குழு

– தமிழக அமைச்சரவை முடிவு.

நான்கைந்து மாதங்களில்
இலட்சத்திற்கும்
மேற்பட்டவர்களுக்கு
தமிழக அரசு வேலைவாய்ப்பை
வழங்கியுள்ளது.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்





திருமதி. **கீதாஜீவன்**
மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்

# புதிதாக 10 கால்நடை மருந்தகங்கள்

★ கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கால்நடைகள் அதிகளவு பயனடைவதற்காக நடப்பாண்டில் குக்கிராமம் மற்றும் மலைப்பகுதிகளில் கூடுதலாக 500 முகாம்கள் நடத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன்தெரிவித்துக்கொள்கிறேன்.

★ நடப்பு நிதியாண்டில் புதியதாக 10 கால்நடை மருந்தகங்கள் துவக்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ கால்நடை இழப்புகளால் ஏற்படும் இடர்ப் பாட்டிலிருந்து ஏழை கிராமப்புற மக்களைப் பாதுகாத்திட ஒரு முன்னோடித் திட்டமாக மத்திய அரசு நிதி உதவியுடன் தேசிய கால்நடை காப்பீட்டுத் திட்டத்தினைத் தமிழகத்தில் கோவை, ஈரோடு, சேலம், நாமக்கல் மற்றும் வேலூர் ஆகிய 5 மாவட்டங்களில் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படும். இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் ஒரு இலட்சம் கறவை மாடுகளும், எருமைகளும் பயன்பெறும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் கால்நடை பட்டப்படிப்பு முடித்து, உள்ளுறை பயிற்சி பெறும் மாணவர்களுக்கு வழங்கப் படும் உதவித் தொகை ரூபாய் 1,150 என்பதை ரூபாய் 500 உயர்த்தி, இனி மாதம் ஒன்றிற்கு ரூபாய் 1,650 என வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

★ சென்னை, அடையாறில் பி.எஸ். குமாரசாமிராஜா சாலையில் செல்லப் பிராணிகள் சிகிச்சை நிலையம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ★

# ஆதிதிராவிடர்களுக்கு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய அறிவுரைப்படி, இந்து ஆதிதிராவிடர்களுக்கு மட்டுமன்றி, மதம் மாறிய ஆதிதிராவிடர்களும் பயன்பெறும் வகையில் மாநில அரசின் சிறப்பு நிதி உதவித் திட்டத்தின் கீழ், முதல் முறையாக இந்த நிதியாண்டில் இம்மக்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் தாட்கோ மூலம் மொத்தம் 25 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும்.

**இத்தொகையில்,**

- 2,500 இளைஞர்களுக்கு ஒரு ஆண்டு காலப் பயிற்சியாக உணவு தயாரித்தல், பதப்படுத்துதல் மற்றும் வழங்குதல் (Catering Technology) பயிற்சி,
- 2,000 ஆதிதிராவிட மகளிருக்கு ஒரு ஆண்டு கால செவிலியர் உதவியாளர் பயிற்சி,
- 5,000 இளைஞர்களுக்கு பவர் தையல் மிஷன்களை இயக்குவதற்குப் பயிற்சி,
- 300 இளைஞர்களுக்கு BPO, Call Centre மற்றும் விமான ஓட்டுநர் பயிற்சி போன்ற உடனடி வேலைவாய்ப்புகளைத் தரும் பயிற்சிகள்,
- ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் 1,000 மாணவ, மாணவிகளுக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் பயிற்சி (Communication skills and Personality Development Training) ஆகிய பயிற்சிகள் அனைத்தும் மொத்தம் 10 கோடி ரூபாய் செலவில் அளித்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.



திருமதி. **ஆ. தமிழரசி**
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்

- இளைஞர்களுக்கான சுயதொழில் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 3,000 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்கள் சுயதொழில் தொடங்குவதற்காக 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இசைவளித்துள்ளார்கள்.
- முத்தமிழறிஞர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் பொருட்டு, 30,000 பயனாளிகளுக்கு சுயதொழில் தொடங்க 27 கோடியே 50 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள்.

* * *

# 10, 12ஆம் வகுப்புத் தேர்வில் சாதனை படைக்கும் மீனவ சமுதாய மாணவ, மாணவியருக்கு ஊக்கப் பரிசுகள்



திரு. கே.பி.பி. சாமி
மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்

* 1997–98 இல் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த டீசல் மானியத்தை உயர்த்தித் தந்த முத்தமிழறிஞர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒரு விசைப்படகிற்கு மாதம் ஒன்றுக்கு தற்போது 1,000 லிட்டர் டீசலுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படுவதை 1.8.2006 முதல் 1,500 லிட்டர் அளவுக்கு உயர்த்தி ஆண்டுக்கு 50 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் மொத்தம் 5,000 விசைப்படகுகளுக்கு இந்த மகத்தான சலுகையை மீனவ சமுதாயம் எண்ணி எண்ணிப் பெருமைப்படத்தக்க வகையில் வாரி வழங்கியுள்ளார்கள்.


* குமரி மாவட்ட மீனவ மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், மத்திய அரசின் நிதி உதவி பெற்று குளச்சலில் 23 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும் என்று கூறி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்பகுதி மீனவர்களின் வயிற்றில் பால் வார்த்துள்ளார்கள்.

* ஏழை எளியவர்களின் மேம்பாட்டையே இரவும், பகலும் சிந்தித்தும் எழுதியும், பேசியும், கவிதை புனைந்தும் ஊக்கம் தந்திடும் எங்களின் இதயத்துடிப்பு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குக் கூடுதல் வலைகள், கை விளக்குகள் (Handy Rechargeable Lanterns), மீன்களை எடுத்துச் செல்ல மிதிவண்டிகள் (Heavy Duty Bicycles), உயிர்காக்கும் உடை (Life Jackets), ஐஸ் பெட்டிகள் (Ice boxes) ஆகியவைகளை 100 கோடி ரூபாய் செலவில் ராஜீவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்டத்திலிருந்து (Calamity Relief Fund), வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள்.

* மீனவ சமுதாயத்தில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் 12ஆம் வகுப்புத் தேர்வில் முதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண் பெற்ற இரண்டு மாணவர்களுக்கும், இரண்டு மாணவிகளுக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் வழங்கப்படுவது போல ஊக்கப் பரிசுகள் இவ்வாண்டு முதல் வழங்கப்படும்.

* மேலும், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் 10ஆம் வகுப்பில் முதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண் பெற்ற இரண்டு மாணவர்களுக்கும், இரண்டு மாணவிகளுக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் வழங்கப்படுவது போல ஊக்கப் பரிசுகள் இவ்வாண்டு முதல் வழங்கப்படும்.

❖ ❖ ❖



திரு. உ.மதிவாணன்
மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்

# பால் உற்பத்தியைப் பெருக்க பயன்மிகு திட்டங்கள்

- சங்கங்களில் பால் உற்பத்தியை அதிகரிக்கவும், பாலின் ஆரம்பத் தரம் கெடாமல் பாதுகாக்கவும், மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்கள் வாயிலாக 875 கிராமச் சங்கங்கள் பயன்பெறும் வகையில் 125 குளிர்விப்பான்கள் 13 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட உள்ளன. இதன்மூலம் தமிழக பால் பண்ணைகளின் குளிர்பதப்படுத்தும் வசதி நாள்தோறும் 15 இலட்சம் லிட்டர் என்ற நிலையிலிருந்து நாள்தோறும் 19 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு உயரும். இதனால் நுகர்வோர்களுக்கும் தரமான பால் கிடைக்கும்.

- கால்நடை காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கோவை, ஈரோடு, சேலம், நாமக்கல், வேலூர் ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதியுதவியுடன், 1 கோடி ரூபாய் செலவில் அதிக பால் கறவைத் திறன் கொண்ட ஒரு இலட்சம் பசு மற்றும் எருமைகள் காப்பீடு செய்யப்படும்.

- தமிழகத்தில் 2006–2007 ஆம் ஆண்டில் குறைந்தது 100 மகளிர் சங்கங்கள் அடங்கிய 300 புதிய சங்கங்கள் உருவாக்கப்படும்.

- மூன்று இலட்சம் பால் உற்பத்தியாளர்களை விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்க ஆவன செய்யப்படும்.

- தஞ்சாவூர் மாவட்டம் புதுக்குடியில் கலப்பினப் பொலி காளைகள் மற்றும் எருமையினப் பொலி காளைப் பண்ணை அமைக்கப்படும்.

- சென்னை அம்பத்தூர் பால் உபபொருட்கள் பண்ணையில் சர்க்கரை நோயாளிகளுக்காக சர்க்கரை இல்லாத ஐஸ்கிரீம் மற்றும் இனிப்பு சேர்க்கப்படாத யோகர்ட் அறிமுகப்படுத்தப்படும்.

- இந்த ஆண்டு சேலத்தில் உள்ள பால் பண்ணையிலிருந்து மிக உயர்வெப்ப நிலையில் பால் பதப்படுத்தி, பேக்டீரியா போன்ற நுண்கிருமிகள் தவிர்த்த நிலைகெடா சிப்பம் கட்டும் நிலையம் உலகத் தர அளவில் 12 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தி பால் ஏற்றுமதிக்கு வழிவகுக்கப்படும்.

❖ ❖ ❖

# 3,000 ஏக்கரில் புதிதாக மல்பரி நடவு



திரு. கா. இராமச்சந்திரன்
மாண்புமிகு கதர்வாரியத்துறை அமைச்சர்

**பட்டு வளர்ச்சித்துறை**

- புதியதாக 3,000 ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் மல்பரி நடவு செய்யப்படும். இதற்கு ஒரு ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் வீதம் ஊக்கத் தொகை வழங்கப்படும்.
- மல்பரி சாகுபடி மற்றும் வெண் பட்டுப்புழு வளர்ப்பில் புதிய தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிக்க 100 விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்கப்படும். இதற்கு ஒரு விவசாயிக்கு தலா 800 ரூபாய் வீதம் செலவிடப்படும்.
- சென்னைக்கு அருகில் மாமல்லபுரத்தில் 2 கோடி ரூபாய் முதலீட்டில் 'நகர்ப்புற கண்காட்சித் திடல்' ஒன்று மைய மற்றும் மாநில அரசுகளின் கூட்டு முயற்சியில் அமைக்கப்படும்.
- சென்னையில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் கைத்திற அருங்காட்சியகத்துடன் ஒரு கைவினைப் பொருள் அங்காடி அமைக்கப்படும்.

**தமிழ்நாடு பனைபொருள் வாரியம்**

- மதுரையில் உள்ள மதுரை–விருதுநகர்–திண்டுக்கல் மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு சம்மேளன 'பதநீர் உற்பத்திப் பிரிவினை' நவீனப்படுத்திட புதிய இயந்திரங்கள் வாங்கிட 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.
- தூத்துக்குடி மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள 400 ஏழை பனைத்தொழில் கைவினைஞர்கள் பயன் பெறும் வண்ணம் பதநீரிலிருந்து பனைவெல்லம் தயாரிக்க தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க 6 இலட்சம் ரூபாய் வழங்கி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்திரவிட்டுள்ளார். ✱



சென்னை மாநகர முன்னாள் மேயர் திரு. சிவராஜ் அவர்களின் 115ஆவது பிறந்தநாளையொட்டி 29.9.2006 அன்று சென்னையில், அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# பூத்துக் குலுங்கும் குறிஞ்சி மலர்கள்



குறிஞ்சிப் பூவுக்கு தமிழ் இலக்கியத்தில் எப்பொழுதும் ஒரு தனி இடம் உண்டு. அதன் நிறத்தை அடிப்படையாக வைத்து அது நீலக்குறிஞ்சி என்று அழைக்கப்படுகிறது. தொல்காப்பிய காலத்தில் மலையும் மலையைச் சார்ந்த இடமும் "குறிஞ்சி" என்று வழங்கப்படுகிறது. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் இந்த அபூர்வ வகைப்பூக்கள் தமிழகத்தில் பல மலைகளில் பூக்கும். நீலகிரி மலைக்கு நீலகிரி என்ற பெயர் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களில் ஒரே நேரத்தில் பூக்கும் நீலக்குறிஞ்சி மலர்களால் தான் ஏற்பட்டது. மலை முழுவதும் நீலப் போர்வை போர்த்தியது போல் காணப்படுவதால்தான், இம்மலைக்கு நீலகிரி மலை என்று பெயர் வழங்கப்பட்டது. மனிதர்களின் வாழ்விடங்கள் பெருகியதால் நீலக்குறிஞ்சி செடிகள் அழியும் அபாயத்தில் உள்ளது.

**விஞ்ஞான பூர்வமான தகவல்கள்:**

குறிஞ்சி மலர்கள் அகான்தைகேன் என்ற தாவர குடும்பத்தைச் சேர்ந்தது. உலக அளவில் 300 வகையான ஸ்ட்ரோபிலான்தஸ் வகை பூக்கள் உள்ளன. இவைகளில் 46 வகைகள் தென்னிந்தியாவில் உள்ள மேற்கு மலை தொடர்களில் உள்ளன.

பழனி மலைகளில் மட்டும் 18 வகைச் செடிகள் உள்ளதாக தாவரவியலாளர் கே.எம். மேத்யூ கண்டுபிடித்தார். சில வகைகள் ஒவ்வொரு வருடமும் பூக்கும். சில அபூர்வ வகைகள் 16 வருடங்களுக்கு 30 முறை மட்டுமே பூக்கும். இந்த வகை பூக்கள் ப்ளேஸ்டேசியல்ஸ் என்று அழைக்கப்படுகின்றன. இதன் சிறப்பம்சம் என்னவெனில், இந்த வகை செடிகள் மலர் மலர்ந்த உடன் விதைகளை உற்பத்தி செய்யும், பின்னர் உடனே இறந்துவிடும். இவ்வகை செடிகள் கடல் மட்டத்திலிருந்து 15 மீட்டர் முதல் 24 மீட்டர் உயரமான இடங்களில் வளரும்.

குறிஞ்சி செடிகள் 60 செ.மீ. முதல் 180 செ.மீ. வரை உயரமாக வளரும். சிலநேரங்களில் 210 செ.மீ., வரை வளரக் கூடியது. பூக்களில் நிறம் வெளிர்நீலம் மற்றும் கருநீலம். சிலநேரங்களில் வெள்ளை நிறத்திலும் பூக்கள் பூக்கும். குறிஞ்சி செடிகள் "ஷோலா" எனப்படும் புல்வெளிகளில் அதிகம் வளரும். பாறைகள் நிறைந்த மலைச்சரிவுகளிலும் வளரும். இவைகள் தமிழகத்தில் கொடைக்கானல் மற்றும் நீலகிரியில் பரவலாக காணப்படுகின்றன. கொடைக்கானல் மலையில் குறிஞ்சி மலர்கள் 1,500 மீட்டர் முதல் 2,300 மீட்டர் உயரமான இடத்தில் காணப்படுகின்றன. வடகவுஞ்சி பெருமாள் மலை (1,600 மீட்டர்), செண்பகனூர் (1,750 மீட்டர்) கோக்கரின் நடைபாதை வட்டப்பகுதி (2,100 மீட்டர்), வில்பட்டி பள்ளத்தாக்கு (1,900 மீட்டர் – 2,200 மீட்டர்), வட்டக்கானல் (1,900 மீட்டர்), பூம்பாறை (1,800 மீட்டர்), கிளாவரை (1,850 மீட்டர்) ஆகிய பகுதியில் காணப்படுகின்றன. குறிஞ்சி மலர் இருக்கும் இடங்கள் அளவுக்கு அதிகமாக யூக்கலிப்டஸ் மற்றும் வாட்டல் பயிர்கள் வளர்ந்திருப்பதால் மிகவும் குறைந்து விட்டது.

நீலக்குறிஞ்சி பூக்கள் 12 வருடங்களுக்கு ஒரு முறை பூக்கும். இதற்கு முன் குறிஞ்சி – 1994 இல் மலர்ந்தது. 12 வருடங்களுக்கு பிறகு, 2006 இல் பூத்துள்ளது. பூக்கும் காலம் ஏப்ரலில் தொடங்கி டிசம்பரில் முடியும். குறிஞ்சி மலரை மீண்டும் பார்க்க 2018ஆம் வருடம் வரை காத்திருக்க வேண்டும்.

**குறிஞ்சி மலரின் மருத்துவ சிறப்புகள்:-**

கோடை மலையில் இரு வகை குறிஞ்சி பூக்கள் உள்ளன. 6 வருடத்திற்கு ஒருமுறை பூக்கும் சிறுகுறிஞ்சி, மற்றொன்று மிகவும் புகழ்பெற்ற 12 வருடங்களுக்கு ஒருமுறை பூக்கும் நீலக்குறிஞ்சி ஆகும். கோடைமலையில் ஆதிவாசி மற்றும் மலை வாழ் மக்கள் தங்கள் வயதை தாங்கள் குறிஞ்சி மலரைக் கண்டதின் அடிப்படையாக வைத்தே கணக்கிடுகின்றனர். ஒருவர் 3 முறை கண்டால் அவருக்கு வயது 36க்கு மேல் என்று கணக்கிடுவார்கள்.

ஒருவர் இரண்டு முறை நீலக்குறிஞ்சி மற்றும் ஒரு முறை சிறுகுறிஞ்சியைப் பார்த்தால் அவருக்கு வயது 30. கல்யாணமாகாத இளைஞர்களை குறிஞ்சிப் பூக்களைத் தொட அனுமதிக்க மாட்டார்கள். குறிஞ்சிப்பூ பூக்கும் பருவம் முடிவடைந்த உடன், ஆதிவாசிகள் முருகனுக்கு சர்க்கரைப் பொங்கல் வைத்து வழிபடுவார்கள். அதுவரை, மலை ஜாதி மக்கள் யாரையும் குறிஞ்சி மலர்களைப் பறிக்க அனுமதிப்பது இல்லை. இதுவே குறிஞ்சி மலர்களை பாதுகாக்கும் சிறந்த வழி ஆகும். விதைகள் உருவாவதற்கு முன்பே பூக்களைப் பறித்து விட்டால், மீண்டும் செடிகள் வளரும் வாய்ப்பு மறைந்து விடும். முழு வீச்சில் குறிஞ்சிப் பூக்கள் மலரும் போது, தேனீக்கள் அதிக அளவில் காணப்படும். குறிஞ்சிப் பூவிலிருந்து கிடைக்கும் தேன் (ஆஸ்துமா போன்ற) நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்களை குணமாக்கும் மருத்துவ குணம் கொண்டது. செடியின் பட்டைகள் இரத்தத்தை சுத்தம் செய்யும் தன்மை உடையவை.

குறிஞ்சி பயிரிடப்பட்டுள்ள இடம் குறைந்து வருவதே மிகவும் கவலைக்குரியது. “ஷோலா” புல்பகுதிகள் வாட்டல் மற்றும் யூக்கலிப்டஸ் தாவரம் பயிரிடும் பகுதியாக மாற்றப்படுவது மிகவும் அபாயகரமானதாகும். மனிதர்கள் வாழும் இடமாக மாற்றுவதும் இவைகளின் அழிவை துரிதப்படுத்துகின்றன.

மற்ற குறிஞ்சி செடியுள்ள பகுதிகள் காட்டுத் தீயாலும், காட்டுக் கோழியாலும் இவைகளின் வளர்ச்சிகள் மிகவும் அழிக்கப்படுகின்றன.

**பாதுகாக்கப்படும் முறைகள்:-**

1. மரப்பயிர்கள் வளர்ப்பு மற்றும் மனிதர்கள் வாழும் இடங்களை பெருக்குவதற்காக புல்வெளிகளை அழிப்பதை முழுமையாக தடை செய்தல்.

2. காட்டுத் தீயிலிருந்து குறிஞ்சி செடிகளை காத்தல்.

3. பூக்காலம் முடிந்த பிறகு அதன் விதைகளைச் சேகரித்துப் பாதுகாத்தல் மற்றும் புதிய நிலப்பரப்புகளில் புதிய செடிகளை நடுதல் ஆகியவை ஆகும்.

மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலுக்கு 23.9.2006 அன்று வருகை புரிந்த போது குறிஞ்சிப் பூக்கள் அடங்கிய பூங்கொத்து கொடுத்து வரவேற்கப்பட்டார். இதனால் ஈர்க்கப்பட்ட அவர் குறிஞ்சி பூக்கள் குறித்து விழா மேடையில் கவிதை எழுதினார்.

***எப்பொழுது காண்பேன் எப்பொழுது காண்பேன்***
***பல ஆண்டுகளின் கனவு***
***கனவு கண்டேன் - கனவு கண்டேன் - கனவு கண்டேன்***
***குறிஞ்சி மலர் தோட்டத்தில் நடந்தேன்***
***எது குறிஞ்சி மலர்கள்?***
***எங்கெங்கும் பூத்துக்குலுங்கின!***
***காட்சி ஒரு அரும்பெரும் காட்சிதான்!***

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சிப் பூக்களால் அழகுக்கு அழகு பெறும் கொடைக்கானலுக்கு சென்று இந்த அரும்பெரும் காட்சியை நாமும் கண்டு மகிழ்வோம்.

*செய்தி-மக்கள்தொடர்பு அலுவலர்,*
*திண்டுக்கல் மாவட்டம்.*



(அன்று ஓட்டல் தொழிலாளி – இன்று ஆட்டோ முதலாளி)

# வெற்றிக்கதை

திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள, பாடி புதுநகர் காலனியைச் சேர்ந்தவர் இவர். மெலிந்த தேகம், படிப்பறிவு குறைவு என்பதை பார்வை காட்டினாலும் பணிவான பண்பு கொண்டவர். தனியார் ஓட்டலில் தொழிலாளியாக பணியாற்றிய 42 வயதான அவரின் பெயர் ராயதுரை. ஆறுமுகம் என்ற 90 வயது தந்தை. ரஞ்சனி என்ற மனைவி. ராஜேஷ் என்ற மகன். ரஞ்சிதா, கல்பனா என்ற இரு மகள்கள் ஆகிய குடும்ப உறுப்பினர்களோடு ஓலைக் குடிசையில் சராசரி நிலைக்கு கீழ் வாழ்வு நடத்தி வந்தவர் இந்த ராயதுரை.

தனது குடும்ப பொருளாதாரத்தை உயர்த்திடவும், பசியின்றி நல்ல துணிமணிகளோடு தனது குழந்தைகளை வளர்த்திடவும் ஓலைக் குடிசையில் ஓராயிரம் இனிய வண்ணக் கனவுகளோடு எண்ணச் சிறகுகளை விரித்து பறந்த ராயதுரைக்கு, தமிழ்நாடு அரசின் கட்டுபாட்டிலுள்ள தாட்கோ நிறுவனத்தின் தனி நபர் கடன் திட்டம் பற்றி அறிய ஆர்வம் வந்தது. போதிய படிப்பறிவு இல்லாமல் ஓட்டல் தொழிலாளியாகப் பணியாற்றும் தனக்கு வாழ்வு எங்கே விடியும் என விடியலை நோக்கி காத்திருந்த இவர், தள்ளாத வயதிலும் தளராத உள்ளத்தோடு நல்ல ஆலோசனைகளை வழங்கும் தனது தந்தையோடும், துன்பத்திலும், இன்பத்திலும் தனது வாழ்வில் பங்கேற்கும் மனைவியோடும் கலந்து பேசி ஒரு முடிவெடுத்தார். தனது வாழ்க்கைக்கு சாலை வழியே சாலச்சிறந்தது என்ற தீர்மானத்துடன், முயற்சி செய்து முதலில் ஆட்டோ ஓட்ட கற்றுக் கொண்டு உரிமம் பெற்றார். அதனைத் தொடர்ந்து வாடகை ஆட்டோ ஓட்டி தொழில் நடத்தி வந்தார். இந்த தொழிலில் ஒரு நாளைக்கு ஆட்டோ வாடகை மற்றும் செலவு போக ரூ.80 முதல் ரூ.100 வரை வருமானம் கிட்டியது. சொந்தமாக ஆட்டோ வாங்கும் எண்ணம் ராயதுரை உள்ளத்தில் ஒளிக்கீற்றாய் உதித்தது.

தனது சிந்தையில் உதயமான புதிய சிந்தனையுடன் திருவள்ளூரிலுள்ள தாட்கோ அலுவலகம் சென்றார். தன்நிலையை எடுத்துக்கூறி உதவி கேட்டவருக்குத் தனி நபர் கடன் திட்டம் பற்றி விளக்கி கூறப்பட்டது. உடனடியாக கலைஞர் அரசிடம் தனிநபர் கடன் கோரி விண்ணப்ப மனு செய்தார். கடன் நடைமுறையும் விரைவில் முடிந்து ஈக்காட்டுதாங்கல் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் தனது பங்குத் தொகையான ரூ.5,322ஐ செலுத்தி ரூ.76,116 வங்கிக் கடன் பெற்றார். வங்கிக் கடன் தவிர்த்து ரூ.25 ஆயிரம் மானியத்தோடு ஆட்டோ ஒதுக்கீடும், சாலையில் ஆட்டோ ஓடுவதற்கான அனுமதியும் (Auto Permit) ஒருசேரப் பெற்று அதற்கான ஆணையையும், ஆட்டோ சாவியினையும் 15.8.06 அன்று சுதந்திரத் திருநாளில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திரு. ரண்வீர் ப்ரசாத்,இ.ஆ.ப., அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார். ராயதுரை, தனது குடும்பத்தின் வாழ்க்கை சக்கரம் ஓட, ஆட்டோவின் வண்டிச் சக்கரங்கள் சரியாக ஓடவேண்டும் என்பதை நன்கு அறிந்து கொண்ட ராயதுரை கண்ணும் கருத்துமாக ஆட்டோவை பராமரித்து வந்தார். பயணிகளிடமும் பணிவோடு பழகினார். ஆட்டோ சவாரியும் அதிகம் கிடைத்தது. வருவாயும் சற்றுக் கூடியது. குடும்பமும் பொருளாதாரத்தில் உயரத் தொடங்கியது.

பசி, பட்டினி, வறுமையில் சிக்கி ஓலைக் குடிசையின் ஓரத்தில் ஒண்டி, குழந்தைகளின் எதிர்கால வாழ்விற்கு ஏங்கித் தவித்த ராயதுரைக்கு வந்தது புதுவாழ்வு, கை தூக்கி விட்டது கலைஞர் அரசு.

ஆட்டோ ஓட்டுநர் ராயதுரையிடம் நாம் பேசியபோது, "ஒரு நாளைக்கு சுமார் 350 ரூபாய் வருமானம் வருவதாகவும், அதில் ஒரு நாளைக்கு பெட்ரோல் செலவு 120 ரூபாய் போக, வங்கி கடனுக்கு என 60 ரூபாயும், குடும்பச் செலவு மற்றும் சேமிப்புக்கு என 170 ரூபாயும் ஒதுக்கி வாழ்க்கை நடத்துவதாகவும் தெரிவித்தார்.

தற்போது வங்கிக் கடனுக்கு செலுத்த தவணைத்தொகையாக மாதம் ரூ.900 நிர்ணயிக்க பட்டிருந்தாலும், மாதத்திற்கு ரூ.1,700 என்று கூடுதலாகவே செலுத்தி வங்கிக் கடனை அடைத்துவருவதாகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்த அவர், ஓலைக்குடிசையிலிருந்து பாடி புதுநகரில் ஓட்டு வீட்டிற்கு ரூ.600 வாடகையில் குடியேறி இருப்பதோடு, தனது குழந்தைகளை நல்ல பள்ளியில் படிக்க வைப்பதாகவும், சேமிப்புக்கு ஏற்றவாறு விரும்பும் துணிமணிகளை எடுத்து கொடுத்து குடும்பத்தாரை மகிழ்ச்சியுடன் வைத்திருப்பதாகவும் நெகிழ்ச்சியோடு நினைவு கூர்ந்தார். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பது போல, தான் அரசிடமிருந்து அடைந்த பயனை, தனது தோழர்களுக்கும் உறவினர்களுக்கும் சொல்லி மற்றவர் பயனடைய வழிகாட்டுகிறார் முன்னாள் ஓட்டல் தொழிலாளி– இந்நாள் ஆட்டோ முதலாளி ராயதுரை.

முயன்றால் முன்னேறலாம் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கும் இவரது தொழில் சிறக்க தமிழக அரசு கைகொடுத்துள்ளது. அவர் மேலும், வளம் பெருக வாருங்கள் வாழ்த்துவோம்.

*செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர் மாவட்டம்.*

# அறிந்துகொள்வோம் அரசாணையை

**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

திட்டங்கள் – புதிய மாநில திட்டம் – அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – அறிமுகப்படுத்துதல் – திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மாஅதி2)துறை**

அரசாணை (நிலை) எண் : 115 நாள் : 11.9.2006

படிக்கப்பட்டவை :

ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநரின் கடிதம் 48049 /2006 எஸ்.எஸ். –3, நாள்.29.6.2006.

– – – –

**ஆணை :**

பதின்மூன்றாவது சட்டப்பேரவையின் முதலாவது கூட்டத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் ஊரகப் பகுதிகளில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில், அரசு கூடுதல் கவனம் செலுத்தும் என்றும், கிராமங்களில் உள்ள முக்கிய தெருக்கள் படிப்படியாகக் கான்கிரீட் தளங்களாக மாற்றப்படும் என்றும், ஐநூறு அல்லது ஐநூறுக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஊரகப் பகுதிகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றும், கிராமங்களில் மக்கள் பொதுவாகக் கூடும் மையப்பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

2. மேலே படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில் தற்போது நடைமுறையில் உள்ள மாநில அரசால் செயல்படுத்தப்படும் சில திட்டங்களுக்கு உரிய பயன்பாடு இல்லாமல் இருப்பதாலும், இந்த அறிவிப்புகளை மத்திய அரசு திட்டங்களின் மூலம் நிறைவேற்ற முடியாத காரணத்தாலும், மாநில அரசின் புதிய திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்தப்பட வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், புதிய திட்டத்தின் சிறப்பு அம்சங்களை அவர் எடுத்துக் கூறியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்புகளை அரசு கவனமாகப் பரிசீலித்து மாநில அரசால் ஏற்கெனவே செயல்படுத்தப்படும் சில திட்டங்களுக்கு மாற்றுத் திட்டமாக "அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" (All Villages Anna Renaissance Scheme) என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தி செயற்படுத்தலாம் என அரசு முடிவெடுத்து அவ்வாறே அதனை பின்வருமாறு செயற்படுத்த ஆணையிடுகிறது.

**4. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்துவதற்கான காரணங்கள்**

i) அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஒரு சட்டமன்றத் தொகுதியில் ஒரு ஆண்டுக்கு ஒரு கிராமத்தில் மட்டும் செயல்படுத்தப்பட்டது. 'நமது கிராமம்' திட்டத்தில் நிதி ஆதாரங்கள் அனைத்தும் மிக மெல்லிய அளவில் பரவலாக்கப்பட்டது. மேலும், வறுமை ஒழிப்புத் திட்டம் மற்றும் ஊரகக் குடியிருப்புத் திட்டம் ஆகியவை இத்திட்டங்களில் மேற்கூறிய உள்ளீடான குறைபாடுகள் காரணமாக வெற்றிகரமாக நிறைவேற்றப்பட முடியவில்லை.

ii) மாநில அரசு நிறைவேற்றும் மத்திய அரசின் திட்டங்களான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் முழு சுகாதார இயக்கம் ஆகியவை எதிர்பாரா நிலையில் குறுகிய வாய்ப்பாகவே அமைந்துள்ளது. செய்யவேண்டுவன, செய்யக் கூடாதவை என அறுதியிடப்பட்ட மிகக் கடினமான மத்திய அரசின் வழிகாட்டும் நெறிமுறைகள் உள்ளூர்ப் பகுதிகளின் தேவைக்கேற்ற நெகிழ்வு தன்மை அற்றதாக உள்ளது. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் ஊரகப் பகுதிகளில் வீட்டு வசதி அளிக்கவும், பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம், சுய வேலைவாய்ப்பை உருவாக்கவும் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், சுகாதாரத்தின் ஒரு சில பகுதிகளை மட்டுமே உள்ளடக்கியது முழு சுகாதார இயக்கம் ஆகும். இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமத்திலும் ஆண்டொன்றுக்கு சராசரியாக 3லிருந்து 4 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மிகக் குறைவான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் 6 மாவட்டங்களில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது. மேலும், சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டம், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் ஆகிய இரண்டும் வேலைவாய்ப்பை உருவாக்குவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன.

iii) ஊரகப் பகுதிகளில், சமுதாய சொத்துக்களை உருவாக்கவும், பராமரிக்கவும், அவற்றின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்குமான தேவைகள் அதிகமாகவே உள்ளன. 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், கிராம ஊராட்சிக்கென குறிப்பிட்ட கடமைகளையும் பொறுப்புகளையும் நிர்ணயம் செய்துள்ளது. அதன்படி ஊராட்சிகளால் நிறைவேற்றப்பட வேண்டிய குறிப்பிட்ட பொருட்களை நடைமுறையில் உள்ள திட்டங்கள் மூலம் நிறைவேற்ற முடிவதில்லை. மேலும், பெரும்பாலான உள்ளாட்சி நிறுவனங்கள் அவற்றின் தேவைகளை நிறைவு செய்ய போதிய சொந்த நிதி ஆதாரங்கள் இல்லாததால் பல்வேறு திட்ட நிதி ஒதுக்கீடுகளை எதிர்நோக்கியே உள்ளன. தற்போது உள்ள திட்டங்களை செயல்படுத்துவதற்கு அவற்றின் வழிகாட்டி நெறிமுறைகள் எளிமையானதாக இருக்கவும், உள்ளாட்சி நிறுவனங்கள் தங்களின் விருப்பப் பணிகளை எடுத்துச் செய்யும் வகையிலும், கிராம வளர்ச்சிக்கு மிக அத்தியாவசியமாக தேவைப்படும் மத்திய அரசுத் திட்டங்களின் கீழ் எடுத்துச் செய்ய இயலாத அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கியதாக உள்ள புதிய திட்டமே "அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்'' ஆகும்.

## 5. நிதி ஒதுக்கீடு

நமது கிராமம் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.175 கோடி, வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு (Ultra Poor) ஒதுக்கப்பட்ட ரூ.20 கோடி, ஊரகக் குடியிருப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.50 கோடி மற்றும் தன்னிறைவுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.75 கோடி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் தொகையில் உள்ள சமன்பாடு நிதி மற்றும் ஊக்கத் தொகை நிதிகளிலிருந்து ரூ.90 கோடி தொகையினையும் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும் நடப்பு 2006–2007 நிதி ஆண்டில் கூடுதலாக ரூ. 90 கோடி ஒதுக்கீடு திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீடு 2006–2007–ல் சேர்க்கப்படும். இது தொடர்பாக உரிய கருத்துருக்களை அரசு நிதி (ஊ.வ) துறைக்கு திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீடு 2006–2007–க்கான கருத்துருக்கள் அனுப்பும்பொழுது சேர்த்து அனுப்ப தக்க நடவடிக்கை எடுக்குமாறு ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேற்குறிப்பிட்ட மொத்தம் ரூ.500 கோடி நிதியை "அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு" ஒதுக்கீடு செய்து நடப்பு ஆண்டில் பயன்படுத்த அரசு ஆணையிடுகிறது.

## 6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்

"4515.00 ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு – 800 ஏனைய செலவு JP. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 16. பெரும்பணிகள் (த.தொ.கு.எண்.4515.00.800 JP. 1602)''

## 7. கிராமங்கள் தேர்வு

மாநிலத்திலுள்ள 12,618 கிராம ஊராட்சிகளில் ஆண்டொன்றுக்கு சுமார் 2,500 கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்து அவை ஒவ்வொன்றுக்கும் சுமார் ரூபாய் 20 இலட்சம் நிதியில் படிப்படியாக, 5 ஆண்டுகளில் அனைத்து ஊராட்சிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்ட கிராமங்களை இத்திட்டத்தின் இறுதிக் கட்டத்தில் சேர்த்துக்கொள்ள பரிசீலிக்கப்படும். குறைந்த தனிநபர் வருமானம் உள்ள கிராம ஊராட்சிகள் முதலில் பரிசீலிக்கப்பட்டு, வட்டார வாரியாக, ஊராட்சியின் வருமானத்திற்கேற்றவாறு, ஏறுமுகமாக, ஊராட்சிகளை வரிசைப்படுத்தி, முதல் ஆண்டில் குறைந்த தனிநபர் வருமானம் உள்ள 2,500 கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 8. வட்டார அளவில் கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்யும் முறை

குறைந்த தனிநபர் வருமானம் உள்ள கிராம ஊராட்சிகள் முதலில் பரிசீலிக்கப்பட்டு, வட்டார வாரியாக, ஊராட்சியின் வருமானத்திற்கேற்றவாறு, ஏறுமுகமாக, ஊராட்சிகளை வரிசைப்படுத்தி, முதல் ஆண்டில் குறைந்த வருமானம் உள்ள 2,500 கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

வட்டாரத்தை ஒரு அலகாகக் கொண்டு, அனைத்து ஊராட்சிகளையும், அவைகளின் தனிநபர் வருமானத்தின் அடிப்படையில், ஏறுமுகமாக வரிசைப்படுத்தி, முதலாமாண்டில் 6 முதல் 7 ஊராட்சிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்படும் எனவும், இரண்டாவது வருடத்தில் அடுத்த 6 முதல் 7 ஊராட்சிகள் இத்திட்டத்தில் பங்கேற்கத் தகுதியுடையவையாகின்றன. இந்த முறையில் மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலுள்ள அனைத்து வட்டாரங்களிலும், பாகுபாடு ஏதுமின்றி ஒரே சீரான நிதிப் பங்கீடு மற்றும் திட்ட செயலாக்கம், இதன் மூலம் உறுதிப் படுத்தப்படுகின்றன. எனவே, வட்டாரத்தை ஒரு அலகாகக் கொண்டு, தனிநபர் வருமானத்தின் அடிப்படையில், கிராம ஊராட்சிகளை ஏறுமுகமாக வரிசைப்படுத்தி, அதன்படி ஒவ்வொரு வருடமும் சுமார் 2,500 கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்படும்.

## 9. இந்தப் புதிய திட்டத்தில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

### I) வரையறுக்கப்படாத நிதி

ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒதுக்கப்படும் ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சம் வரையறுக்கப்படாத தொகையாக இருக்கும். இதிலிருந்து கிராமத்தின் முக்கியத் தேவைகளைப் பிரதிபலிக்கும் பணிகளை மேற்கொள்ள இயலும். எஞ்சிய ரூ.15 இலட்சத்தில் கீழ்க்கண்ட பணிகளை ஊராட்சி மேற்கொள்ளும். மேலும் வரையறுக்கப்படாத ரூ.5 இலட்சம் நிதியினை தேவைக்கேற்ப கீழ்க்கண்ட பணிகளையும் நிறைவேற்ற பயன்படுத்தலாம்.

### II) சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்

தமிழ்நாடு முழுவதும் சுமார் 27,000 கி.மீ. நீளமுள்ள சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்க வேண்டிய அவசியம் உள்ளது. இந்தப் பணி படிப்படியாக மேற்கொள்ளப்படலாம். மேற்படி சாலைகளை அமைக்க சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி, பொது நிதி மற்றும் மாநில நிதிக்குழு மான்யம் ஆகியவை போதுமானதாக இல்லை. ரூபாய் மூன்று இலட்சத்துக்கு மேற்படாமல் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்க வரையறை செய்யப்படுகிறது. சிமெண்ட் பாலங்கள் அமைப்பது மற்ற பொருட்களைப் பயன்படுத்துவது போன்ற மாற்றுத் தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்த ஊக்கப்படுத்தலாம்.

### III) தெரு விளக்குகள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகள்

கட்டுமானங்கள் உள்ள மற்றும் கட்டுமானங்கள் இல்லாத பொது இடங்களில் தெருவிளக்குகள் அமைப்பது 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 110 (அ) மற்றும் 111 (ஆ) –ன்படி கிராம ஊராட்சியின் கடமையாகும்.

#### (அ) இதுவரை தெரு விளக்குகள் அமைக்கப்படாத இடங்களுக்கு தெரு விளக்கு வசதிகளை விரிவாக்குதல்

இப்பணி தேவைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படலாம். இத்திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட குடியிருப்புப் பகுதிகள் ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகள் போன்ற விரிவாக்கப் பகுதிகள் மற்றும் புதியதாக ஏற்படுத்தப்பட்ட இந்திரா நினைவு குடியிருப்புப் பகுதிகளுக்குத் தேவையின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து, தெருவிளக்குகள் விரிவுபடுத்தப்படலாம்.

#### (ஆ) சோடியம் ஆவி விளக்குகள்

கிராமங்களில் மக்கள் கூடும் பொதுவான முக்கிய இடங்களில் சோடியம் ஆவி விளக்குகள் வரையறைகளுக்குட்பட்டு அமைக்கப்படலாம்.

## IV. ஒரு கிராமத்திற்கு ஒரு குளம்

**கிராமங்களில் உள்ள குளம் குட்டைகளைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செய்தலை ஊராட்சியின் கடமை என ஊராட்சிகளின் விதி 110 (ஜி) வரையறை செய்கிறது**

அறுகிவரும் நீர் ஆதாரங்களால் நிலத்தடி நீரின் அளவு கணிசமாகக் குறைந்துள்ளது. கூடுதல் ஆழ்துளை குழாய் கிணறுகளின் மூலம் நீரினை உறிஞ்சுவதால் இப்பிரச்சினை மேலும் தீவிரமாகிறது. எனவே, உத்வேகத்துடன் மழை நீரை சேகரிப்பதின் மூலம் நிலத்தடி நீரின் அளவை உயர்த்துவது அவசியமாகிறது. இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நீரமைப்புகளின் கொள்ளளவை அதிகப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஒரு கிராமத்திற்கு ஒரு குளம் என்ற இத்திட்டத்தின் கீழ் இயந்திரங்களைக் கொண்டு குளங்கள், குட்டைகள், கோவில் குளங்கள், மற்றும் ஊருணிகளில் அதிகபட்ச தரம் மற்றும் சரியான அளவுகளுடன் அகலப்படுத்துவது மற்றும் ஆழப்படுத்துவது போன்ற பணிகளை மேற்கொள்ளலாம். மேலும், தேவையான இடங்களில் கைப்பிடிச்சுவர், இறங்குபடிகள் மற்றும் வேலிகள் அமைப்பது போன்ற இதர அம்சங்களும் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளலாம். இத்திட்டத்தின்கீழ், சிறுபாசன குளங்களை மேம்படுத்தக்கூடாது. மேலும், தொலைநோக்குப் பார்வையுடன், நீர் சேகரிப்பு திட்டப் பணிகள் முறையாக செய்யப்பட வேண்டும். சுற்றுச்சூழல் மற்றும் நீர்வளம் மேம்படும்.

இந்த வகையிலான பணியை குறைந்த பட்சம் ரூ.3 இலட்சம் செலவிலும் தேவையின் அடிப்படையில் அதிகபட்சத் தொகையிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் ஒரு குளம் அமைக்க ரூ.3 இலட்சம் முதல் ரூ.5 இலட்சம் வரை ஒதுக்கீடு செய்யலாம்.

## V. உள்நாட்டு மீன்வளம் :-

உள்நாட்டு மீன்வளத்தை மேம்படுத்துவது உள்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையாக அமைகிறது. இது நிலைகளை தூய்மைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதோடல்லாமல், ஊராட்சி வருவாயையும் அதிகப்படுத்துகிறது. மேலும், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு, நிலையான வருமானம் ஈட்டும் தொழிலாகவும் இது விளங்குகிறது. குறைந்த முதலீட்டுடன் மீன்வளத்துறை ஊரகப் பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் இதுபோன்ற மீன்வளத்தைப் பெருக்கி குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு உள்ளாட்சி நிறுவனங்கள் ஏலம் விட்டு வருவாயைப் பெருக்கும் உரிமையுடன் ஊரக உள்ளாட்சிகளிடம் ஒப்படைக்கலாம்.

இத்திட்டத்தில் ஒரு குளத்தை மேம்பாடு செய்ய சுமார் ரூ.25,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டுமென்று வரையறை செய்யப்படுகிறது.

## VI. இடுகாடு மற்றும் சுடுகாடுகள் :-

இடுகாடு மற்றும் சுடுகாடுகள் அமைப்பது மற்றும் பராமரிப்பது, 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், விதி 110 (எப்)–ன்படி ஊராட்சியின் கடமை ஆகும்.

இடுகாடு / சுடுகாடுகள் திறந்தவெளியாக உள்ளன. இத்தகைய இடுகாடு / சுடுகாடு பகுதிகளில் அடிப்படை வசதிகளும் குறைவு. ஊரகப் பகுதிகளில் முறையாக வரையறுக்கப்பட்ட எல்லைகள் கொண்ட இடுகாடு / சுடுகாடு என்பது அடிப்படைத் தேவையாகும். பல கிராமங்களில் சரியான இடுகாடு / சுடுகாடு இல்லை. அப்படியே இருந்தாலும் அவை அடிப்படை வசதிகள் ஏதும் இல்லாமலேயே உள்ளன. ஆகவே, இத்திட்டத்தின் கீழ் முறையான வரையறை செய்யப்பட்ட எல்லைகள், சுற்றுச்சூழல், காத்திருப்போர் அறை, விளக்கு வசதி, நீர்வசதி போன்றவை செய்துதரப்படலாம். கைப்பம்புடன் கூடிய ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைக்கப்படலாம். நாளடைவில் நடைபாதை வசதிகளை ஏற்படுத்தலாம். மேலும், கிராம ஊராட்சிகள், இடுகாட்டின் உள்ளேயும், சுற்றுப்புறங்களிலும் மரக் கன்றுகளை நடுவதன் மூலம், தூய்மையான சுற்றுச்சூழல் உருவாகும்.

## VII. குடிநீர் வழங்கல் :-

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், விதி 110 (ஜி)–ன்படி கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுப்பது கிராம ஊராட்சியின் கடமையாகும்.

தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர்த் திட்டங்களில் பெரும்பான்மையானவை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறுவப்பட்டன. குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்புப் பணிகள் ஊராட்சிகளின் பொறுப்பில் உள்ளன. மிகப்பழைய பம்புகள் மற்றும் குடிநீர் இணைப்புகளைக் கொண்டுள்ள இக்குடிநீர்த் திட்டங்களைப் பராமரிப்பது ஊராட்சிகளுக்கு மிகவும் கடினமாக உள்ளது. பழைய குடிநீர் இணைப்புகளில் உள்ள நீர்க்கசிவுகள் பல நோய்கள் பரவ காரணமாகிறது.

பழைய குடிநீர்த் திட்டங்களைப் புனரமைப்பது, தூர் வாருதல், அகழ்வு செய்தல், குடிநீர் குழாய் விஸ்தரித்தல், மின் பம்புகளைப் புதுப்பித்தல், போன்ற பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நெறிமுறைகளின் படி இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளலாம். இத்துடன் தேவையான இடங்களில் கூடுதல் ஆதாரங்களையும் உருவாக்கலாம்.

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் ஒரு பணிக்கு குறைந்தபட்சம் ரூ.1 இலட்சம் எனவும், தேவையின் அடிப்படையில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யவும் வரையறை செய்யலாம்.

**VIII. விளையாட்டு :-**

விளையாட்டுத்திடல்; பூங்காக்கள், விளையாட்டுக் குழுக்கள் மற்றும் உடற்பயிற்சி மையங்கள் அமைப்பது மற்றும் பராமரிப்பது, 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 111 (எச்)–ன்படி, ஊராட்சியின் கடமையாகும்.

விளையாட்டு நடவடிக்கைகள் இளைஞர்களின் சக்தியை நெறிப்படுத்தி, சமூக பொருளாதார பிரச்சினைகளைக் குறைப்பதற்கும்; ஊரக இளைஞர்களிடையே விளையாட்டுத் திறமையை உருவாக்குவதற்கும் பயன்படும். தேவையின் அடிப்படையில், மக்கள் கூடும் பொதுவான இடங்களிலும் பள்ளிகளிலும், விளையாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள கடந்த 2000–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட “விளையாட்டு மற்றும் மனமகிழ்வு மன்றங்களை” புதுப்பிக்கலாம்.

கிராம இளைஞர்களுக்கான விளையாட்டு வசதிகள் செய்து கொடுக்க ஒரு கிராமத்திற்கு ரூ. 50,000 என வரம்பு நிர்ணயிக்கப்படுகிறது. அல்லது அந்த கிராமத்தில் உள்ள பள்ளியில் விளையாட்டு மையம் அமைக்க ரூ. 1.50 இலட்சம் செலவு செய்யலாம்.

**IX. படிப்பகம் :-**

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு III (ஜி) மற்றும் (ஐ) ன்படி, படிப்பகம் எழுத்தறிவு மையங்கள், அமைத்தல், மற்றும் பராமரித்தல் ஊராட்சியின் கடமையாகும்.

ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு சமுதாயக் கூடம் உள்ளது. அவை பெரும்பாலும் பயன்படுத்தப்படாமலேயே உள்ளன. இந்த சமுதாயக் கூடங்கள் அல்லது அதில் ஒரு பகுதியை படிப்பகங்களாகப் பயன்படுத்தலாம்; சமுதாயக் கூடங்கள் கிடைக்கப் பெறவில்லையெனில் அக் கிராமத்தில் உள்ள மகளிர் சுயஉதவிக் குழுக் கட்டடம் அல்லது ஒரு பொது கட்டடம் படிப்பகமாக மாற்றியமைக்கப்படலாம்.

கிராமப்புறங்களில், செய்தித்தாள்கள், வார இதழ்கள் போன்ற பத்திரிக்கை படிக்கும் பழக்கத்தினை உருவாக்கிட தமிழ், ஆங்கில செய்தித்தாள்கள் மற்றும் வார இதழ்களுக்கு கிராம ஊராட்சிகள் சந்தா செலுத்தி மகளிர் சுயஉதவிக்குழுக் கட்டடங்கள் அல்லது இதர பொதுவான மக்கள் கூடும் இடங்கள் ஆகியவற்றில் கிடைக்குமாறு நடவடிக்கை எடுக்கலாம். கேரம் போர்டு, சதுரங்கம், போன்ற உள்ளரங்க விளையாட்டுக்களை மேலும் ஊக்கப்படுத்தலாம். படிப்பகங்களாக பயன்படுத்தத்தக்க சமுதாயக் கூடங்கள், இதர பொதுக் கட்டடங்களை, சிறிய அளவில் பழுது நீக்கி பயன்படுத்தலாம். புத்தகம், மேஜை, நாற்காலி, அலமாரி போன்ற மரச்சாமான்கள் நன்கொடை வடிவில் வேண்டி பெறலாம்.

இவ்வாறு நிறுவப்படும் ஒவ்வொரு படிப்பகத்திற்கும் செலவு செய்ய ரூபாய் 1.00 இலட்சம் உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்படுகிறது.

## X. கிராம அங்காடிகள் / சந்தைகள்

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 111 (சி), ஊராட்சி ஒன்றிய அங்காடிகள் / சந்தைகள் தவிர கிராம சந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பு கிராம ஊராட்சியைச் சேர்ந்தது என குறிப்பிடுகிறது.

பொதுமக்களும், கால்நடைகளும், வழக்கமாகக் கூடும் கிராம அங்காடி மற்றும் சந்தைகள் நல்ல நிலையில் இல்லை. அவ்விடங்களில் சரியான சுகாதார மற்றும் குடிநீர் வசதிகள் இல்லை. சரியான தரைத்தளம் இல்லாமலும், வியாபாரிகள் நிழலிடம் இல்லாமலும் நாள் முழுவதும் வெயிலில் அமரும் நிலை உள்ளது. இப்புதிய திட்டத்தின் கீழ் கிராம அங்காடிகளும், சந்தைகளும், புதுப்பிக்கப்படலாம். தரைத்தளமும், ஒடு வேய்ந்த மேற்கூரையும் அமைக்கலாம். பொதுமக்களுக்கும், கால்நடைகளுக்கும் தேவையான குடிநீர் வசதிகளும், செய்து தரலாம். பொது கழிப்பிடங்கள் / கழிப்பறைகளும் தேவையின் அடிப்படையில் அமைக்கப்படும்.

## XI. தகவல், கல்வி மற்றும் கலாச்சார நடவடிக்கைகள் (IEC)

இத்திட்டத்திற்கு, ஒவ்வொரு ஆண்டிலும் ஒதுக்கப்படும் நிதியாகிய ரூ.500 கோடியில், ஒரு விழுக்காடு ஆகிய ரூ.5 கோடி நிதி தகவல், கல்வி மற்றும் கலாச்சார நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தைப் பற்றியும், கல்வி, சுகாதாரம், துப்புரவு மற்றும் சமூகம் சார்ந்த நடவடிக்கைகள் பற்றியும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு இந்த நிதியினைப் பயன்படுத்தலாம். இந்த நிதியினை ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநர் பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பிரித்தளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

## XII. பிற திட்டங்களுடன் ஒருங்கிணைத்துச் செயல்படுத்துதல்

ஒவ்வொரு ஊராட்சிக்குமான ரூபாய் 20 இலட்சத்துடன் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம், புதுவாழ்வுத் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின் நிதியினையும் ஒருங்கிணைத்து தேர்வு செய்யப்படும் கிராமங்களின் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் சிறப்பு கவனத்துடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தில் மிகவும் குறைந்த தனிநபர் வருமானத்தின் அடிப்படையில் கிராமங்கள் செயலாக்கத்திற்கு தேர்வு செய்யப்படுகின்றன. இந்த கிராமங்களில் செயல்படுத்தப்படுகின்ற பணிகள் 1994 –ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திற்கு உட்பட்டவையாகும். மீதம் உள்ள பணிகளைத் தேர்வு செய்வதற்கும், செயற்படுத்துவதற்கும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியர் இத்திட்டங்களை செயல்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட ஊராட்சி அல்லது தொடர்புடைய துறைகளுக்கு செயலாக்கத்திற்கு ஒப்படைக்க வேண்டும். இத்திட்டங்களை செயல்படுத்திய பிறகு கிராமங்களில் விடுபட்டுள்ள அடிப்படை வசதிகள் ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டத்தின் (RIDF) கீழ் நிதி பெற்று நிறைவேற்றப்படும்.

11. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் பயனடைய உள்ள கிராமங்களின் பட்டியல் ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநரால் பின்னர் வெளியிடப்படும். மேலும், இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களின் செயற்பாட்டிற்கு உரிய நெறிமுறைகள் திட்ட வாரியாக தனியாக வெளியிடப்படும்.

12. இத்திட்டத்திற்கென அரசால் அனுமதிக்கப்படும் தொகையைப் பெற்று உரிய கிராம ஊராட்சிகளுக்குப் பிரித்து வழங்கிட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

13. இத்திட்டத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் மதிப்பீட்டுக்கணக்கு, நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

14. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 54117/ஊவ/2006, நாள் 08.9.2006–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் உத்தரவுப்படி//

க.அசோக் வர்தன் ஷெட்டி
அரசு செயலாளர்

# மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தால் மணம் புரிந்தோரின் மனமகிழ்ச்சி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தில் ஏழைப் பெண்களின் திருமணத்திற்காக முதற்கட்டமாக ரூபாய் 12 இலட்சத்து 75 ஆயிரம் பெரம்பலூர் மாவட்டத்திற்கு சமூகநலத்துறை மூலம் நிதி வழங்கப்பட்டது. கடந்த ஆட்சி காலத்தில் ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு அரசு வழங்கும் திருமண உதவித் தொகை முழுவதும் நிறுத்தப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்திற்கு ரூபாய் 10 ஆயிரம் வழங்கப்பட்டதை ரூபாய் 15 ஆயிரமாக உயர்த்தி உத்தரவிட்டார். ஏழை தாய்மார்களும், இதுவரை திருமணமாகாத ஏழைப் பெண்களும் இத்திட்டத்தினை பெரிதும் வரவேற்றுள்ளனர். இத்திட்டத்தின் கீழ், பெரம்பலூர் மாவட்டத்தில் 57 ஏழைப் பெண்களுக்கு ரூபாய் 8 இலட்சத்து 55 ஆயிரம் திருமண உதவித் தொகையாக அவர்களது திருமணத்திற்கு முன்பாகவே வழங்கப்பட்டது.

இதுபோல், தமிழக அரசு சமூகநலத்துறை மூலம் மேற்கொள்ளப் படும் கலப்புத் திருமண நிதிஉதவித் திட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்திற்கு முதல் கட்டமாக ரூபாய் 4 இலட்சத்து 50 ஆயிரம் நிதி பெறப்பட்டு, இதுவரை 11 தம்பதியருக்கு தலா ரூபாய் 20 ஆயிரம் வீதம் ரூ.2 இலட்சத்து 20 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. ரூபாய் 7 இலட்சத்து 30 ஆயிரம் நிதி பெறப்பட்டு, இதுவரை 9 விதவை தாய்மார்களின் மகள்கள் திருமணத்திற்கு தலா ரூபாய் 10 ஆயிரம் வீதம் ரூபாய் 90 ஆயிரம் விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளது. ஆதரவற்ற பெண்களின் திருமண நிதியுதவித் திட்டத்தில் 2 பெண்களுக்கு ரூபாய் 20 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் விதவைத் தாய்மார்களின் குழந்தைகளுக்கு இலவச பாடநூல் வழங்கும் திட்டத்தில் 700 குழந்தை களுக்கு ரூபாய் 70 ஆயிரம் மதிப்பீட்டில் இலவச பாடநூல்கள் வழங்கப் பட்டுள்ளன.

தற்பொழுது மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கிய திருமண உதவித்தொகை மூலம் பொருளாதார வசதியற்ற நிலையில் தங்கள் மகள்களுக்கு நடக்காமல் இருந்த திருமணம், தற்பொழுது நடைபெற்றுள்ளது என்று உதவித் தொகை பெற்ற பெரம்பலூர் மாவட்டம், திருவெங்கனூர் கிராமத்தை சேர்ந்த ஆனந்தவள்ளி, நல்லநாயகபுரம்

கிராமத்தை சேர்ந்த கலையரசி, விளாக்குறிச்சி செந்தாமரை, எசனை கீழக்கரையை சேர்ந்த மல்லிகா, செஞ்சேரி சிவமாலை ஆகியோர் மனம் நெகிழ்ந்து தங்களது நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்து உள்ளார்கள்.

**பெரம்பலூர் மாவட்டத்தில் தரம் உயர்த்தப்பட்ட 8 அரசு பள்ளிகளில் 1,133 ஏழை மாணவ, மாணவியர்களுக்கு அடிப்படை இலவச கல்வி**

தமிழக அரசு அறிவித்த 100 பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டதில் பெரம்பலூர் மாவட்டத்தில் 8 அரசு பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டன. இதன்மூலம் அடிப்படை கல்வி கனவாக இருந்த 1133 ஏழை மாணவ, மாணவியர்கள் இலவசமாக அடிப்படை கல்வி பயிலும் வாய்ப்பு பெற்றுள்ளனர். தமிழக அரசு அறிவித்த 100 பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்ட திட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில்

1. அனுக்கூர் அரசு உயர்நிலைப்பள்ளி – அரசு மேல்நிலைப் பள்ளியாகவும்.

2. கோவிலூர் அரசு உயர்நிலைப்பள்ளி – அரசு மேல்நிலைப்பள்ளியாகவும்

3. மீன்சுருட்டி அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி – அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியாகவும் தரம் உயர்த்தப்பட்டன. மேலும் கீழ்காணும் 5 அரசு உயர்நிலைப்பள்ளிகளும் உருவாக்கப்பட்டன.

1. அரியலூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து – அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி புதிதாக தொடங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

2. சிறுகடம்பூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி – அரசு உயர்நிலைப் பள்ளியாகவும்

3. அருங்கால் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி – அரசு உயர்நிலைப்பள்ளியாகவும்

4. பெரியதத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி – அரசு உயர்நிலைப் பள்ளியாகவும்

5. சோழன் குடிகாடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி – அரசு உயர்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தி உத்தரவுகள் வழங்கப்பட்டு மிகவும் பின்தங்கிய கிராமப் பகுதிகளில் அரசு உயர்நிலைப்பள்ளிகளும், அரசு மேல்நிலைப்பள்ளிகளும் தொடங்கப் பட்டுள்ளதுடன், மகளிர் கல்வியை ஊக்கப்படுத்திட அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளிகளும், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிகளும் தொடங்கப் பட்டுள்ளது. பெரம்பலூர் கிராமப்புற ஏழை மாணவ, மாணவிகளின் அடிப்படை கல்வி வசதிக்கு பெரிய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. பள்ளிகள் இந்த ஆண்டில் தரம் உயர்த்தப்பட்டதன் மூலம் மட்டும் கிராமப் பகுதிகளில் 600 மாணவர்களும், 533 மாணவிகளும் அடிப்படை உயர்கல்வி பெற இலவச வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் கல்வி தரத்தில் மிகவும் பின்தங்கிய பெரம்பலூர் மாவட்ட இளைஞர்களுக்கு எதிர்காலத்தில் வேலைவாய்ப்புகள் பெற்றிடவும் சிறந்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனை அனைத்து தரப்பு பொதுமக்களும் பெற்றோர்களும் அரசின் நல்ல செயல்பாடாக வரவேற்று அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

**– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
பெரம்பலூர்

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் தீபாவளி போனஸ் மற்றும் கருணைத்தொகை வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, தமிழக அரசு கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, 2005–2006 ஆம் ஆண்டிற்கு தீபாவளி போனஸ் 8.33 சதவிகிதம் மற்றும் 1.67 சதவிகிதம் கருணைத் தொகையாகவும், உச்சவரம்பாக ரூ.3,000/–ஐ வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இதன்படி 1,069 கோ–ஆப்டெக்ஸ் பணியாளர்கள் பயனடைவார்கள். கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் பணியாளர்கள் அனைவரும் தீபாவளி போனஸ் வழங்கியதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுக்கும் தங்களது நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்கள். □



## கோ-ஆப்டெக்ஸ் நிறுவன பணியாளர்களுக்கு தீபாவளி போனஸ் மற்றும் கருணைத்தொகை

அறிந்து கொள்வோம் அறிவியல்

## பாலூட்டிகள்


குட்டி போட்டு பால் கொடுத்து வளர்க்கும் விலங்குகளை பாலூட்டிகள் என அழைக்கிறோம். மனிதர்களாகிய நாமும் பாலூட்டிகளே. பாலூட்டிகளுக்கு உடலில் முடிகள் காணப்படும். பாலூட்டிகளின் இரத்தம் சற்று சூடாக (Warm blood) இருக்கும். டால்பின், திமிங்கலம் போன்றவை கடலில் வாழும் பாலூட்டிகள் ஆகும். உலகில் சுமார் 5,000 வகையான பாலூட்டிகள் இருக்கின்றன.



பாலூட்டிகள் தாவர மற்றும் இறைச்சி உணவை உண்டு வாழ்கின்றன. சில பாலூட்டிகள் பூச்சிகளை சாப்பிட்டு வாழ்கின்றன. சில வகை பாலூட்டிகள் தாவர உணவு மற்றும் இறைச்சி உணவு இரண்டையும் உண்டு வாழ்கின்றன. சில வகை பாலூட்டிகள் தாவர உணவைமட்டுமே உண்டு வாழ்பவையாகவும் உள்ளன. இதே போல சில வகை பாலூட்டிகள் இறைச்சி உணவை மட்டுமே சாப்பிட்டு வாழ்பவையாகவும் இருக்கின்றன.



குதிரைகள், மாடுகள் போன்றவை தாவரங்களை (Herbivores) மட்டுமே சாப்பிட்டு வாழும் பாலூட்டிகள் ஆகும். புலி, சிங்கம் போன்றவை இறைச்சிகளை (Cornivores) மட்டுமே சாப்பிட்டு வாழும் பாலூட்டிகள். மனிதர்கள், கரடிகள் போன்றவை தாவரம் மற்றும் இறைச்சிகள் (Omnivores) இரண்டையும் சாப்பிட்டு வாழும் பாலூட்டிகள். எறும்புத் திண்ணி போன்றவை பூச்சிகளை (In-sectivores) தின்று வாழும் பாலூட்டிகள்.



மிக வேகமான பாலூட்டி சிறுத்தை ஆகும். இவை மணிக்கு 110 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடும் ஆற்றல் கொண்டவை. தேவாங்கு எனும் பாலூட்டியே மிக மந்தமான பாலூட்டியாகும். இவை மணிக்கு ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் மட்டுமே ஓடும். பாலூட்டிகளிலேயே மிகப்பெரிய பாலூட்டி நீலத்திமிங்கலம்தான். இது கடலில் வாழும் பாலூட்டியாகும். நிலத்தில் வாழும் பாலூட்டிகளில் மிகப்பெரியது ஆப்பிரிக்க யானையாகும். ●

நீலகிரி மாவட்டத்தில்

# பொதுமக்கள் மனுக்கள் உடனுக்குடன் தீர்வு

மலைகளின் அரசி என வர்ணிக்கப்படும் நீலகிரி மாவட்டம் பல்வேறு இயற்கை வளங்களைத் தன்னகத்தே கொண்ட மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் தோடர், கோத்தர், குரும்பர், இருளர், படுகர் போன்ற பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் பெரும்பாலும் மலைப் பகுதியில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் தங்களின் தேவைகளை, அரசு மூலம் கிடைக்கக் கூடிய பயன்களைப் பெற ஆட்சியர் அலுவலகம் வந்து செல்ல பெரும் சிரமப்பட்டனர். நிலையை அறிந்த மாவட்ட நிருவாகம் பொதுமக்கள் வசதிக்காக "உங்கள் அரசு உங்கள் வீட்டு வாசலில்" என்ற திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது.

இம்மாவட்டத்தில் உள்ள பழங்குடியின மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்திட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தோடு மாவட்ட நிருவாகம் "உங்கள் அரசு உங்கள் வீட்டு வாசலில்" என்ற திட்டத்தை அறிவித்து செயல்படுத்தியுள்ளது. அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் திட்டம் செயல்படுத்தும் கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று தேவையான சேவைகளை அந்த இடத்திலேயே செய்து கொடுப்பதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் வருமானச் சான்றிதழ், பிறப்பு இறப்புச் சான்றிதழ், நில ஆவணங்களின் நகல், பட்டா மாறுதல், முதியோர் ஓய்வூதியம் ஆகிய கோரிக்கைகள் அந்த இடத்திலேயே நிறைவேற்றப்படும். இதுபோன்ற மனுக்கள் தொடர்பாக குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு உத்தரவுகளை உடனே வழங்குவதற்காக கணினியும், நில ஆவண மென்பொருளும் அந்த கிராமத்திற்குக் கொண்டு செல்லப்படுகிறது. இத்திட்டம்



முதற்கட்டமாக 13.9.2006 அன்று கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தும்மனட்டி கிராமத்தில் மாண்புமிகு கதர்வாரியத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

"உங்கள் அரசு உங்கள் வீட்டு வாசலில்" என்ற சிறப்புத் திட்டத்தின் தொடக்க நாள் அன்று பல்வேறு கோரிக்கைகள் உள்ளடக்கிய 510 மனுக்கள் பெறப்பட்டன. இம்மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டதின் பயனாக 303 மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டன.

இத்திட்டத்தினை துவக்கி வைத்த மாண்புமிகு கதர் வாரியத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் விழாவில் பேசும்போது கூறியதாவது :

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய மக்களுக்காக பல்வேறு நலத் திட்டங்களை தொலைநோக்குப் பார்வையோடு செயல்படுத்தி வருகிறார்கள். அவ்வாறு செயல்படுத்தியதின் மூலம் இம்மாவட்ட விவசாயிகளுக்காக அவர்கள் கூட்டுறவு வங்கியில் பெற்ற கடன் ரூ.101 கோடி தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது. இதன் மூலம் விவசாய பெருமக்கள் மிகவும் மகழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதேபோன்று ரூ.2க்கு ஒரு கிலோ அரிசித் திட்டம் ஏழை, எளிய தாய்மார்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. அதேபோன்று சத்துணவு சாப்பிடும் பள்ளிக் குழந்தைகள் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக வாரந்தோறும் இரண்டு முட்டைகள் வழங்கும் திட்டத்தினை அறிவித்தார். மக்களுக்காக மக்கள் நலனுக்காக ஜனநாயக முறையில் நடைபெறும் கலைஞர் ஆட்சியில் மக்கள் அனைத்து நலமும், வளமும் பெற்று வாழ இதுபோன்ற "உங்கள் அரசு உங்கள் வீட்டு வாசலில்" என்ற சிறப்புத் திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இத்திட்டம் அடுத்ததாக கல்லட்டி, மசினகுடி, கூடலூர், பந்தலூர் ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்டு பொதுமக்களுக்கு எவ்வித குறையும் இல்லை என்ற நிலையை உருவாக்க அனைத்து கிராமங்களிலும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது", இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மக்கள் நலனே முக்கியம் என்பதைக் கருத்தில் கொண்டு செயல்பட்டு வரும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசுக்கு மேலும் பெருமையும் புகழும் சேர்க்கும் வகையில் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா அவர்களின் சீரிய முயற்சியில் "உங்கள் அரசு உங்கள் வீட்டு வாசலில்" என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு மக்களின் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாவட்ட நிருவாகத்தின் சீரிய முயற்சியால் பயன்பெற்ற பொதுமக்கள் தங்களின் நன்றியை அரசுக்குத் தெரிவித்தனர் என்றால் அது மிகையாகாது.

*செய்தி—மக்கள்தொடர்பு அலுவலர்,*
*நீலகிரி மாவட்டம்.*

○ ○ ○ ○

## 38ஆவது சொல்வங்கிக் கூட்டத்தில் உருவாக்கப்பட்ட சொற்கள்

| வ.எண் | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|
| 1. | Ashtray | புகைத்தட்டம் |
| 2. | Bedlam | அமளிதுமளி |
| 3. | Bio-heritage | உயிரி மரபியம் |
| 4. | Bio-Diversity | உயிரினப் பன்மை |
| 5. | Bio-Resources | உயிரின வளம் |
| 6. | Compere | இணைப்புரையர் |
| 7. | Coupons | உரிமைச்சீட்டு, பெறுகைச்சீட்டு |
| 8. | Episode | தொடர்கண்ணி |
| 9. | Disruption | ஊறுப்பு, சீர்குலைப்பு |
| 10. | Damp - proof | ஈரக்காப்பு |
| 11. | Fool - proof | தெற்றம் |
| 12. | Frantic Search | பதைப்புத் தேடல் |
| 13. | Dampening | தணிப்பு |
| 14. | Lipstick | இதழ்ப்பூச்சு |
| 15. | Lounge | இடைக்கட்டு |

– தமிழ் வளர்ச்சித் துறை

# படமும் செய்தியும்



16.10.2006 அன்று, தலைமைச் செயலகத்தில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் **மு. கருணாநிதி** அவர்கள்
தலைமையில் 10ஆவது அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் **மு. கருணாநிதி** அவர்களை, 3.10.2006 அன்று சிங்கப்பூர் வெளியுறவுத்துறை இணைஅமைச்சர் டாக்டர் பாலாஜி சதாசிவன் அவர்கள் சந்தித்துப் பேசினார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் **மு. கருணாநிதி** அவர்களை, 26.10.2006 அன்று ஜெர்மன் நாடு –ஹேம்பர்க் மாநிலத்தின் மாநகர வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் டாக்டர் மைக்கேல் ஃபிரெடேக் அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழுவினர் சந்தித்து, ஜெர்மன் நாட்டில் உள்ள ஹேம்பர்க் மாநகருக்கும் சென்னை மாநகருக்கும் இடையே மாநகர வளர்ச்சி, குடிநீர் வசதி, கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் எரிசக்தி மேம்பாடு ஆகியவை குறித்துப் பேசினர்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் **மு. கருணாநிதி** அவர்கள் முன்னிலையில், 30.10.2006 அன்று தமிழகத்திற்கும் தெற்கு ஆஸ்திரேலியாவிற்கும் இடையே தொழில் வர்த்தக முதலீடு செய்வது குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. தெற்கு ஆஸ்திரேலிய முதல்வர் மைக்ரான் மற்றும் எத்னே லாஞ்ஜூ, ரேமண்ட் காரண்டு, ஏ.கே. தரீன், லட்சியான் பார்க்கர், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப, தொழில்துறைச் செயலாளர் திரு.சக்தி காந்ததாஸ், இ.ஆ.ப., மற்றும் டாக்டர் டி.வி. சோமநாதன் ஆகியோர் உடன் உள்ளனர்.



பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 99ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, 30.10.2006 அன்று, சென்னையில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. ஆற்காடு நா. வீராசாமி, திரு.கோ.சி. மணி, திரு. பரிதி இளம்வழுதி, திருமதி. டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா மற்றும் மாண்புமிகு மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு, வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியன், தமிழக அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு. கம்பம். பெ. செல்வேந்திரன் ஆகியோர் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 99ஆவது பிறந்தநாள் மற்றும் 44ஆவது குரு பூஜையை முன்னிட்டு, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்தில் உள்ள தேவர் நினைவிடத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மாண்புமிகு மத்திய மற்றும் மாநில அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

# அரசு வழங்கிய 2 ஏக்கர் நிலத்தில்

# குச்சிக்கிழங்கு பயிரிடும் ஏழை விவசாயி

ஏழை, எளியோர்கள் பயன்பெறும் வகையில் எண்ணற்ற பல திட்டங்களை உருவாக்கி அரசு செயல்படுத்தி வருகிறது. அரசு பொறுப்பேற்ற 100 நாட்களில் 1 கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டம், விவசாயிகளுக்கு 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் ரத்து, மாணவர்களுக்கு சத்துணவில் வாரம் இரண்டுமுறை முட்டை, திருமண நிதியுதவி ரூ.15,000 ஆக உயர்வு, கருவுற்ற தாய்மார்களுக்கு ரூ. 6,000 உதவி, 13,000 மக்கள் நலப்பணியாளர்களுக்கு மீண்டும் வேலை, முதியோர், விதவைகள், ஊனமுற்றோர், நலிந்த கலைஞர்களுக்கு உதவித் தொகை இரட்டிப்பாக உயர்வு உட்பட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்றும் நிலமற்ற ஏழை விவசாயகுடும்பங்களுக்கு 2 ஏக்கர் நிலம் தந்தை பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17 அன்றும் ஈரோடு மாவட்டத்தில் வழங்கப்பட்டன.

ஈரோடு மாவட்டத்தில் 17.9.2006 அன்று தந்தை பெரியார் பிறந்த நாளில் நிலமற்ற ஏழை விவசாய குடும்பங்களுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. இந்த 2 ஏக்கர் நிலம் பெற்ற ஏழை விவசாயிகள் இருவரை நேரில் சந்தித்து இத்திட்டம் குறித்து அவர்களிடம் பேட்டி காணப்பட்டது.



ஈரோடு வட்டம், சிவகிரி 'பி' கிராமம் பொரசமேட்டுப்புதூர் என்பதாகும். இப்பகுதியில் தென்னை செழித்தோங்கியுள்ளது. மஞ்சள் மற்றும் கரும்பு பயிரிடப்பட்டுள்ள விவசாய பூமியாகும். இங்கு வசித்து வரும் பூவாத்தாள் (வயத 47) என்பவருக்கு இரண்டு ஏக்கர் நிலம் அரசினால் வழங்கப்பட்டுள்ளது. இவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவராவார். இவர் நிலமற்ற ஏழை விவசாயக் கூலி. விவசாய நிலங்களில் களை எடுத்தல், நெல் பயிரிடுதல், நிலங்களில் கல் பொறுக்குதல் போன்ற கூலி வேலை செய்து வருகிறார். இதன் மூலம் இவருக்கு நாள்தோறும் ரூ. 30 கூலியாக கிடைக்கிறது. ஒரு மாதத்தில் இவருக்கு 15 நாட்கள் மட்டுமே கூலி வேலை கிடைக்கிறது. இவர் மட்டுமல்லாமல் இவருடைய கணவர் சண்முகம், மகன் விஜயகுமார் ஆகியோரும் விவசாய கூலி வேலை செய்து வருகின்றனர். இவருடைய மகன் +2 வரை படித்துள்ளார். வறுமையின் காரணமாக இவரும் தாய் தந்தையருக்கு துணையாக இருந்து கூலி வேலை செய்து வருகின்றனர். விவசாய கூலி வேலைக்கு சென்று வரும் இவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1500 வருமானம் கிடைக்கின்றது. இந்த குறைந்த வருமானத்தின் மூலம் குடும்பத்தை நடத்துவது என்பது சிரமமாக உள்ளதென திருமதி. பூவாத்தாள் தெரிவித்தார்.

ஆனாலும், தொடர்ந்து கூலி வேலை செய்து வருகின்றனர். இந்நிலையில் நிலமற்ற ஏழை விவசாய குடும்பங்களுக்கு அரசு நிலம் வழங்குகின்றது என்பதை கேள்வியுற்று வருவாய்துறை அலுவலர்களை அணுகியுள்ளனர். நிலமற்ற ஏழை விவசாயிகள் என்பதால் இவர்கள் குடியிருப்பிற்கு அருகாமையில் 2 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிலப்பட்டா 17.9.2006 அன்று ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு மத்திய, மாநில அமைச்சர்களால் வழங்கப்பட்டது.

2 ஏக்கர் நிலம் பெற்ற திருமதி. பூவாத்தாள் தெரிவித்ததாவது:—

எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலத்தில் உள்ள கற்கள் அகற்றப்பட்டு சமன்படுத்தப்பட்டுள்ளது. இதில் ரோஸ் என்னும் ரக குச்சிக்கிழங்கு பயிர் செய்யப்பட உள்ளது. இப்பயிருக்குத் தேவையான தண்ணீர் பக்கத்து நிலத்துக்காரரிடமிருந்து பெற்று விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும். குச்சிக்கிழங்கு 8 முதல் 10 மாத பயிராகும் இதற்கு மிதமான தணணீர் தேவை. குச்சிக்கிழங்கு போடுவதன் மூலம் உழவு செலவு, உரச்செலவு போன்றவை ஏக்கருக்கு ரூ. 8,000 செலவாகும். 2 ஏக்கருக்கு ரூ.16,000 செலவாகும். இதன் மூலம் 16 டன் கிழங்கு அறுவடை செய்யலாம். தற்போது 1 டன் கிழங்கு ரூ.2,000 முதல் ரூ.2,500 வரை விற்பனை செய்யப்படுகிறது. 2 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்படும் குச்சிக்கிழங்கு ரூ.32,000—க்கு விற்பனையாகும். இதில் குச்சிக்கிழங்கு பயிர் செய்வதற்காக செலவிடப்படும் தொகை ரூ.16,000 போக மீதம் ரூ. 16,000 வருமானமாக கிடைக்கும். இதன் மூலம் எங்கள் குடும்பம் வளர்ச்சி அடைய வாய்ப்பு ஏற்படும். நாங்கள் இதுவரை நிலமில்லாமல் இருந்து கூலி வேலை செய்து வந்தோம்.

2 ஏக்கர் நிலம் வழங்கும் திட்டம் ஏழை எளியவர்கள் பயன்படும் திட்டமாகும். இந்தத் திட்டத்தினால் எங்களுக்கு சொந்தமாக நிலம் கிடைத்துள்ளது. அரசு மூலம் நிலம் கிடைக்கும் என நாங்கள் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை. நாங்கள் எங்களுடைய நிலத்தில் நன்றாக பயிர் செய்து பிழைத்துக் கொள்வோம். எங்களின் வாழ்வு வளமடைய நிலம் வழங்கிய அரசுக்கும், முதல்வருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றனர் இவரது குடும்பத்தினர்.


இதேபோன்று, புரசைமேட்டுப்புதூரைச் சேர்ந்த மற்றொரு ஏழை விவசாயியான கண்ணம்மாள் (வயது 45) என்பவருக்கும் 2 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. இவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர். இவருக்கு கணவர் மற்றும் 2 மகன்கள் உள்ளனர். இவர் நிலமில்லாத ஏழை விவசாய கூலி தொழிலாளி, தினம் கூலி வேலைக்கு சென்று வருகிறார். விவசாய கூலி வேலை மூலம் மாதந்தோறும் இவருக்கு ரூ.1500 வரை கிடைக்கிறது. இவர் மிகவும் சிரமப்பட்டு வந்துள்ளார். தற்போது இவருக்கு அரசு 2 ஏக்கர் நிலம் வழங்கியுள்ளது. இந்த தரிசு நிலம் இவருடைய பராமரிப்பில் நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது. தற்போது



இந்த நிலம் இவருக்கு சொந்தமாகியுள்ளது. இதில் குச்சிக்கிழங்கு பயிரிட்டுள்ளார். இவருடைய நிலத்திற்கு தண்ணீர் பிரச்சினையில்லை. பக்கத்து நிலத்துக்காரரிடமிருந்து தண்ணீர் பெற்று விவசாயம் செய்கிறார். இவருக்கு குச்சிக்கிழங்கு பயிரிடுதல் மூலம் விவசாய செலவினங்கள் போக வருடத்திற்கு ரூ.10,000 முதல் ரூ. 15,000 வரை வருமானம் கிடைக்கிறது. இது தவிர இவரும் இவரது குடும்பத்தினரும் கூலி வேலைக்குச் சென்று வருகின்றார்கள். கூலி வேலை செய்து பிழைத்து வந்த எங்களுக்கு அரசாங்கம் 2 ஏக்கர் நிலத்தை வழங்கி சொந்தமாக்கி உள்ளது என்று கூறுகிறார். இந்நிலத்தில் நல்லமுறையில் விவசாயம் செய்து மேன்மைக்கு வருவோம் என்கிறார். பல வருடங்களாகச் சிரமப்பட்டு வந்த எங்களுக்கு அரசு நல்ல சலுகைகளை வழங்கியுள்ளது. இந்நிலத்தில் விவசாயம் செய்து வருமானத்தை பெருக்கிடுவோம். விவசாய கூலியாக இருந்த எங்களை அரசு, நிலத்துக்கு சொந்தகாரராக ஆக்கி பெருமைப்படுத்தியுள்ளது. சமூகத்தில் நல்ல அந்தஸ்தை அரசு உருவாக்கி தந்துள்ளது. இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம் என்று மனம் நெகிழ சொன்னார் திருமதி. கண்ணம்மாள்.

2 ஏக்கர் நிலம் வழங்கும் திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டத்தில் 430 நிலமற்ற ஏழை விவசாய குடும்பங்களுக்கு 561.89 ஏக்கர் நிலம் 17.9.2006 அன்று நடைபெற்ற அரசு விழாவில் வழங்கப்பட்டது.

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**ஈரோடு மாவட்டம்.**



குடும்பத்தில்
அனைவருக்கும்
கோ-ஆப்டெக்ஸின் ஜாலமே
சிறப்புத் தள்ளுபடி
30%
• பட்டு மற்றும் பருத்திப் புடவைகள் • வேட்டிகள் • லுங்கிகள்
• பருத்தி சுடிதார்கள் • படுக்கை விரிப்புகள் • துண்டுகள்
தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

தமிழரசு
R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/06-08
TN/PMG(CCR) WPP-518/06-08




சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு
மற்றும் கட்டுப்பாடு சங்கம்
மயிலாப்பூர், சென்னை – 4

மேலும் விபரங்களுக்கு இலவச தொலைபேசி சேவையைத் தொடர்பு கொள்ளுங்கள். 1097